உ

முருகன் துணை.

அகத்திய மகாமுனிவர்

புலத்திய முனிவருக்குபதேசித்த

அநுபோக

# மாட்டு வைத்தியம்

## கடைக்காண்டம்



மதுரை புக்ஷாப்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

**ம. கிருஷ்ண பிள்ளையவர்களால்**

பிரசுரிக்கப்பெற்றது.

ட்] 1935 [விலை ரூ. 0-12-0

உ

முருகன் துணை

அகத்திய மகாமுனிவர்

புலத்திய முனிவருக்குபதேசித்த

அனுபோக

# மாட்டு வைத்தியம்

## கடைக் காண்டம்

மதுரை, தம்புசாமி நாயுடு அவர்கள்

குமாரர்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

சேகரித்து சீர்திருத்தப்பெற்று

மதுரை புக்ஷாப்

பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு

மு. கிருஷ்ண பிள்ளையவர்களால்

பிரசுரிக்கப்பெற்றது.

ரிஜிஸ்தர் காப்பிரைட்] 1935 [விலை ரூ. 0-12-0

# நூன்முகம்.

'பாண்டிநாடே பழம் பதியாக' என்று ஸ்ரீமாணிக்கவாசகர் அருளியபடி உலகில் பாண்டி நாடாகிய இத்தமிழ் நாடு மிகவும் பழமையான ஓர் நாடு.

அகரமுத லெழுத்தெல்லாம்
ஆதிபகவன் முதற்றே யுலகு என்றபடி கடவுள் உலகத்திற்கெல்லாம் எப்படி மூலபுருஷனோ அதைப்போல் பல்வேறு பாஷைகளுக்கெல்லாம் தமிழே மூல பாஷை என்று கூறுவது மிகையாகாது. தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும், மற்ற நாடுகளுக்கும் பாஷைகளுக்கும் இல்லாத சிறப்புகள் அநேகமுள. அவற்றில் முதன்மையாக நம் நாட்டு சித்தர்களே நமக்கோர் சிறப்பு எனலாம். இக்காலத்தில் நாகரிகத்தில் சிறந்த மேல்நாட்டார்கள், நாகரிகம் இன்னதென் றுணராத காலத்திலேயே நம் நாட்டு சித்தர்கள் எல்லா இலக்கணங்களிலும் தேற்சி பெற்று அதைப் பாமரர்களுக்கு உபதேசித்து வந்தனர். முடிவேந்தர்களும், புலவர்களும், அந்தணர் முதலிய யாவர்களாலும் மிகவும் போற்றப் பெற்று தமிழ் நாட்டில் தெய்வ அம்சங்களாக தோன்றிய இச் சித்தர்கள் யோகம், ஞானம், வாதம், வைத்தியம், சோதிடம், மந்திரம் முதலிய அரிய பெரிய தத்துவங்களையும், கலைஞானங்களையும் ஆராய்ந்து உண்மையுணர்ந்து பலரும் பயனடையும்படி நூறாயிரக்கணக்கான பாடல்களை திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

ஜீவகாருண்யமே சிறந்த தருமம் என்று கருதப்படும் பொழுது நம் உற்பத்தி முதல் நிரியாண வரை பெற்ற தாயைப் போல் நமக்கு பால் கொடுத்து நமது வாழ்க்கையை சுகமாகவும் இன்பகரமாகவும் செய்து வரும் தாயினும் சிறந்த பசுவை நாம் நம் கண்ணின் மணியைப்போல் காப்பது நம் கடமை யன்றோ. தாயற்ற குழந்தைக்குத் தாயாகவும், நோயாளிக்கு ஜீவாதாரமான உணவைக் கொடுக்கக்கூடியதாகவும், வீட்டிற்கு லக்ஷ்மியாகவும் இருந்து வருவது பசுவன்றோ. காமதேனுவாகிய இப்பசுவைக் காப்பது நாம் செய்யும் சிறந்த தருமங்களில் ஒன்றானதால் சித்தர்களில் சிறந்த

அகத்தியமா முனிவர் புலத்திய முனிவருக்கு உபதேசித்த மாட்டு வைத்தியத்தை ஏழு வருட காலங்கள் பற்பல விடங்களிற் சென்று எட்டுப் பிரதிகளை யெல்லாம் ஒருங்கு சேர்த்து "அனுபோக மாட்டு வைத்தியம்" என்னும் இப்புத்தக வாயிலாக நான் வெளியிடத் துணிந்தேன்.

இப்புத்தகத்தில் குணம்குறி, நிறம், சுழி, சுத்தம், சுபாவம் அதற்குறும் பிணியின் குணங்குறி செய்கை முதலியவற்ருல் இப்பிணி யின்னதென உணர்ந்து அதற்குரிய அவிழ்தங்களும் அதனைப் பிரயோகிக்கும் முறைகளும் அதற் குபகரணமான சூட்டினங்களும் மிகத் தெளிவாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

பசு மாட்டிற்கு உண்டாகிய சில கொடிய நோய்கள் அப்பசுவின் பாலை அருந்தும் மானிடர்களுக்கும் உண்டாகும் என்று இக்காலத்து ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகின்றனர். ஆகையால் ஒவ்வொருவரும் மாட்டின் நோயைக் கண்டு சிகிச்சை செய்யும் திறமையுள்ளவர்களாக வேண்டுமென்று கருதியே சென்னை பி. நா. சி. பிரதர்ஸ் ஏஜண்டு மு. கிருஷ்ண பிள்ளை அவர்கள் இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிட முன் வந்ததை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

இங்ஙனம்,

☞ த. குப்புசாமி நாயுடு,

வாத வைத்ய யோகஞான சோதிட

நூலாராய்ச்சிப் புலவர்,

மதுரை.

உ

# மாட்டு வயித்தியம் அட்டவணை

## கடைக் காண்டம்


| விஷயம் | பக்கம் நிர். | விஷயம் | பக்கம் நிர். |
|---|---|---|---|
| அகட்டு நோய் | 84 | கழிச்சல் வெதுப்பு | 38 |
| அடமழை வெதுப்பு | 47 | காத்தடைப்பன் | 19 |
| அடைப்பன் | 1 | கால்வலிப்பு | 59 |
| அம்மணிச்சிலந்தி | 74 | காற்படுவன் | 56 |
| அழல்வெதுப்பு | 43 | குச்சிருதற்கநோய் | 83 |
| அனல் வெக்கை | 77 | குடல்வற்றி நோய் | 84 |
| ஆளையுமாகாசத்தையும் பார்க்கு [மாட்டுக்கு | 88 | குடல் வெதுப்பு | 41 |
| இரத்தச் சிலந்தி | 71 | குடற்படுவன் | 53 |
| இரத்த வெதுப்பு | 45 | குதிரைச் சிலந்தி | 73 |
| இரலிப்பன்றி நோய் | 75 | குதிரைப்படுவன் | 54 |
| ஈரலடி நோய் | 80 | குதிரை வலிப்பு | 61 |
| ஈளை மூக்கடைப்பன் | 14 | குரட்டடைப்பன் | 29 |
| உடல்வற்றி நோய் | 83 | குரவளைத்தாக்கன் | 65 |
| உதறிப்பன்றி நோய் | 75 | குருத்துச் சிலந்தி | 75 |
| உதிரச் சிலந்தி | 74 | குழிப்படுவன் | 54 |
| உதிரவெதுப்பு | 47 | கூடக்குறிநோய் | 84 |
| உதிரவெப்பு மூக்கடைப்பன் | 14 | கெற்பச்சிலந்தி | 73 |
| உரோமக்கால் நோய் | 79 | கொடுவலிப்பு | 61 |
| உழவில் மெலிந்த மாட்டுக்கு | 82 | கொட்டடைப்பன் | 11 |
| உழவு வலிப்பு | 80 | கோதடைப்பன் | 27 |
| உழலை வெதுப்பு | 51 | சகல அடைப்பனுக்கும்மருந்து | 31 |
| உள்ளடைப்பன் | 31 | சகல பிணியும் அகல மருந்து | 89 |
| ஊச்சிலந்தி | 72 | சங்கடைப்பன் | 17 |
| ஊதடைப்பன் | 24 | சதையடைப்பன் | 18 |
| எருக்கல் நோய் | 81 | சந்தடைப்பன் | 16 |
| எருவலிப்பு | 65 | சரட்டடைப்பன் | 29 |
| எலும்புருக்கு | 81 | சாறிவெக்கை | 79 |
| ஒழுக்குவெதுப்பு | 39 | சித்தச்சிதைவு நோய் | 85 |
| கடவுள் வணக்கம் | 1 | சில்வெதுப்பு | 41 |
| கடுவெதுப்பு | 38 | சினவாரித்தாக்கன் | 66 |
| கண்டங்கத்திரிக்காய் வேது | 87 | சீதக்குடல்வற்றி நோய் | 84 |
| கண்டவலிப்பு | 60 | சீதவெக்கை | 78 |
| கதவடைப்பன் | 20 | சீத வெதுப்பு | 45 |
| கந்துகவலிப்பு | 80 | சீதள வெதுப்பு | 42 |
| கல்லடைப்பன் | 19 | சுக்கைவெக்கை | 77 |
| கல்விருட்டி நோய் | 79 | | |

## கடைக் காண்டம் அட்டவணை.



| விஷயம் | பக்கம் நிர். | விஷயம் | பக்கம் நிர். |
|---|---|---|---|
| சுழல் வலிப்பு | 80 | புரவிநோய் | 85 |
| சுழல் வெக்கை | 78 | புலிமுகச்சிலந்தி | 73 |
| சுழற்சி நோய் | 82 | பூதநோய் | 85 |
| செருக்கடைப்பன் | 28 | பெருவலிப்பு | 58 |
| சோரியடைப்பன் | 28 | பெருவெக்கை | 78 |
| தடுமாற்ற நோய் | 83 | பெருவெதுப்பு | 39 |
| தவளை மூக்கடைப்பன் | 17 | மந்தடைப்பன் | 17 |
| தாக்கடைப்பன் | 15 | மந்தவெதுப்பு | 43 |
| தாளை நோய் | 75 | மந்திநோய் | 76 |
| திரட்டடைப்பன் | 29 | மந்திரம் [கூடியநாள் | 90 |
| தூங்குச்சிலந்தி | 74 | மாடுகொள்ளவுங் கொடுக்கவுங் | 87 |
| தூங்குப்படுவன் | 55 | மாடுவாங்கக்கூடா நாள் | 86 |
| தெக்கணநோய் | 81 | மாந்தநோய் | 76 |
| தேளேறுமுடம் | 32 | முகப்படுவன் | 52 |
| நடுக்குநோய் | 85 | முக்கடைப்பன் | 11 |
| நரம்புவலிப்பு | 59 | முசல்வலிப்பு | 64 |
| நனவாரித்தாக்கன் | 66 | முட்டடைப்பன் | 8 |
| நாக்கடைப்பன் | 15 | முனிவெக்கை | 79 |
| நாக்குமிடிநோய் | 85 | முன்னடைப்பன் | 3 |
| நாய்வலிப்பு | 63 | மூக்கடைப்பன் | 11 |
| நாரைப்படுவன் | 55 | மூக்குத்தண்டடைப்பன் | 14 |
| நிமிர்வாதம் | 81 | மூலவெதுப்பு | 40 |
| நீரடைப்பன் | 23 | யானைச்சிலந்தி | 72 |
| நீர்ப்படுவன் | 54 | யானைப்படுவன் | 53 |
| நெஞ்சடைப்பன் | 21 | யானைவலிப்பு | 62 |
| நெஞ்சாவிகொண்டமாட்டுக்கு | 83 | வரட்டடைப்பன் | 30 |
| நெளியடைப்பன் | 24 | வரட்டுவெக்கை | 78 |
| நோயணுகாவுபாயம் | 89 | வலிப்பு | 57 |
| படுவன் | 52 | வளைகூனிவலிப்பு | 60 |
| பன்றிக்குருகைநோய் | 70 | வாணிவடிநோய் | 81 |
| பன்றித்தாக்கன் | 67 | வாயடைப்பன் | 28 |
| பன்றிநோய் | 67 | வாயைச் சுத்தஞ் செய்தல் | 86 |
| பன்றிநோய்வருமுன் தடுக்கு | 70 | வாய்ப்படுவன் | 56 |
| பன்றிமுட்டிநோய் [முபாயம் | 71 | விரட்டடைப்பன் | 30 |
| பாதகவளைவு நோய் | 83 | விலாவெக்கை | 79 |
| பாயும்மாட்டைப்பாயாமற்செய் | 88 | வெக்கைநோய் | 76 |
| பிறளிவெதுப்பு [ய | 46 | வெதுப்பு | 34 |
| பின்னடைப்பன் | 5 | வெள்ளை வெக்கை | 79 |

ஓம் கணபதி துணை.

பொதிகைமா மலை

அகத்திய மகா முனிவர்

புலத்தியருக்குபதேசித்த

# மாட்டு வயித்தியம்,

## கடைக் காண்டம்.

### கடவுள் வணக்கம்.

காப்பு.

உருவாகி யருவாகி யுளதிலது மாகி
ஒளியாகி யொளியிலெழுஞ் சுடரு மாகிக்
கருவாகிக் கருவளருஞ் சொரூப மாகிக்
கதியாகிக் கதிகடந்த வகண்ட மாகி
மருவாகி மருவிலுறு மணம தாகி
மனமாகி மனம்வாக்குக் கெட்டா தாகிக்
குருவாகிக் குருவருளுஞ் சொல்ல தாகிக்
குவலயமும் பிரலயமு மானோன் காப்பே. (1)

### அடைப்பன்.

காப்பாக முதற்காண்டஞ் சொன்னே னத்திற்
கழறுத செய்கையெலாம் நடுக்காண் டத்தில்
மூப்பாக வுரைத்திட்டே னுரையா தெல்லாம்
மொழிகுவேன் கடைக்காண்ட மிதனி லப்பா
கோப்பாக வருமடைப்பன் நோயின் செய்கை
கூறுவே னிரண்டுவிலாத் திரண்டு வீங்கும்
தாப்பாகச் சாணமது மிரத்தம் போலத்
தான்போடுஞ் சுகமாக வகையைக் கேளே. (2)

## இதுவுமது.

கேளப்பா புலத்தியனே தேசிச் சாற்றிற்
கெடியான பெருங்காயந் தணையு ரைத்து
வாளப்பா யிளவெந்நீர் தனிற்க லக்கி
வளமாகக் கொடுத்துப்பின் வசம்பு சுக்கு
வேளப்பா தும்பையிலைச் சேர்த்தி டித்து
வேண்டுசிறு நீர்கலக்கி நசிய மிட்டு
கோளப்பா வில்லாது மேனி முற்றுங்
கூசாமற் றுவாலைமுத் தினமும் போடே. (3)

## இதுவுமது.

போடவே சுகமாகு மிலுப்ப ரைப்பைப்
பொடிசெய்து காடியதிற் கொடுக்கத் தீரும்
நாடவே யின்னமொரு செய்கை தன்னை
நவிலவே முகங்கறுக்கும் நிலத்தை முட்டும்
தேடவே யுடல்வீங்கு மசந்து நிற்கும்
திடமாக நீர்விடுக்குந் திரு தற்கு
கூடவே சிறுகீரைக் குப்பை மேனி
கூறுந்தை வேளைவெங் காயஞ் சுக்கே. (4)

## இதுவுமது.

சுக்குவெண் பூடுமிள குடன் வசம்பு
துவைத்துச்சீ லையிற்கட்டி நசியம் பண்ணி
முக்கியமாங் குமட்டியிலைக் கொழுஞ்சியிலை யோடு
முறையாங்கீழ்க் காய்நெல்லி யிலையுங் கூட்டி
பக்குவமாங் காடிவிட் டிடித்தே யூட்டிப்
பாங்கான வெந்நீரைக் குடிக்கக் காட்டி
தக்கபசுக் கிடதுபுறங் காளைக் காணல்
தவறாது வலதுபுறஞ் சூடு போடே. (5)

## இதுவுமது.

போட்டிடவே நலமாகு மின்னோர் செய்கை
புகலவே திகைத்துநிற்கு முடல்ந டுங்கும்
தாட்டிகமாய் நீர்விடுக்குந் தீரு தற்கு
தக்கவெற் றிலைகொன்றை யிலைமாங்கா யளவு



நாட்டியரைத் திளவெங்நீர் தனிற்க லக்கி
நன்ருகக் கொடுத்திடது விலாவிற் சூடு
தீட்டிடவே குணமாகு மின்ஞேர் செய்கை
செப்பநின்று நின்றிளைக்குஞ் செருமும் பாரே. (6)

## இதுவுமது.

பார்க்கநிலே தடுமாறுஞ் சாந்த மாகப்
பகருவெண் பூடுவெங் தயம்வ சம்பு
சேர்க்கக்கோ டங்கிழங்கு வகையொன் றுக்கு
செப்புபல மொன்றரைத்துக் கவள மிட்டு
மார்க்கநெருஞ் சிச்சீந்திக் கொழுந்தி ரண்டும்
வழுத்துங்கொல் லங்கோவைக் கிழங்கி ஞேடு
தீர்க்கவே லிப்பருத்தி வேருந் தட்டி
செவிமூக்கில் நசியமிட் டிடநன் ருமே. (7)

## முன்னடைப்பன்.

நன்றியுறு முன்னடைப்பன் செய்கை சொல்வேன்
நவிலிரண்டு முன்னங்கால் தெத்தி வைக்கும்
குன்றிபின்னங் காலிரண்டும் நடுக்க முண்டாம்
குணமின்றித் திகைதிகைக்கு மூக்கும் வேர்க்கும்
வென்றியசைப் போடாது யிரைதின் ஞது
விலகமழுக் காரைத்தோ விழுப்ப ரைப்பு
கன்றிடா தேசிக்கா யளவ ரைத்து
கணக்காக வொருபடிசா ராயம் விட்டே. (8)

## இதுவுமது.

நெஞ்சில்



விட்டதனைக் கொடுத்துப்பின் மிளகு பூடும்
மிகவரைத்துப் பேய்ப்பீர்க்கின் சாறுசிறு நீரும்
திட்டமுறக் கலக்கிவடி கட்டிக்கண் மூக்கில்
திடமாக நசியமிட்டுத் துவாலே போட்டு
இட்டிடுவா யிடதுவிலா நெஞ்சிற் சூடு
எர்க்கையாம் வேறுவகை பின்னுஞ் சொல்வேன்
முட்டமணத் தக்காளி கரிய நொச்சி
மொழியுமா டாதோடை யிவற்றின் சாறே.



இடது விலா

## இதுவுமது.

சாறவே வகைக்குக்காற் படியெ டுத்து
தனிவசம்பு சீரகம்வெள் ளுள்ளி யோமம்
தேறவே நெத்திலிச்*சம்பைவ கைக்குத்
திகழ்பலமொன் றுயரைத்துச் சேரப் போட்டு
மீறவே கொடுக்கநன்று மின்ன மொன்று
வெள்ளுள்ளி வசம்போமஞ் சுக்கி னேடு
ஊறவே வகைவகைக்குப் பலம தொன் று
உற்றமஞ்ச ணத்திதுளிர்ப் பிடியும் நான்கே. (10)

## இதுவுமது

பிடியரைத்துக் காடியதிற் கலக்கி யூட்டப்
பிணியகலும் மற்றுமொரு செய்கை சொல்வேன்
துடிவயிறு பொறுமிதிகை திகைத்து நிற்கும்
துலங்குநாற் காலதுவுந் தளர்வுண் டாகும்
படியில்நீர் விடுஞ்செவியுந் தாழுந் தீர
பகரவே சரக்கொன்றை யிலையும்வெற் றிலையும்
கடியமழுக் காரைத்தோல் வகைவ கைக்கு
கண்டுமாங் காயளவா யரைத்தெ டுத்தே. (11)

## இதுவுமது



எடுத்துமொரு படிவெந்நீர் தனிற்க லக்கி
இசைந்தூட்டி யிடதுவிலாச் சூடு போட
விடுத்திடுமிப் பிணியதுவு மின்ன மொன்று
விளம்புவேன் மிளகுசுக்கு வெள்ளைப் பூண்டு
தொடுத்துவகைக் கொருபலந்திப் பிலிப லங்கால்
தொல்வசம்பு பலமரைக்காற் காயமா காணி
அடுத்தரைத்து வைத்துவெள் ளறுகுதை வேளை
அருங்குப்பை மேனிவகைக் குப்பிடிய தொன்றே. (12)

## இதுவுமது



ஒன்றாக விடித்துமுன் மருந்துஞ் சேர்த்து
உறவாகக் கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
நன்றாக விட துவிலாச் சூடு போட
நலமாக யின்னமொரு செய்கை சொல்வேன்

---

*சம்பை—கருவாடு.

குன்றுத முன்னங்கால் நடுவே வீங்கும்
குணமின்றித் திகரொடுக்குந் தீரு தற்கு
கன்றுத வோமமொரு பலம ரைத்து
கடுங்கோழி யவரையரைப் படியாஞ் சாறே. (13)

## இதுவுமது.

சாறதனிற் கலக்கியே கொடுத்துப் பின்பு
தக்கவெங் நீர்காட்டச் சுகம தாகும்
தேறவறு பதுநாழி யிடைவி டாமற்
திகரொடுக்கு மதுதீர மிளகுபல மொன்று
கூறநன் ஞரிவேர்ப் பலமி ரண்டு
குற்றமற்ற பெருந்தும்பை சங்கங் குப்பி
மீறவிரண் டிலைவகைக்குப் பிடிதா னென்று
விரைந்தரைத்து நெய்விட்டும் பிசைந்து மூட்டே. (14)

## இதுவுமது

ஊட்டிப்பின் வெள்ளாட்டுப் புளுக்கை யோடு
ஓங்குபுத்து மண்சேர்த்துக் கொதிக்க வைத்து
தாட்டிகமா முடம்பெங்கும் பூசத் தீரும்
தநயனே யின்னமொரு செய்கை சொல்வேன்
நாட்டியநாற் கால்நடுங்கும் நெஞ்சு வீங்கும்
நாடியே மண்கவ்வுங் கதறுந் தீர
தேட்டமுள நெத்திலிச்சம் பைய ரைத்து
திகழுங்கா டியிற்கலக்கிக் கொடுக்க நன்றே. (15)

## பின்னடைப்பன்.

நன்றிகுரிஞ் சாபருத்தி யிலைய ரைத்து
நவிலந்த மாட்டினீ ரதிற்க லக்கி
வென்றியுறக் கொடுத்துவிலா வலது பக்கம்
விரைவாகச் சூடிடவே நோயுந் தீரும்
கன்றிவரும் பின்னடைப்பன் செய்கை சொல்வேன்
கடைக்கண்ணில் நீர்வடியுங் குழிய தாகும்
ஒன்றிப்பின் றொடைபவன வாயும் வீங்கும்
உடம்புசுடும் பதந்தூக்கு மிரைதின் ஞதே. (16)

## இதுவுமது.



தின்னவே வெண்பூண்டு முருங்கப் பட்டை
செப்பவே வகைக்குமாங் காயைப் போலும்
துன்னவசம் பெலுமிச்சங் காயைப் போலும்
சூட்டியரைத் தொருபடிகா டியிற்க லக்கி
முன்னமே கொடுத்துமிரு விலாவிற் சூடு
முக்கியமா யிட்டிடநோய் சாந்த மாகும்
சொன்னதன்றி யின்னமொரு செய்கை சொல்வேன்.
துரிதமாய்ப் பின்னங்கால் நடைகூ டாதே. (17)

## இதுவுமது.

கூடாது மலசலமு மிரங்கி டாது
குணமான வயறதிலே வலியுண் டாகும்
வாடாது படுத்தெழுந்து படுக்குந் தீர
மஞ்சளக்கி ராகாரங் கடுகுவகைக் கரையாம்
ஓடாது மிளகாய்கஸ் தூரி மஞ்சள்
ஓமமதும் வகைக்கொன்று மிளகு சுக்கு
நாடாது வெண்பூண்டு வகைக்கி ரண்டு
நற்காய மரைக்காற்றிப் பிலியுங் காலே. (18)

## இதுவுமது.



காலாகு மிவையெல்லாம் பலம தாகக்
கருதிடுவா யெருக்கலம்பூப் பிடிய தொன்று
மேலாமிச் சரக்கனைத்துஞ் சேர்த்தி டித்து
வேண்டுஞ்சா ராயம்விட்டுப் பிசைந்து மூட்டி
கோலாகா திடதுகட வாயிற் சூடு
குற்றமறப் போட்டிடுவா யினியோர் செய்கை
தோலான வயிறாது முடலும் வீங்கும்
தோன்றுமிரை தின்னாது படுக்கும் பாரே. (19)

## இதுவுமது

பார்க்கநல மாவதற்குக் கடுக்காய்த் தோடு
பண்புகளிப் பாக்குவகைக் குப்பலம தொன்று
கோர்க்கையா யரைத்துக்கற் றாழஞ் சோறு
குணமாகக் கழுவித்தேங் காயைப் போல

தீர்க்கவெங்நீர் நாலுபடி தனிற்க லக்கி
　　தீவிரமாய்க் கொடுத்துநல் லெண்ணெய் கையிற்
சேர்க்கையாய்த் தான்றடவி பவன வாய்க்குள்
　　செலுத்தியெரு வெடுத்துப்பின் வெங்நீர் காட்டே. (20)

## இதுவுமது



காட்டியே யிடதுவிலாச் சூடு போட
　　கணத்தநோ யதுவிலகு மின்ன மொன்று
தாட்டிகவெண் பூடதுவும் பலம தொன்று
　　தனிவசம்பு பலமரையாங் குப்பை மேனி
கூட்டிமணத் தக்காளி கோழியெனு மவரை
　　குணமாமுவ் விலேவகைக்குப் பிடிய தொன்று
மேட்டிமையா யரைத்துவெங் நீர்க லக்கி
　　விரைவாகக் கொடுத்திடவே நோயும் போமே. (21)

## இதுவுமது

போமப்பா யின்னமொரு செய்கை கேளு
　　புகல்சாணம் போடாமல் நீர்வி டுக்கும்
தாமப்பா கண்சிவக்கும் பீளை சாடும்
　　தக்கநீர் வடிந்துபேய் முகமாந் தீர
நாமப்பா கொழிஞ்சிபெருந் தும்பை யோடு
　　நற்காரை நெருஞ்சிநா விலேயைத் தானும்
காமப்பா கடுகுசேர்த் திடித்து மோரிற்
　　கலக்கியே கொடுத்துவல விலாவிற் சூடே. (22)



## இதுவுமது.

சூடதுவுஞ் சுட்டிடவே சுகமதாகும்
　　சொல்லுவே னின்னமொரு வகைதா னப்பா
பாடவே கடுகுசுக்கு வகைவ கைக்குப்
　　பலமொன்று பேய்க்குமட்டி கொழிஞ்சி நொச்சி
தேடவே காரையிவ் விலேவ கைக்குத்
　　திடமான பிடிமூன்று மரைத்து மோரிற்
கூடவே கொடுத்திடது விலாவிற் சூடு
　　குறிப்பாகப் போட்டவுடன் சுகமுண் டாமே. (23)



## இதுவுமது.

உண்டாகு மின்னுமொரு செய்கை சொல்வேன்
உற்றபின்னந் துடைபவன வாயும் வீங்கும்
வண்டாங்கண் ணீர்வடியு மிரைதின் னாது
வயிறூதுந் தீருதற்குக் கடுக்காய்த் தோலும்
கொண்டாடுங் களிப்பாக்குஞ் சேர்த்த ரைத்து
கூறுகற் றாழஞ்சோ றளவு தேங்காய்
பண்டான நாலுபடி வெந்நீர் தன்னில்
பாங்காகக் கலக்கிநீ யூட்டு வாயே. (24)

## முட்டடைப்பன்.

ஊட்டிப்பின் னிடதுவிலாச் சூடு போட
ஓங்குபிணி நீங்குமுட் டடைப்பன் செய்கை
கோட்டியாய்த் திட்டுத்திட் டென்று முக்கும்
கூசிப்பின் பாராது திகா லுண்டாம்
போட்டிகொஞ்சம் போதுசென்றாற் குளிரும் நாக்கு
புகலதற்கு மிளகைமென்று வாய்கண் காது
கேட்டிடுவாய் பவனவா யதிலு மூதி
கிளறுசெருப் படியிலையைத் தானி டித்தே. (25)



## இதுவுமது.

இடித்துச்சா றெடுத்ததனை யுடல மெங்கும்
இசைவாகத் துவாலையிட்டுக் காட்டந் தன்னிற்
பிடித்தெரியும் பிரேதத்தின் மூட்டந் தன்னைப்
பிரிக்குமுன் னஸ்தியுட னிருக்கும் சாம்பல்
தடித்ததனைப் பெருமாங்கா யளவெ டுத்து
சாராயம் படியரையிற் கலக்கி யூட்டி
வெடித்தவிள வெந்நீரைக் குடிக்கக் காட்டி
விலாவிரண்டும் நெஞ்சதிலுஞ் சூடு போடே. (26)

நெஞ்சு

இரு விலா

## இதுவுமது.

போடுப்பு மிளகுவெற் றிலையு மென்று
பொருந்தவே மூக்கதனி லூதிப் பின்பு
நாடுமிள காய்வத்தற் பலம தொன்று
நவிலிலுப்பைப் பிண்ணாக்கு மரைப் பலந்தான்

தேடுகடல் நுரைபலமுங் கால தாகும்
சிறுநீர்காற் படியதனி லரைத்துச் சேர்த்து
நீடுபுக ழோங்குமதைக் கொடுத்தா யானால்
நெத்திலியாங் கருவாட்டைக் கொண்டு வந்தே. (27)

## இதுவுமது.

வந்தப்பா வரைத்துக்கா டியிற்க லக்கி
வாகாகக் கொடுக்கவிப் பிணியுந் தீரும்
முந்தப்பா பிரண்டைதளிர்ப் பிடியும் நான்கை
முதிர்காடி விட்டரைத்துக் கலக்கி யூட்டி
சந்தப்பா யிடதுவிலாச் சூடு போட
சாந்தமா யின்னமொரு செய்கை சொல்வேன்
சிந்தப்பா மயிர்சிலிர்க்குஞ் செவியுந் தாழுந்
தீவனந்தின் னாதுவயி றாதும் பாரே. (28)

## இதுவுமது.

பார்க்கவாய் திறக்காது கண்சி வக்கும்
பாரதிர மூச்சுவிடும் நாடி தாழும்
கோர்க்கையா வதற்குவெண் பூடு சுக்கு
கூறுதனித் தனியாகப் பலம தொன்று
தீர்க்கமாம் வசம்பரைக்காற் பலம தாகும்
திடமான விலுப்பரைப்புப் பலமும் வீசம்
சேர்க்கத்தை வேளைநொச்சிக் குப்பை மேனி
சிறுதும்பை வகைக்குமொரு பிடிய தாமே. (29)

## இதுவுமது.



ஆமப்பா யிவையெல்லாஞ் சேர்த்தி டித்து
அருங்காடி படியிரண்டிற் கலக்கி யூட்டி
தாமப்பா வதன்பின்பு வெந்நீர் காட்டி
தனித்திரண்டு விலாவிலுஞ்சூ டடவே தீரும்
நாமப்பா யின்னமொரு செய்கை சொல்வோம்
நாற்காலுங் கிடுகிடென நடுக்க முண்டாம்
வாமப்பா மாக்குமாக் கென்று கத்தும்
மண்கவ்வி விழுந்துமெழுந் திரிக்குந் தானே. (30)

## இதுவுமது.

தானான நெஞ்சுமிக வீங்குந் தீர
தக்கவே லிப்பருத்திச் சிறுகு ரிஞ்சா
வேனான முடக்கத்தான் சிந்தி யோடு
மிக்ககொத் தாங்கொழிஞ்சி யிலைவ கைக்கு
கோனான சாறுங்காற் படியெ டுத்து



கொடுத்துமிரு விலாவதனிற் சூடு போட
வானான நோயகலு மின்னோர் செய்கை
வாடியுடல் நடுங்கியது திகைக்கும் பாரே.

## இதுவுமது.

பாரதுவும் நீர்விடுக்குஞ் செவியுந் தாழும்
பண்புறவேப் பிலைகொன்றை யிலையி டித்து
சாரவிள வெந்நீரிற் கலக்கி யூட்டித்



தானிடது விலாவதனிற் சூடு போட
கோரபிணி யகலும்பின் மற்றோர் செய்கை
கூர்ந்துபார்க் கப்பார்க்கப் பரத விப்பாய்
நேரவே பார்க்குமது தீரு தற்கு
நிகழ்வண்ணா னவுரியிலை தன்னை வாங்கே. (32)

## இதுவுமது.

வாங்கிசிறு செருப்படியி னிலையுங் கூட்டி
வளமதா யிடித்துமோ ரதிற்க லந்து
நோக்கியே கொடுத்துவலப் பக்கஞ் சூடு
நொந்திடா திட்டுமெருக் கிலையுங் கோவை
தாங்கியிரண் டிலையிடித்துத் துவாலை போடச்
சாந்தமற் றொருசெய்கை சாற்றக் கேளு



வீங்குமே பின்சந்து முன்னங் காலும்
விலகமுப்புர மெரித்தான் பலம தொன்றே. (33)

## இதுவுமது.

ஒன்றதுபோற் குளப்பாளை வேருங் கூட்டி
உற்றரைத்துப் பசும்பாலிற் கலக்கி யூட்ட
நன்றதுவா மற்றுமொரு மார்க்கஞ் சொல்வேன்
நாடிமுக்குங் குன்னியலைந் தலைந்து நிற்கும்



வென்றவூ மச்சியுயி ருள்ள தாக
விரும்பிக்காற் படிச்சாற்றை யிடித் தெடுத்து
தின்றிடுமோர் தேங்காய்ப்பாற் படியுங் காலே
சேர்த்தூட்டி கடைவாயிற் சூடு போடே. (34)

## கொட்டடைப்பன்.

போடவே சுகமாகு மெருக்கம் பாலே
புகலாறு தாமுதுகின் மேல டித்து
நாடவே மிளகைமென்று பவன வாயும்
நாற்காது மூதிடவே சாந்த மாகும்
தோடமாங் கொட்டடைப்பன் நோயின் செய்கை
சொல்லுவேன் கழுத்ததுவுங் கோண லாகும்
ஓடவ்வை மேய்ச்சலதாய் மேயுந் தீர
உற்றவமுக் கிராவேர்பூ லாத்தி வேரே. (35)

## முக்கடைப்பன்.



வேரப்பா சித்தகத்தி யிலேய ரைத்து
மிகக்கோண லாயிருக்குங் கழுத்திற் பூசி
தோரப்பா விலாவிரண்டிற் சூடு போட
தெளிவாகு முக்கடைப்பன் நோயின் செய்கை
சாரப்பா விரைதின்ன தொருகால் நொண்டும்
தக்குத்திக் கென்றமுக்கு மெழுந்தி ராது
வீரப்பா தீரவி ருள்ளிபடி யரையாம்
வில்வயிலே பருத்தியிலே யிரண்டுந் தானே. (36)

## மூக்கடைப்பன்

இரண்டிலேயுந் தனித்தனியே மாங்காய் போல
இசைந்தரைத்தோர் படியாட்டின் மோர்க லக்கி
மிரண்டிடா தேகொடுத்து மிளகு சுக்கு
மேலும்பூ டரைத்துசிறு நீர்க லக்கி
பிரண்டிடா மூக்கதனில் நசியஞ் செய்து
பின்னுமிரு விலாவதனிற் சூடு போட
திரண்டபிணி யகன்றுவிடும் மூக்க டைப்பன்
செய்கைவயி றாதுஞ்சா ணம்போ டாதே. (37)

### இதுவுமது.

சாணம்போ டாததுவுந் தீரு தற்கு
தக்ககருத் தக்காணச் செடிச மூலம்
தோணவே யரைத்துபழம் புளிக ரைத்து
தூயவிளக் கெண்ணெயதிற் கூட்டி யூட்டி
பேணவிரு விலாவதனிற் சூடு போட
பேசியநோ யகன்றுவிடு மினியோர் செய்கை
காணக்கீர் கிரெனவே செருமி நிற்கும்
கண்ணிரண்டில் நீர்வடியுந் தீரு தற்கே. (38)

### இதுவுமது.

தீரவே மிளகுசுக்கு வெள்ளைப் பூண்டு
செப்புவேன் வகைவகைக்குப் பலமி ரண்டு
சேரவே கொடுப்பையிலைப் பிடியி ரண்டு
திகழும்பொன் னாங்காணி சமூலந் தானும்
சாரவே பலம்பத்துங் கொண்டி டித்து
தனிக்காடி படியிரண்டிற் கலக்கி யூட்ட
நேரவே குணமாகும் வெள்வெங் காயம்
நிறையுமொரு பிடியுள்ளி யுரித்தெ டுத்தே. (39)

### இதுவுமது.

எடுத்துமிள கும்வசம்புந் தனிப்பிடிய தொன்றை
இசைந்தரைத்துப் படிகாடி தனிற்க லக்கி
தொடுத்துமுத் தினங்கொடுத்து மிளகு சுக்கு
சொல்வசம்பு தைவேளை தனையி டித்து
அடுத்துவடி கட்டிநா சியிற்பி ழிந்தும்
அதன்பிறகு மூக்கரைச்சா ரணையின் வேரிற்
கடுத்துச்சா றெடுத்துமிள குடன்வ சம்பு
கதித்தரைத்துத் தேகமெங்குந் துவாலை போடே. (40)

### இதுவுமது.

போடவே சாந்தமுறு மற்றோர் செய்கை
புகலுவேன் குறுகுறெனக் கூர்ந்து பார்க்கும்
நாடதிக்கு திக்கென்றே செருமி நிற்கும்
நன்றாகத் தைவேளை குப்பை மேனி

காடநொச்சித் தளிர்வகைக்குப் பிடிய தொன்று
கண்டங்கத் திரிப்பழமும் பலமி ரண்டு
தேடவரைப் பலமிளகு வசம்பு காலாம்
திகழுப்புப் படியரையைச் சேர்த்தி டித்தே. (41)

## இதுவுமது.

இடித்தெடுத்து மோரதனிற் கலக்கி யூட்டி
ஈருள்ளி நொச்சியிலை தனையி டித்து
வடித்துசிறு நீர்கலக்கி நாசி தன்னில்
வாகாக நசியஞ்செய் யிதுவு மன்றேல்
நடித்தசுண்டக் காயூற வைத்த தண்ணீர்
நசியமுமிட் டிருவிலாச் சூடு போட
நொடித்தபிணி யகன்றுவிடு மற்றோர் செய்கை
நோக்கியழி மேய்ச்சலதாய் மேயும் பாரே. (42)



## இதுவுமது.

பாரப்பா சாணிகுண மாகப் போடும்
பலமாக மூக்கதனுற் செருமி நிற்கும்
போரப்பா நாட்செலக்கற் றூழஞ் சோறு
போலாக மூக்கதனில் வடியுங் தீர
நேரப்பா பூடுசுக்குத் தனிப்பலம தொன்று
நிகழ்வசம்பு பலங்காலாங் குப்பை மேனி
சேரப்பா தைவேளை சங்கங் குப்பி
சிறுதும்பை யெருக்குநொச்சி யிலைவ கைக்கே. (43)

## இதுவுமது.

வகைக்குமொரு பிடியாகச் சேர்த்தி டித்து
மக்கள்சிறு நீர்கலக்கிக் கொடுத்துப் பின்பு
திகைக்காம லிரண்டுவிலாச் சூடு போட
தீருமிப் பிணியதுவு மற்றோர் செய்கை
தகைக்கசளி மூக்கதனி லதிக முண்டாம்
சாரற்ப காய்ச்சலுண்டாங் தீரு தற்கு
துகைக்கவே குளிர்காற்றீ ரம்ப டாமல்
சுத்தமா யிவ்விடத்திற் கட்டி வைத்தே. (44)



## ஈளைமூக்கடைப்பன்.



கட்டியொரு வேளைக்குப் பொட்டி லுப்பு
கணக்குமரைத் தோலாவைத் தீனி சேர்த்து
அட்டியிலா மூன்றுநா ளிவ்வா றூட்டி
அதனிரண்டு விலாவிலுஞ்சூ டிடநன் றாகும்
மட்டிலா யீளைமூக் கடைப்பன் செய்கை
வழுத்துவேன் கிருபூ ரென்றி ளைக்கும்
திட்டியாங் கண்ணதனில் வடியும் நீரு
தீரவே கோவையிலைப் பிடியும் நான்கே. (45)

## உதிர வெப்பு மூக்கடைப்பன்.



பிடியுடனே வெள்ளுள்ளிப் பலமு மூன்று
பிரியசுக்குப் பலமிரண்டு சேர்த்த ரைத்து
துடியான காடியதிற் கலக்கி நன்றாய்த்
துலங்கமுத் தினங் கொடுத்து முதுகின் மீது
கொடிதின்றிச் சூடிடவே சுகம தாகும்
கூறுதிர வெப்புமூக் கடைப்பன் செய்கை
படியதனிற் றிகைத்துக்கண் பீளை சாடும்
பகருதற்கு முத்தெருக்கஞ் செவியி னோடே. (46)

## மூக்குத் தண்டடைப்பன்.



ஓடுகருஞ் சீரகம்நா ரத்தையள வாக
உறவரைத்துக் காடியதிற் கலக்கி யூட்டி
நாடுமூக் கதிற்சூடு போட நன்றாம்
நவில்மூக்குத் தண்டடைப்பன் செய்கை சொல்வேன்
தேடுமூக் குத்தண்டு விரிந்துதடு மாறும்
திடமாக நெடுமூச்சு வாங்குந் தீர
நீடுசுக்குப் பலமொன்று மிளகு முக்கால்
நிகழுந்திப் பிலியுமரைப் பலம தாமே. (47)

## நாக்கடைப்பன்.

ஆமப்பா யிவையரைத்தோர் படியாங் காடி
யதிற்கலக்கிக் கொடுத்துப்பின் மிளகுதிப் பிலியும்
ஏமப்பா வோரளவா யரைத்துச் சீந்தி
யிலைச்சாற்றிற் கலக்கிவடி கட்டி நாசி
தாமப்பா நசியமிட்டுத் தலையு மூக்குந்
தான்சூடு போட்டிடநோய் சாந்த மாகும்
நாமப்பா நாக்கடைப்பன் செய்கை சொல்வோம்
நல்லவிரை தின்னுமல் வற்றும் பாரே.

தலை



மூக்கு



## இதுவுமது.

வற்றியுடற் றலையைத்தா னுயர்த்திப் பார்க்கும்
மாமூக்கில் வெண்சளியு முறைந் திருக்கும்
உற்றதோர் நாக்குதடித் திருக்குந் தீர
ஓங்குமா வரம்பட்டை யிலந்தப் பட்டை
சொற்றவரு வகைக்குமொரு பலத்தி னேடு
துலங்கத்திக் காயுமரைப் படியுங் கூட்டி
முற்றவிடித் திருபடிகா டியிற்க லக்கி
முன்னூட்டி யதிற்கொஞ்சம் நசியஞ் செய்யே. (49)

## தாக்கடைப்பன்.

செய்யவெருக் கிலையரைத்துச் சிறுநீர் விட்டு
திடமான வுடம்பெங்குந் துவாலை போட்டு
பய்யவே நெற்றியிலு மிடவி லாவும்
பாங்காகச் சூடிடவே நோயுந் தீரும்
உய்யவே தாக்கடைப்பன் செய்கை சொல்வேன்
உற்றசெவி விடைக்குங்கண் ணுருட்டிப் பார்க்கும்
துய்யசில போதுகடைக் கண்ணல் நோக்கும்
தொடர்ந்திருநாட் செலவயிறு வீங்கும் பாரே. (50)

நெற்றி



இடதுவிலா



## இதுவுமது.

வீங்கிப்பின் கீழ்விழுந்து கிடக்குந் தீர
வெண்பூடு மாங்காயி னளவ ரைத்து
பாங்கான *ராசகனிச் சாறுமரைப் படியாம்
பகர்கண்டங் கத்திரியின் சாறுமவ் வீதம்

*ராசகனி—எலுமிச்சம்பழம்.

தேங்காம லேகலக்கிக் கொடுத்துக் கொஞ்சம்
செவிமூக்கு கண்ணதிலும் நசியஞ் செய்து
ஏங்காமல் வெந்நீரைக் குடிக்க விட்டு
இருவிலா விலுஞ்சூடு போட நன்றே. (51)

## சந்தடைப்பன்.

நன்றாகுஞ் சந்தடைப்பன் செய்கை சொல்வேன்
நாற்காலின் சந்ததுவும் வீங்குந் தீர
ஒன்றாமுப் புரமெரித்தான் வேருபல மொன்று
உற்றகுளப் பாலேவே ரதுபோ லாக
குன்றாம லரைத்தாவின் பாற்க லக்கிக்
கொடுத்திடவே சுகமாகு மின்ன மொன்று
பொன்றாத வகைக்குமஞ்சட் சுக்குபல மரையாம்
போந்தநன் மிளகதுவும் பலமொன் றாமே. (52)

## இதுவுமது.

ஆமப்பா வசம்புதிப் பிலிப்ப லங்கால்
அத்துடனே பெருங்காயம் பலம ரைக்கால்
தாமப்பா தைவேளை குப்பை மேனி
சாறும்வெள் ளறுகுதனிப் பிடிய தொன்று
வாமப்பா யிவையெல்லாஞ் சேர்த்தி டித்து
வளமாஞ்சா ராயமரைப் படியும் விட்டு
ஓமப்பாப் பிசைந்துருட்டிக் கொடுக்க நன்றாம்
உத்தமனே யின்னமொரு முறைசொல் வேனே. (53)

## இதுவுமது.

சொல்லுவே னெருபெட்டைக் கோழி ரத்தம்
சுருசுருப்பா மரைப்புட்டிச் சாரா யத்தில்
மெல்லவே யிட்டிதனைக் கொடுக்க நன்றாம்
விளம்புவேன் பிரண்டையதைக் கொணர்ந் திடித்து
புல்லவே வறுத்துதுணி யதனிற் கட்டி
பொறுக்கவீக் கத்தின்மே லொத்த னந்தான்
வெல்லவே யிட்டதன்பின் னமுக்கி ராவேர்
விளம்புசித் தகத்தியிலை வசம்ப ரைத்தே. (54)

## மந்தடைப்பன்.

அரைத்துமே கொதிக்கவைத்து வீக்கத் தின்மேல்
அடைவாகப் பூசிவெந்நீர் குடிக்கக் காட்டி
புரைத்திடா வீக்கத்திற் சூடு போட
புகன்றநோ யகன்றுவிடு மந்த டைப்பன்
உரைத்திடுவாய் திறந்துதலை குனிந்து நிற்கும்
உணர்ச்சியின்றித் தீவனந்தின் ஞது தீர
நிரைத்தமுக டொட்டடையும் வெதுப்ப டைப்பும்
நேர்வகைக்குப் படியொன்ற தாயி டித்தே. (55)

## தவளைமூக்கடைப்பன்.

இடித்துமொரு படிமோரிற் கலக்கி யூட்டி
இசைந்தபுத்து மண்கரைத்துக் காய்ச்சி நன்றாய்
துடித்திடா துடம்பெங்கு முத்தினங் தான்
சுகமாக வேபூசித் தலையிற் சூடு
தடித்திடா திட்டிடநோய் சாந்த மாகும்
தவளைமூக் கடைப்பன்றன் செய்கை சொல்வேன்
வெடித்தமூக் கடைத்துநெடு மூச்சு வாங்கும்
மிக்கநடக் காதுதடு மாறும் பாரே. (56)



## சங்கடைப்பன்.

தலை



பாரப்பா தீருதற்கு மிளகுதிப் பிலியும்
பண்பான சிந்தியிலை சமம தாக
நேரப்பா வரைத்துசிறு நீர்க லக்கி
நினைவாக நாசியதில் நசிய மிட்டு

மூக்கில்



சேரப்பா தலைமூக்கிற் சூடு போட
தீருமிப் பிணியுஞ்சங் கடைப்பன் செய்கை
வீரப்பா வழிமேய்ச்ச லாக மேயும்
மிகத்திகைக்குங் கொஞ்சநாட் சென்ற பின்பே. (57)

## இதுவுமது.

பின்பாகச் செருமுங்கீழ் விழுந்தி ளைக்கும்
பிசகாம லரைக்கண்ண தாகத் தூங்கும்
அன்பாகத் தீருதற்குத் தெளிந்த வெல்லம்
அதுபலமூன் றரிதாரம் பலமி ரண்டு

முன்பாக வரைப்படிசா ராயந் தன்னில்
முக்கியமாய்த் தான்கொடுக்கச் சாந்த மாகும்
தென்பாக வெற்றிலையு மிளகுதிப் பிலியும்
செப்புவேன் வகைவகைக்குப் பலமுங் காலே. (58)

## இதுவுமது.

காலப்பா வுப்புபல மரையி னேடு
கண்டங்கத் திரிக்கனியும் பலமும் பத்து
மேலப்பா தானரைத்துச் சீந்திச் சாற்றில்
மிகக்கலக்கி வடிகட்டிக் காது மூக்கில்
வேலப்பா பதந்துதித்து நசிய மிட்டு
வெந்நீரைக் குடிக்கச்செய் திருவி லாவில்
நீலப்பா சூடிடவே குணம தாகும்
நிகழ்த்துவேன் சதையடைப்பன் செய்கை தானே. (59)



## சதையடைப்பன்.

தானதுவும் பசுமாட்டின் மேலே தாவும்
சாற்றவதன் முகம்வீங்கும் நிலம்ப ரண்டும்
கானமதி லழிமேய்ச்ச லாக மேயும்
கண்டுபல கால்சுருக்கு நீர்வி டுக்கும்
ஆனமட்டு மரைவாயாய் நீர்கு டிக்கும்
அதன்சாணி வரண்டுவிழுந் தீரு தற்கு
மானணிந்தோன் வில்வயிலைப் பலமும் பத்து
வல்லாரை யேழுபலங் கடுக்காய்த் தோடே. (60)

## இதுவுமது.

கடுக்காயைத் தட்டிபச் சிலையைக் கூட்டி
கணக்காறு படித்தண்ணீர் பாண்டத் திட்டு
முடுக்காக வடுப்பேற்றிக் கொதிக்க வைத்து
மொழியவொரு படித்தண்ணீ ரான பின்பு
அடுக்கவே யிரக்கியதை யிறுத்து வைத்து
ஆற்றியே கொடுத்துமப்பால் வெந்நீர் காட்டி
துடுக்காக விலாவிரண்டிற் சூடு போட
சுகமாகுங் கல்லடைப்பன் செய்கை கேளே. (61)



### கல்லடைப்பன்.

கேளப்பா விரைதின்னுஞ் சாணம் போடும்
கேடசதி யாயிருக்குங் கொஞ்ச நாளில்
கோளப்பா கோலதனிற் கல்ல டைக்கும்
குறிப்பதுவுந் தீருதற்கு வெந்த யந்தான்
தாளப்பா பூடுதனிப் பலம தொன்று
தகுநாவற் கொழுந்துமா தளையின் பிஞ்சு
வேளப்பா தனித்தனியே பலமு மூன்று
விரும்பிடுநற் கடுகதுவும் பலங்கா லாமே. (62)

### இதுவுமது.

காலான சித்திரப்பா லாடையெழு பலமாங்
கடுகவரைத் தேவாழைக் கிழங்கின் சாறு
மாலாக நாலுபடி தனிற்க லக்கி
வல்லபமா யூட்டிடவே குணம தாகும்
மேலா மத்திப்பிஞ்சு பருத்திப் பிஞ்சு
வெவ்வேறாய் வகைக்குமொரு படிய ரைத்து
சாலாவின் மோர்கலக்கி நாள்மூன் றாட்டத்
தானகலும் பிணிவேறு செய்கை யொன்றே. (63)

### இதுவுமது.

ஒன்றதுவா மிரத்தமதாய் நீர்வி டுக்கும்
ஓகோகோ உற்றீரல் வீங்குந் தீர
நன்றதுவா மீருள்ளிப் பலமும் பத்து
நற்சீர கம்லவங்கப் பட்டையதி மதுரம்
வென்றதுவா மிலாக்காய்சந் தனம்வ கைக்கு
விரும்புபல மொன்றுவிரு ஷங்கொ ழுந்து
குன்றதுவாந் துத்தியிலை வகையொன் றுக்குக்
கூசாமற் பிடிமூன்ற தாகச் சேர்த்தே. (64)

### காத்தடைப்பன்.

சேர்த்தரைத்துப் பசுவெண்ணெ யிற்க லக்கி
திடமாக மூன்றுநாட் கொடுக்கத் தீரும்
பார்த்திடுவாய்க் காத்தடைப்பன் செய்கை தன்னைப்
பகருவே னுடம்பிடது பக்கம் வீங்கும்

ஆர்த்திடவே கையதனற் தட்டிப் பார்த்தால்
அதுகேட்கும் டொங்குடொங் கென்று தானும்
சீர்த்தியிலா வருத்தமுறும் வயிற்றைக் காலால்
திறமாக மிதிக்குமூச் சதிக மாமே. (65)

## கதவடைப்பன்.

மூச்சதிக மாவதற்கு ஏழுபலக் கடுகை
முன்னுணுக்கிப் படிநெய்வெந் நீருங் கூட்டி
வாச்சுதெனக் கொடுநலமாங் கதவ டைப்பன்
வாய்த்திறவா திருக்குங்கண் சிவக்குந் தீர
பேச்சென்ன யிந்துப்புப் பலங்கா லோடு
பிசகாசீ னிக்காரம் பலமும் வீசம்
மாச்சலிலாப் பெருங்காய மூன்று வீசம்
வலுவாம்வேப் பங்கொழுந்து பிடிய தொன்றே. (66)

## இதுவுமது.

ஒன்றுடனே வெங்காயம் பிடியி ரண்டு
ஓங்கவே யரைத்துபடிப் பசும்பாற் கூட்டி
நின்றுநாள் மூன்றூட்ட நலம தாகும்
நீயாலந் தோலரைத்து வாயிற் பூசு
நன்றுகடுக் காயுந்திப் பிலிய ரைத்து
நறுநெய்யிற் குளப்பிவாய் பூசத் தீரும்
வென்றுவருஞ் சுக்கதுவும் பலம தொன்று
மிளகுபல மரையாந்திப் பிலிவ சம்பே. (67)

## இதுவுமது.

திப்பிலியும் பலங்காலாங் காயமுவ் வீசம்
சேரவரைத் தேகமுதை மூத்தி ரத்தில்
ஒப்பியே கலக்கியிட்டு மாலை தன்னில்
உறவாக வெந்நீரைக் குடிக்கக் காட்டி
தப்பின்றித் தலையொட்டிச் சூடு போடத்
தானகலு மிப்பிணியு மின்னோர் செய்கை ௨௫
கப்பியே வாய்கிட்டுங் கண்சி வக்கும்
கடுமையாந் தீருதற்கு வகைசொல் வேனே. (68)

### இதுவுமது.

சொல்லவே யிந்துப்புக் காயந் தன்னை
 சூட்டுவாய் விராகனிடை வகைக்கி ரண்டு
புல்லவே பொடித்துக்காற் படியாங் காடி
 பொருந்தவே கலந்தூட்டித் தலையிற் சூடு
மெல்லவே யிட்டிடவிந் நோயுந் தீரும்
 விளம்புவேன் மற்றொன்று செய்யுஞ் செய்கை
வெல்லவே தொப்புளதைச் சுற்றி வீங்கும்
 வேகமாய்ச் சுழன்றுவால் வீசும் பாரே. (69)

### நெஞ்சடைப்பன்.

பாரப்பா கலங்கொம்பா லுடல முற்றும்
 பாங்காகத் தடவிப்பின் புரைத்தெ டுத்து
நேரப்பா திப்பிலியுங் கடுக்காய் தன்னை
 நிறையாகப் பொடிசெய்து குழப்பி நெய்யில்
சீரப்பா கொடுத்திடது விலாவிற் சூடு
 தீட்டிடவிந் நோயகலும் நெஞ்ச டைப்பன்
சேரப்பா செய்கைநெஞ்சு தடித்து வீங்கும்
 திகழும்வாய் நீர்வடியுஞ் செருமுந் தானே. (70)

### இதுவுமது.

தானப்பா மிளகுமொரு பலமாஞ் சுக்கு
 தனிக்கோரங் கிழங்குவகைக் கரைப்ப லந்தான்
வேனப்பா வரைத்துசிறு நீருமரைப் படியை
 விட்டரைக்காற் படிநெய்யுங் கூடச் சேர்த்து
வானப்பா கொடுத்திடவிந் நோயுந் தீரும்
 வகையொன்று மிளகுபூ டிருப லந்தான்
ஏனப்பா பெருங்காயம் பலம ரைக்கால்
 இசைவசம்பு காற்பலமா மத்தி னேடே. (71)

### இதுவுமது

ஓடப்பா தைவேளை குப்பை மேனி
 உற்றவெள் ளறுகுவகைக் குப்பிடிய தொன்று
நாடப்பா யிவைபிடித்துக் கவள மாக
 நன்மையுறக் கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி

விலா

நெஞ்சு

நீடப்பா விலாவிரண்டும் நெஞ்சி லுந்தான்
நீசூடு போட்டிடவே சுகம தாகும்
சூடப்பா வின்னமொரு செய்கை சொல்வேன்
துலங்குங்கா திரண்ட துவுந் தொங்கும் பாரே. (72)

## இதுவுமது.

தொங்கியே தலைநிமிரும் நாடிபட படக்கும்
சொற்காது கொம்புகளுஞ் சூட தாகும்
தங்கிப்பின் குளிருமது மாறி மாறி
தானிருக்கும் நேர்மையதாய்ச் செரும லுண்டாம்
பொங்கிவரு மேல்மூச்சுக் கண்ணிமைத் தோல்
பொருந்திரத்தங் கட்டியுள் ளுப்ப லாகும்
கங்குல்பக லோர்மையதாய்ப் படுத்தி ராது
கடினமப்பா விப்பிணியு முற்றி னாலே. (73)

## இதுவுமது.

முற்றிடிலோ கெட்டுசுவா சக்கு மாயும்
மூச்சதிக நாற்றமுண்டா மிந்நோய் தானும்
சுற்றியடித் திடுங்குளிர்காற் றத்தி னாலுந்
தொடர்ந்துவரும் பெருமழையில் நனைந்த தாலும்
பற்றிவந்த திந்தநோய் தீரு தற்கு
பகருவேன் கற்பூரம் பொட்டி லுப்பு
வெற்றியபின் கரியபவ ளம்வ கைக்கு
விளம்புமரை யரைக்காற்றோ லாவாய்ச் சேரே. (74)

## இதுவுமது.

சேர்த்ததனைப் பொடிசெய்து போது மான
தேன்விட்டுப் பிசைந்துருண்டை யாகச் செய்து
பார்த்ததனை மூன்றுநாள் மூன்று வேளை
பங்காகத் தான்கொடுக்க பேதி யாகும்
ஆர்த்ததிக மானுக்காற் கரியபவ ளத்தை
அகற்றிவிடு நேர்வாள மிரண்டே முக்கால்
நேர்த்திநிறைத் தோலாவா யரைத் தெடுத்து
நிகழ்தேங்கா யெண்ணெய்முவ் வீச மாமே. (75)

## நீரடைப்பன்.

வீசமூன் றதிற்கலக்கி யடுப்பி லேற்றி
மேலுமதைக் கொதிக்கவைத் திரக்கிக் கொண்டு
மோசமற் றிடமார்புக் கிருபு றத்தும்
முழுப்பலங்கொண் டழுத்தித்தேய்த் திடநன் றாகும்
பாசமுள நீரடைப்பன் செய்கை சொல்வேன்
பாங்கின்றி நீர்செருக்கு முக்கிக் கத்தும்
கூசவே குன்னிக்கொண் டிருக்குந் தீர
கூறுமூ மச்சியதை யிடித்துவடி கட்டே. (76)

## இதுவுமது.

கட்டியநீ ரதுவுங்காற் படிய தோடு
கழறுமரைப் படிதேங்காய்ப் பாலுஞ் சேர்த்து
அட்டியிலா தேகலக்கிக் கொடுத்துப் பின்பு
அதற்குமே கடைவயிற்றிற் சூடு போட
மட்டிலா நோயகலு மின்னோர் செய்கை
வழுத்தவே புல்வைக்கோல் நன்றாய்த் தின்னும்
சொட்டிலாக் குணமாகச் சாணம் போடும்
சூடதிக நாட்சென்றாற் செருக்கும் நீரே. (77)

## இதுவுமது.

நீரதுவு மிரங்காது கோலிற் கட்டும்
நிச்சமாய்க் குன்னிநிற்குந் தீரு தற்கு
நேரதுவாம் வெந்தயமும் வெள்ளைப் பூடு
நிகழ்த்தவே வகைக்குமொரு பலம தாகும்
மாரனைமுன் பெரித்தசிவன் பாதம் போற்றி
மாதளையின் பிஞ்சுநா வற்கொ ழுந்து
சீரதுவாம் வகைக்குமுப் பலம தாக
சித்திரப்பா லாடையெழு பலம தாமே. (78)

## இதுவுமது.

ஆமப்பா யிவையெல்லா மரைத்தொன் றாக
அத்துடனே நான்குபடித் தேங்காய்ப் பாலும்
தாமப்பா விட்டுநன்றாய்க் கலக்கி யூட்டிச்
சாரவிரு கடைவாயிற் சூடு போட

போமப்பா விப்பிணியு மின்னோர் செய்கைப்
புகலுவே னுடம்பெங்குங் குளிர்ந் திருக்கும்
வாமப்பா செவிதாழும் பதட்ட முண்டாம்
வகைமூன்று நாளுக்கு மேலா னாலே. (79)

## இதுவுமது.

மேலானால் தண்ணீராய்ப் பீச்சுங் கண்ணும்
விழுந்துகுழி யாகுமது தீரு தற்கு
மாலான யேழுகடுக் காயி னோடு
வசம்புகருஞ் சீரகமுங் கடுகு தானும்
காலான மஞ்சணத்தி நாம தாளி
கருதிசம மாயரைத்துப் புளியுங் கூட்டி
சாலான திற்கரைத்துக் காடி விட்டுத்
தான்கலக்கிக் கொடுத்துமிரு கடையாம் வாயே. (80)

## நெளியடைப்பன்.

வாயதனிற் சூடிடவே சாந்த மாகும்
வழுத்துவேன் நெளியடைப்பன்செய்கை தன்னை உ உ
தூயதொரு சாணங்கூ ழாகப் போடும்
சுருக்காக நடக்கும்விழுந் தெழுந்தி ருக்கும்
நேயமுள சரீரமதை நெளிக்குந் தீர
நிகழ்பூடு வெந்தயமும் பலம தொன்று
சேயனே கடுகுபலங் கால தோடு
சித்திரப்பா லாடையெழு பலமுஞ் சேரே. (81)

## ஊதடைப்பன்.

சேர்க்கவே மாதளையின் பிஞ்சி னோடு
திகழ்நாவற் கொழுந்துவகைப் பலமு மூன்று
பார்க்கவே யரைத்துநாற் படியாந் தேங்காய்ப்
பாலதனிற் கொடுத்துமிரு விலாவிற் சூடு
தீர்க்கமா யிட்டிடவே நோயுந் தீரும்
செப்பிடுவே னூதடைப்பன் செய்கை தன்னை
எர்க்கையாம் வயிறூதுங் கண்சி வக்கும்
இரையுந்தின் னாதுசெவி தாழும் பாரே.



பாரப்பா நெத்திலியின் கருவா டோடு
பகரும்வெற் றிலைவகைக்குப் பலம தைந்து
நேரப்பா வரைத்துமிரு படியாங் காடி
நீரதிலே கலக்கியிடச் சாந்த மாகும்
சேரப்பா யின்னமொரு மார்க்கஞ் சொல்வேன்
சீரகமோ மம்வகைக்கு மரைப்ப லந்தான்
ஆரப்பா நெத்திலியின் கருவா டோடு
அரும்பூடு வகைக்குமொரு பலமரைத்தே. (83)

## இதுவுமது

அரைத்துமணத் தக்காளி கரிய நொச்சி
ஆடாதோ டைவகைக்குச் சாறுகாற் படியாம்
கரைத்தொன்றாய்க் கொடுத்திடது விலாவிற் சூடு
கணக்காகப் போட்டிடநோய் சாந்த மாகும்
உரைத்திடுவே னின்னமொரு மார்க்கந் தன்னை
உற்றமணத் தக்காளி குப்பை மேனி
குரைத்தகோ ழியினவரை யிலைவ கைக்கு
கூறவே யிரண்டுபிடி யாகச் சேரே. (84)



## இதுவுமது

சேர்த்திடுவெண் பூடுவசம் பிருவ கைக்குத்
திட்டமொரு பலமரைத்துக் கொடுக்கத் தீரும்
பார்த்திடுவாய் மற்றொன்று மஞ்ச ணத்திப்
பகரிலையுந் தூதுவளை வேருமிரு வகைக்கு
நேர்த்திபல மைந்துவசம் பிருப லந்தான்
நிகழ்புளியு மூன்றுபல மிடித்துக் காடி
சீர்த்தியுற வேகலக்கிக் கொடுத்துப் பின்பு
திடமாக விடதுவிலாச் சூடு போடே. (85)



## இதுவுமது

போடநலமா மின்னோர் செய்கை கேளு
புகழ்சாணம் போடாது வயிறு மூதும்
நாடவிரை தின்றிடா துடம்பு வீங்கும்
நவிலதற்குக் களிப்பாக்கி னொடுக டுக்காய்



தேடவகைக் குப்பலமூன் ருய்ப்பொ டித்துச்
செப்புங்கற் ருழஞ்சோ றதிற்பி சைந்து
சாடவெந் நீரதனிற் கலக்கி யூட்டித்
தானிடது விலாவிற்சூ டிடநன் ருமே.

## இதுவுமது.

நன்ருகு மற்றுமொரு செய்கை சொல்வேன்
நலமின்றி மலசலமுங் கட்டிப் போகும்
ஒன்ருக வயிறாது மசந்து நிற்கும்
ஓகோகோ தீரமஞ்ச ளக்ரா காரம்
குன்ருத கடுகுதிப் பிலிவ கைக்கு
கூறுமரைப் பலங்குரோ சாணி யோமம்
பொன்ருத மிளகாய்கஸ் தூரி மஞ்சள்
பொருந்தவகை யொன்றுக்கோர் பலமாஞ் சொல்லே. (87)

## இதுவுமது.

சொல்லவே காயங்காற் பலம தாகும்
சுக்குவெண் பூடுமிள கதுவ கைக்கு
வெல்லவே பலமுமிரண் டெருக்க லம்பூ
மேலுமொரு பிடியிவையெல் லாம ரைத்து
புல்லவே சாராயந் தனிற்பி சைந்து
புகட்டுவாய்க் கவளமதாய்க் குடிக்க வெந்நீர்
மெல்லவே காட்டியிரு விலாவிற் சூடு
விநயமா யிட்டிடநோ யகலு மென்னே.



## இதுவுமது.

என்னவே யின்னமொரு செய்கை சொல்வேன்
இருகண் ணுஞ் சிவக்குமீர் வடியும் வாயில்
நன்னவிரை தின்ஞது தீரு தற்கு
நல்லமதுக் காரைவேர்ப் பட்டைபல மைந்து
துன்னவே மிளகுபூ டொருவ கைக்கு
துலங்குபல மிரண்டரைத்துக் காடி தன்னில்
பின்னமிலா தூட்டியிட விலாவிற் சூடு
பிசகில்லா திட்டிடநோய் போமடுத்தே. (89)



## இதுவுமது.

அடுத்துமொரு செய்கைசொல்வேன் வயிறு மூதும்
அதுசுருக்கு நீர்விடுக்கும் மலமுங் கட்டும்
தொடுத்ததுவுந் திட்டுத்திட் டென்று முக்கும்
சொல்லகருங் காக்கணத்தின் சமூலந் தன்னை
எடுத்துமாங் காயளவ தாயி டித்து
இசைவசம்பு பலங்காலே யரைத்து வெந்நீர்
விடுத்துபடி தனிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
மேலும்வெந் நீர்காட்டி யிருவி லாவே. (90)

## இதுவுமது



விலாவிற்சூ டிட்டிடவிந் நோயுந் தீரும்
விளம்புவே னின்னமொரு முறையைக் கேளு
உலாவுகருங் காக்கணத்தை யிடித்துச் சாறு
உழக்கெடுத்து விளக்கெண்ணெய்ப் படிகால்விட்டு
துலாவுபல மிருபுளியை யதிற்க ரைத்து
சுகமாகக் கொடுத்திடது விலாவிற் சூடு
கலாபமறப் போட்டிடநோய் சாந்த மாகும்
கண்டுபா ரின்னமொரு முறையை விண்டே. (91)



## கோதடைப்பன்

விண்டிடுகோ ழிக்காரம் படிய ரைக்கால்
மேலாம்நெய்க் கொட்டைகனி பலம தைந்து
பண்டிடுவாய்ப் படிகாடி யிற்க லக்கி
பதருமவி டதுவிலாச் சூடு போட
அண்டிடுநோ யகன்றுவிடுங் கோத டைப்பன்
அதுவுமசைப் போடாது காலுங் கொட்டும்
கொண்டிடுநோ யகலுதற்கு மஞ்ச ணத்தி
கூறிலேவே ரும்பழைய புளிவ சம்பே. (92)



## இதுவுமது.

வசம்புமிவை சமமாகத் தான ரைத்து
வளமான காடிபடி யிரண்டி னோடு
*தசும்பிலிட்டு மடுப்பேற்றி வற்றக் காய்ச்சித்
தானுமொரு படியாக்கி யிரக்கி வைத்து

*தசும்பு—பானை.

வசம்பார்த்தே யிடதுசப்பை பொறுக்கச் சூடாய்
வகையான வொத்தனம்போ லூற்றிப் பின்பு
துசம்பிலுப்பைப் பிண்ணாக்கை யரைத்துக் காடி
துலக்கமாய்க் கலக்கியிட நோயண் டாதே. (93)

## வாயடைப்பன்.

அண்டாது வாயடைப்பன் செய்கை சொல்வேன்
அதன்நாக்குத் தடிக்கும்வாய் புண்ண தாகும்
திண்டாடும் வாயுந்தா னசைப் போடாது
திடமான முன்னங்கா லதைமு டக்கும்
மிண்டாகுங் கண்ணதனை மூடித் தூங்கும்
விலகுதற்குச் சுக்கோமம் குப்பை மேனி
கொண்டாடுந் தைவேளை பற்ப டாகம்
குணமாக யிவையெல்லா மரைத்துச் சேர்த்தே. (94)

## சோரியடைப்பன்.

சேர்த்துத்தண் ணீரதனிற் கலக்கி யூட்டித்
திடமான கோவையிலைச் சாறை வாங்கி
நேர்த்தியதா யுடம்பெங்குந் தவாலை போட
நீங்குமிப் பிணிசோரி யடைப்பன் செய்கை
சீர்த்திவாய்ப் புண்ணாகும் மூக்கு வேர்க்கும்
திகழ்சாணம் போடாது தீரு தற்கு
பார்த்திடுவா யதிமதுரம் யேலஞ்சீ ரகமும்
பகாரைத்தோ லாவாகும் வகைத னக்கே. (95)

## செருக்கடைப்பன்.

தனதாக நெல்லிக்கா யாறு சேர்த்துத்
தானிடித் தரைத்துமுப் படியா மோரில்
இனமாகக் கலக்கியே புகட்டத் தீரும்
இயம்புவேன் செருக்கடைப்பன் செய்கை தன்னை
கனமாக வடிவயிறு வீக்க முண்டாம்
கண்பீளை சாடியே மயிர்சி லிர்க்கும்
மனமாறிக் கீருபூ ரெனவி ளைக்கும்
வசமாகச் சுக்கதுவும் பலம தொன்றே. (96)

### குரட்டடைப்பன்.



ஒன்றப்பா கோவைத்தண் டுடனீ ருள்ளி
ஒருவகைக்கு மாங்காயி னளவ ரைத்து
நன்றப்பா விருபடியாம் பசுவின் மோரில்
நாடியே கலக்கியிட் டிருவி லாவில்
அன்றப்பா சூடிடவே நலம தாகும்
அதுவன்றிக் குரட்டடைப்பன் செய்கை சொல்வேன்
நின்றப்பா வரைவாயைக் கொண்டு மேயும்
நேரான கழுத்ததுவுங் கோண லாமே. (97)

### இதுவுமது.

கோணலது தீரநத்தைச் சூரி வித்தைக்
கொணர்ந்துகாற் படியிடித்துச் சாராயத்தை
தோணவரைப் படிவிட்டுக் கலக்கி யூட்டச்
சுகமாமற் றென்றேலம் பலங்கா லாகும்



பூணவே சீரகமும் பலம தொன்று
புகலிரண்டு பலஞ்சருக் கரையுங் கூட்டி
காணவே யிடித்தெடுத்துக் கொடுத்து வெந்நீர்
காட்டியே முதுகதனிற் சூடு போடே. (98)

### சரட்டடைப்பன்.

போடகுண மாஞ்சரட் டடைப்பன் செய்கை
புகலவுட லசைக்குமிகப் பதட்ட முண்டாம்
சாடவே மூக்கதனில் மூசுமூ சென்று
தான்விடுக்குஞ் சுவாசமது நாக்கை நீட்டும்
ஓடவே மஞ்சளரைப் பலம தாகும்
ஓங்கவே மிளகதுவும் பலம தொன்று
நாடத்திப் பிலிபலங்கா லத்திக் காயும்
நவிலுமரைப் படியதுவுஞ் சேர்த்த ரைத்தே. (99)

### திரட்டடைப்பன்.



அரைத்திரண்டு படிக்காடி யதிற்க லக்கி
அன்பாகப் புகட்டிவிலாச் சூடு போட
உரைத்தநோ யகன்றுவிடுந் திரட்ட டைப்பன்
ஒருபக்கம் வீக்கம்போற் புடைப்ப தாக

இரைத்துமே யுருண்டுதிரண் டிருக்கு மப்பா
இரைதின்ன வொட்டாமற் றெண்டை கட்டும்
கரைத்துகிடை கிடக்காது யெழுந்தி ராது
கடியபிணி விடுவதற்கு வகைசொல் வேனே. (100)

## வரட்டடைப்பன்.

சொல்லவே சிறியதும்பை பெரிய தும்பை
துலங்குமொரு வகைக்குக்காற் படியாஞ் சாறு
புல்லவே மிளகுசுக்கு வகையொன் றுக்கு
பொருந்துபல மொன்றரைத்துக் கலக்கி யூட்டி
நல்லதோ ருடம்பெங்குந் துவாலை போட்டு
நாடிப்பின் பாகவெந் நீரைக் காட்ட
வல்லபிணி யகலும்வரட் டடைப்பன் செய்கை
வழுத்தக்கண் சிவக்குமூக் கடைக்குங் காணே. (101)

## இதுவுமது

காணவே வயிறாதுந் தீரச்சித் தகத்தி
கானகத்து வாகையிலை சிவனார் வேம்பு
தோணவே குறண்டிசரக் கொன்னைசிறு தும்பை
சொற்புங்க யிலைகுப்பை மேனிதை வேளை
பூணயிவ் விலைவகைக்குப் பிடிய தொன்று
புகலிதனை யிடித்தெடுத்தச் சாறு தன்னில்
ஊணபுகை யிலைவசம்பு மொருவ கைக்கு
உற்றபலங் காலாக வொன்று சேரே. (102)

## விரட்டடைப்பன்.




சேரப்பா வெற்றிலையும் நாலுபல மாக
திட்டமுட னரைத்துச் சாராயம் விட்டு
வீரப்பா முன்பிடித்த சாறுங் கூட்டி
விருப்பாகக் கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
நேரப்பா நெற்றிவிலாச் சூடு யோட
நீங்குமிப் பிணியதுவும் விரட்ட டைப்பன்
தேரப்பா வெள்ளாட்டுப் புழுக்கை போலத்
திகழவே சாணமிடும் நடந்தி டாதே.



## உள்ளடைப்பன்.



நடக்காது நடப்பதற்கு வகையைக் கேளு
நல்வசம்பு பலங்கால்வெண் பூடுபல மொன்று
முடக்காம லரைத்துமொரு படிவெந் நீரில்
முன்கலக்கிக் கொடுத்துப்பின் நசியஞ் செய்து
அடக்காமற் குடிக்கவெந் நீரைக் காட்டி
அடுத்துப்பின் னிடதுவிலாச் சூடு போட
தொடக்காதிப் பிணியகலும் உள்ள டைப்பன்
தோன்றமயிர் சிலிர்க்கும்வாய் வடியும் நீரே. (104)

## இதுவுமது.

நீர்வடியுந் தூங்கிவிழுந் தீரு தற்கு
நிகழுமரைப் படியகத்திச் சாறி னோடு
சீர்பெற்ற வாவினெய்ப் படிய ரைக்கால்
செப்பவே யீருள்ளி பலம தைந்து
சார்மிளகு பல மொன்றை யரைத்து முன்சொல்
சாறுநெய் யுடன்கலக்கி நாள்மூன் றூட்ட
பேர்பெற்ற நோயகலும் அடைப்ப னென்று
பேசும்நோ யனைத்துக்கோர் மருந்தைக் கேளே. (105)

## சகலஅடைப்பனுக்கு மருந்து.

கேளப்பா கொடிவேலி யெருக்குந் தில்லை
கெடியான திருகுகள்ளி யிந்த நான்கின்
தாளப்பா வேர்பட்டை மிளகு காயம்
தக்கதொரு புலியமடற் கிழங்கி னோடு
வாளப்பா சிறுகுறட்டைக் கிழங்கு தானும்
வகைக்குக்காற் பலமாக நிறுத்தெ டுத்து
கோளப்பா வாராது கல்வத் திட்டு
கோழியவ ரைச்சாற்றில் முன்ப ரைத்தே. (106)

## இதுவுமது.

அரைத்துப்பின் பெருக்கிலையின் பழுப்புச் சாற்றில்
அரைத்துமெழு குப்பதத்திற் பாக்கைப் போலத்
திரைத்திடா துருட்டியே வைத்துக் கொண்டு
செப்புமோர் வேளைக்கோ ருருண்டை விதம்

கரைத்திடா தூமத்தை யிலையில் வைத்து
கருதியதைச் சுருட்டியே கொடுத்தா யானால்
உரைத்தபிணி நீங்குமன்றி மீறி னுக்கால்
உற்றகோ ழிக்காரங் காயந் தானே. (107)

## தேளேறுமுடம்.

தானதுவும் வகைக்குமொரு பலம தாகச்
சாரவதை யிடித்துநீ கொடுத்து வந்தால்
மோனவேற் கரக்கந்த னருளி னாலே
மோதிவரு மடைப்பன்முப் பத்தி மூன்றும்
வேனவெளிக் கப்பாலே விலகிப் போகும்
விளம்புவேன் தேளேறு முடத்தின் செய்கை
ஊனமிலாக் கால்கொண்டு மந்தக் காலில்
உற்றசிறு குளம்படியிற் சூடுண் டாமே. (108)

## இதுவுமது.

உண்டாகும் முகங்களைப்ப தாயி ருக்கும்
உயர்சப்பைக் கொழுந்ததுவும் வற்றிக் காணும்
திண்டாடு மிப்பிணியுந் தீரு தற்கு
செப்பும்வே லிப்பருத்தி யிலைபன் னென்று
கொண்டாடு மிலந்தையிலை தசம தொன்று
குமரனையுந் தோத்தரித்துப் பிடிங்கி வந்து
மண்டலத்திற் போட்டொன்ப திலையெ டுத்து
மாறும லெருக்கலையின் பழுப்பு மூன்றே. (109)

## இதுவுமது.

மூன்றதனைச் சேர்த்துநன் றூய்க்க சக்கி
முன்சப்பை முதற்குளம்பு வரையி லுந்தான்
சான்றவாய் பேசாது மவுன மாகத்
தடிவியே கொடுத்துப்பின் காற்ற டத்திற்
தோன்றக்கால் மாறிப்பூ மியிற்பூ சைக்கச்
சொன்னபிணி நீங்குமற் றொருவி தந்தான்
என்றநல் லெண்ணெயெருக் கிலையின் பாலும்
இரவியுத யத்தின்முன் பாகத் தானே. (110)

### இதுவுமது.

தானப்பா முழங்காலின் மேலே பூசச்
சாந்தமுறும் விடத்திலையை யாதி வாரம்
கோனப்பா கொண்டுவந்து மாற்ற மாகக்
குறிப்புணர்ந்து கால்மாறிப் புதைக்கத் தீரும்
வேனப்பா யிதுவன்றி முன்னே சொன்ன
விடத்திலையைக் கசக்கிமேற் றேய்க்கத் தீரும்
நானப்பா வின்னமொரு செய்கை சொல்வேன்
நடக்காது குளம்பதுவும் வீங்கு மென்னே. (111)

### இதுவுமது.

என்னவே லிப்பருத்திச் சாறு மஞ்சள்
இசையவே மோர்விட்டுக் காய்ச்சி நன்றாய்த்
துன்னவே யுடம்பெங்கும் பூசத் தீரும்
சுக்கொன்று மிளகரைதிப் பிலிவ சம்பு
நன்னத்தை வேளைவேர் குப்பை மேனி
நல்வேரும் வகைக்குக்கால் பலமீ தெல்லாம்
முன்னமரைத் தெடுத்துப்பாம் பரணை ரெண்டை
முறையாகப் பிடித்துகுட லெடுத்து விட்டே, (112)

### இதுவுமது.

விட்டுமரைப் படியாம்வேப் பெண்ணெய் தன்னில்
வேகவைத் தரணைதனை யெடுத்துப் போட்டு
தொட்டுமுன் னரைத்ததையு மிதிற்க லக்கிச்
சுகமாக மேனியெங்குந் துவாலை போட்டு
மட்டுவெந் நீரதனைக் குடிக்கச் செய்ய
வல்லபிணி யகன்றுவிடு மின்னோர் செய்கை
மெட்டுகாற் காலதுவுந் தூண்போல் வீங்கும்
விலகமணத் தக்காளி யிலையி னோடே. (113)

### இதுவுமது.

ஓடப்பா வேம்பிலுப்பை யிருபிண் ணாக்கும்
உடனரைத்து யிரண்டுபடி கோமி யத்தில்
நாடப்பா குழப்பிகாற் காலும் பூச
நலமாகும் விரலிமஞ்சட் சிறிய தாக

தேடப்பா வலதுகால் முடம தானல்
செப்பிடது கொம்பைமுத் தாமுஞ் சுற்றி
மாடப்பா யிடதுகொம்பு முடம தானல்
வலதுகொம்பை மூன்றுதரஞ் சுற்று வாயே. (114)

## வெதுப்பு.

சுற்றியே தொழுவாசற் புதைக்க நன்றும்
சொல்லுவே னின்னமொரு முறைதா னப்பா
வெற்றியாங் கொடிவேலி யரைத்துக் கோழி
விரும்பியிடு முட்டைதனை யுடைத்து விட்டு
பற்றிமுக மன்றிமற் றிடத்திற் பூச
பாங்கில்லா நோயகலும் வெதுப்பின் செய்கை
சொற்றிடவாய் கண்ணதனில் வடியும் நீரு
தொடர்ந்தமயிர் சிலிர்த்துடம்பு புண்ண தாமே. (115)

## இதுவுமது.

ஆமப்பா கெருடனென்ற கொடியி னேடு
அரிதான விராழியிலை கோழி யொன்று
தாமப்பா நாழிமோர் நாழிக் காடித்
தான்விட்டு மேயிடித்து நாள்மூன் றாட்டி
வாமப்பா குடிக்கநீர் விடாமற் கட்டி
வைத்திருக்கச் சுகமாகு மின்ன மொன்று
நாமப்பா சொல்லுகிறேம் மருதம் பட்டை
நாவற்பட் டையுமிடித்துக் காடி சேர்த்தே. (116)

## இதுவுமது.

சேர்த்துமே காய்ச்சியதைப் பனியில் வைத்து
திடமாகக் கொடுத்திடவே சாந்த மாகும்
பார்த்திடுவாய் வெங்காயம் பலம தைந்து
பாங்கான விடத்திலையு மாங்காய் போல
நேர்த்தியா யரைத்துக்கா டியிற்க லக்கி
நினைவாகக் கொடுத்திடவே சுகம தாகும்
சீர்த்தியாற் றலரியிலைப் பிடியு மூன்று
சீரகமோர் பலமாமீ ருள்ளி யைந்தே. (117)

### இதுவுமது.

ஐந்துபலந் தணையிடித்துக் கவள மாக
அடுத்துநீ கொடுத்திடவே குணம தாகும்
முந்துபொன் னாங்காணி சமூலந் தன்னை
மொழியும்வெந் தயமிட்டுப் பிசைந் திறுத்து
உந்துமீ ருள்ளியிரு பலமாஞ்சீ ரகமும்
உற்றரைக்காற் பலமரைத்துக் கூடச் சேர்த்து
வந்தெருமை மோருமொரு படியும் விட்டு
வளமாகக் கொடுத்திடவிந் நோயும் போமே. (118)

### இதுவுமது.

போமப்பா வயிரைமீன் படிதா னென்று
புகல்சங்கம் பட்டைமாங் காயைப் போல
நாமப்பா வரைத்துமொரு படியா மோரில்
நலமாகக் கொடுத்திடவே சாந்த மாகும்
ஓமப்பா வில்வயிலைச் சாறெ டுத்து
உற்றவீ ருள்ளிபழம் புளிய ரைத்துத்
தாமப்பா நல்லெண்ணெ யுடன்க லந்து
தானஞ்சு படிகாடித் தெளிவை விட்டே. (119)

### இதுவுமது.

விட்டதனைப் புகட்டநன்றும் பின்னுஞ் சொல்வேன்
வினவுதுத்தி கற்பூர வல்லிமா தளையும்
திட்டமுட னிதனிலைமா தளையின் பிஞ்சுந்
திகழ்வகைக்குப் பிடியொன்ற தாயி டித்து
இட்டமுடன் கவளமாய்க் கொடுக்கத் தீரும்
இயம்புவேன் வேறுசெய்கை தண்ணீ ராகச்
சட்டமுட னேகழிந்து மேனி வற்றித்
தானசதி யாயிருக்குந் தீரு தற்கே. (120)

### இதுவுமது.

தீரவே கற்றாழை தனைய ரிந்து
தீமூட்டி வேகவைத்துத் தேங்காய் போல
நேரவே யரைத்துக்காற் பலங்கல் லுப்பை
நினைவாயோர் படிமோரிற் கலக்கி யூட்டத்

தூரம்போ மிப்பிணியு மின்னோர் செய்கை
சொல்லவடிக் கடியெருகு மிந்த நோயும்
சேரவே யுலர்தீனி தின்றி ருந்து
திடீரெனவே பசும்புல்லைத் தின்ற தாலே. (121)

## இதுவுமது.

தின்றதினாற் குளிர்ச்சியுண்டா மிரவு தன்னில்
சிறந்தவெட்ட வெளிகட்டி வைப்ப தாலும்
நன்றன்றி வந்ததிந்த நோயுந் தீர
நவிலுவேன் பசும்புல்லைத் தின்றுண் டானால்
நின்றதுவும் விலகுதற்கு வழியைச் செய்து
நீக்குகுளி ரீரத்தி னாலுண் டானால்
ஒன்றவே கூரைக்குள் கட்டி வைத்து
உடம்பிற்கு டுண்டாக நன்றாய்த் தேய்த்தே. (122)

## இதுவுமது.

தேய்த்ததன்மேற் கம்பளத்தைப் போட்டு மூடு
திட்டமா யெருக்கலதும் நிற்கா விட்டால்
வாய்த்தவபீ னரையுடனே மூன்று வீச
மாங்தோலாக் கஞ்சியரைப் படியுங் கூட்டி
தோய்த்திடுவாய்ச் சாராயம் படிய ரைக்கால்
தொகுத்துபத்து நாழிகைக்கோர் தரங்கொ டுக்க
எய்த்தபிணி யகன்றுவிடு மின்னோர் செய்கை
இயம்புவேன் மூக்கில்நீர் வடியும் பாரே. (123)

## இதுவுமது.



பாரப்பா செங்கமங்க லாயெ ருக்கும்
பாங்கதற்கு தென்னம்பூக் காடி விட்டு
சேரப்பா விடித்துபடிச் சாறெ டுத்துச்
சிறக்கவே கொடுத்துவிலாச் சூடு போட
நேரப்பா யின்னமொரு செய்கை சொல்வேன்
நிகழிரையு மரைவாயைக் கொண்டு மேயும்
சீரப்பா மயிர்சிலிர்க்கும் வாய்நீர் சிந்தும்
சிறுகவே யடுத்தடுத் தெருகுந் தானே. (124)

## இதுவுமது.

தான்பெரிய கிலுகிலுப்பைச் செடிச மூலந்
தனையிடித்துச் சாறுகாற் படியெ டுத்து
சான்ருகக் கொடுக்கநல மின்னோர் செய்கை
சாற்றுவே னிரையுமரை வாயால் மேயும்
தோன்றவ யிறுஞ்சிறிது மந்த மாகும்
துலங்குங்கண் கலங்கிக்கண் பட்டை வீங்கும்
என்றவுடம் புங்கொதிக்கும் மயிர்சி லிர்க்கும்
இரண்டலது மூன்றுநா ளானுற் கேளே. (125)

## இதுவுமது.

கேளப்பா வாயில்நுரை தள்ளுந் தீரக்
கெடியான விஞ்சிசீ ரகமு மேலம்
நாளப்பா வெற்றிலையும் வகையொன் றுக்கு
நாடுமொரு பலம்வசம்பு காற்ப லந்தான்
சூளப்பா வொன்ருகச் சேர்த்த ரைத்து
சொற்பருத்தி விதைப்பாலும் படிய தொன்றிற்
கோளப்பா வின்றியதைக் கொதிக்க வைத்துக்
குணமாக விருபோது கொடுக்க நன்றே. (126)

## இதுவுமது.

நன்றதுவா மின்னமொரு செய்கை சொல்வேன்
நாட்டமுள கண்சிவக்கும் கால்ந டுங்கும்
அன்றதன்வாய் நீர்வடியும் நாவைப் பார்க்கில்
அதிலிரண்டு நரம்புமுட மாயி ருக்கும்
நின்றதனைக் கதிர்கொண்டு குத்தி ரத்தம்
நீக்கியே மிளகுப்புந் தேய்க்கத் தீரும்
வென்றிடவே யின்னமொரு வகையைச் சொல்வேன்
வெதுப்படக்கி யிலைகரிய பூலாவி னிலையே. (127)

## இதுவுமது.

இலையிரண்டும் வெங்காயங் கருப்புக் கட்டி
இசைலவங்கப் பட்டையா வாங்கொ ழுந்து
நிலையாக விடித்துநல் லெண்ணெய் கூட்டி
நீகொடுத்தே யாவரையி னிலையைத் தட்டி

மலையாம ஆறவைத்துத் துவாலை போட்டு
மனையதனிற் கட்டிவைத்துக் காடித் தண்ணீர்
அலையாமற் காட்டிடவே நோயுந் தீரும்
அப்பனே கழிச்சல்வெதுப் பதைச்சொல் வேனே. (128)

## கழிச்சல் வெதுப்பு.

சொல்லவடிக் கடியெருகுஞ் சவ்வுசவ் வாய்த்
தோன்றுமத னுடம்பெங்குந் தடிக்குந் தீர
நல்லதொரு வீழிவிடத் திலைவ கைக்கு
நாடியரைக் கால்வீசை யாய ரைத்து
வெல்லவே பழங்காடிப் படிய தொன்றில்
விரும்பியடிக் கடிகொடுத்து வந்தா யானல்
வல்லபிணி யகன்றுவிடுங் கடுவெ துப்பின்
வகையதுவு முக்கிமுக்கிக் குன்றும் பாரே. (129)

## கடுவெதுப்பு.

பாரப்பா தீவனமுந் தின்றி டாது
பகரும்வாய் நீர்வடியுஞ் செவியுந் தாழும்
தேரப்பா வெருகுவதிற் சலமி ரத்தந்
திகழ்துண்டு துண்டுசவ்வு சவ்வாய் வீழும்
சேரப்பா நாற்றமுண்டாந் தலையைப் பூமி
திடமாக நட்டுநிற்குந் தீரு தற்கு
நேரப்பா மிளகொத்த வத்திப் பிஞ்சும்
நீர்ப்பூலாங் கிழங்குமா வரையின் பூவே. (130)

## இதுவுமது.

பூவதைச்சேர்த் திடித்துப்பச் சரிசி மாவும்
பொருந்தெருமை மோர்கலக்கி யூட்டத் தீரும்
மேவவதற் கின்னமொன்று லவங்கப் பட்டை
விரும்புமதி மதுரம்வெந் தயமுஞ்சீ ரகமும்
ஏவவகைக் கரைப்பலமீ ருள்ளி தானும்
இசையுமொரு படிகொடுப்பை தென்னம் பூவும்
தாவவகைக் கரைத்ததுமாங் காயைப் போல
தானுமுவ் வீசம்நல் லெண்ணெய் கூட்டே. (131)

## ஒழுக்குவெதுப்பு.

கூட்டியதை யூட்டிப்பின் கம்பங் கஞ்சி
கொடுத்திடுவா யுருமத்திற் சுகம தாகும்
நாட்டிடுவே னொழுக்குவெதுப் பதனின் செய்கை
நவிலவடிக் கடியெருகுஞ் சவ்வு சவ்வாய்
தாட்டிகமா முடம்பெங்குந் தடிக்குந் தீர
சாற்றுவிடத் திலைவிழிக் கப்பரையி னிலையும்
கேட்டிடுமாங் காயளவு மோர்வ கைக்குக்
கிட்டியரைத் துப்பழங்கா டியிற்க லக்கே. (132)

## பெருவெதுப்பு.

கலக்கியே கொடுத்துமடி வயிற்றிற் சூடு
கணக்காகப் போட்டிடவே சுகம தாகும்
பெலக்கவரும் பெருவெதுப்பு நோயின் செய்கை
பேசுங்கா லிரையுமரை வாயாய்த் தின்னும்
துலக்கக்கண் கலங்கிக்கண் பட்டை வீங்கும்
தொல்வயிறு மந்தமுறு மயிர்சி லிர்க்கும்
இலக்கவுட லங்கொதிக்கு மூன்று நாளில்
எருகும்போ தேநுரைக்குந் திரு தற்கே. (133)

## இதுவுமது.

திரச்சீ ரகமிஞ்சி யேலம்வெற் றிலையும்
செப்புவகைக் குப்பலமொன் றும்வ சம்பு
சேரவே மிளகுவகைக் குப்ப லங்கால்
திட்டமா யிவையெல்லா மரைத் தொன்றாக
நேரவே பருத்திவிதைப் பாலுமொரு படியில்
நீகலக்கிக் கொதிக்கவைத் திரண்டு போது
சாரவே கொடுபின்சீ ரகமுங் கோஷ்டம்
தக்கவதி மதுரஞ்செங் கழுநீ ரோடே. (134)

## இதுவுமது.

ஓடப்பா வீருள்ளி வகையொன் றுக்கு
ஓங்கவே பலமொன்று லவங்கந் தானும்
நாடப்பா பலங்காலாம் வெதுப் படக்கி
நற்பருத்திப் பூப்பிஞ்சோ டத்திப் பிஞ்சு

தேடப்பா கருவேலங் கொழுந்தும் வீழி
திகழுமா தளம்பிஞ்சு நாம தாளி
சூடப்பா கொடுப்பையா வரையின் பூவும்
சொல்வகைக்குப் பிடியொன்ற தாயெ டுத்தே. (135)

### இதுவுமது.

எடுத்துழுந்து படியுமரை சேர்த்த ரைத்து
இட்டிடவிங் நோயகலு மின்னோர் மார்க்கம்
தொடுத்துரைப்பே னுலத்தி மரத்துப் பட்டை
சொன்மருதம் பட்டையுடன் நெல்லிப் பட்டை
அடுத்துகுருந் தட்டிசமூ லம்வ கைக்கு
அரியபல மொன்*றுதிரிப் பலமு மூன்று
தடுத்திதனைத் தரித்து*தசப் படிநீர் விட்டுத்
தானுமடுப் பேற்றிநன்றாய்க் கொதிக்க வைத்தே. (136)

### மூலவெதுப்பு.



வைத்தெடுத்தோர் போதிரண்டு படித்தண் ணீரை
வளமாகக் கொடுத்திடது விலாவிற் சூடு
நத்தியிட் டிடநலமுண் டாமூல வெதுப்பு
நடைதளரு முடற்கொதிக்கு மிரைதின் னாது
சித்தியுறும் நாக்குவழு வழுப்ப தாகும்
சிவப்பாக நீர்விடுக்கு மயர்ந்து வீழும்
பத்திசில போதெருகும் நாற்ற முண்டாம்
பகரதற்குச் சீரகமு மாங்காய் போலே. (137)

### இதுவுமது.

மாங்காயி னளவரைத்துக் கோவைத் தண்டில்
வருமிலையை யிருமாங்கா யளவ ரைத்துப்
பாங்கான பசுவின்பாற் படிய தொன்றில்
பண்பாகக் கொடுக்கநல மின்ன மொன்று
சோங்கான சீரகமும் வெள்ளைப் பூண்டு
சொல்வகைக்குப் பலமதொன் றெட்பிண் ணாக்கு
ஓங்குபல மைந்திடித்து முருக்கின் சாறு
ஒருழக்குப் புழுங்கரிசி யிரண் டுழக்கே. (138)

*உதிரி—துளசி. *தசம்—பத்து.

## இதுவுமது.

இரண்டுழக்கு வெந்ததொரு சாதங் கூட்டி
இசைவாகக் கொடுத்திடவே சாந்த மாகும்
மிரண்டிடா தின்னமொரு வகையைச் சொல்வேன்
விளம்புகடுக் காய்த்தோடு மேழ தாகும்
திரண்டதோ ருரலின்பச் சிலையும் வேரும்
செப்புமீர் கடம்புத்தோல் மாங்காய் போல
முரண்டிடா திடித்திரண்டு படித்தண் ணீரில்
முன்கொதிக்க வைத்ததனைக் கொடுத்துப் பின்னே. (139)

## குடல் வெதுப்பு

பின்முதுகு நெற்றியதிற் சூடு போடப் [வேன்
பிணியகலுங் குடல்வெதுப்பின் செய்கை சொல்
முன்னமே சிவந்துகண் பீளை சாடும்
முக்கியமாய்க் கண்வாயில் வடியும் நீரு
பின்னெருகுந் தீருதற்கு விபாங் கேளு
பிறங்குமீ ருள்ளியதும் பலமி ரண்டு
நன்னகுருந் தொட்டிவேர்ப் பட்டை யோடு
நல்லசத குப்பைகடற் கனிவ கைக்கே.




## சில் வெதுப்பு.

கனிவகைக்கு பலமரையாந் தென்னம் பூவும்
கதித்ததொரு வீழியிலை வகையொன் றுக்குத்
தனித்தனியே மாங்காயி னளவ ரைத்து
தக்கமோர்ப் படியிரண்டிற் கலக்கி யூட்டப்
புனிதமாஞ் சில்வெதுப்பு செய்கை சொல்வேன்
பொருத்தமயிர் சிலிர்க்குங்கண் பீளை சாடும்
நனியான வுடம்புசுடுங் குராவி நிற்கும்
நலவாயு மசைப்போடா தெருகும் பாரே. (141)

## இதுவுமது.

பாரப்பா தீரவதி மதுர மேலம்
பாங்கான கிராம்புசுக்கு லவங்கப் பட்டை
சேரப்பா வகைக்குமரைப் பலம தாக
செப்பத்திப் பிஞ்சுபடி கால தாகும்

நேரப்பா யிலந்தையிலைப் பிடிய தொன்று
நீயரைத்துப் பசுவின்பாற் படிய தொன்றில்
சீரப்பா கலக்கியிட் டிடவே தீரும்
செப்புவே னின்னமொரு வகையைக் கேளே. (142)

## இதுவுமது.

கேளப்பா வத்திப்பிஞ் சதன்கொ ழுந்து
கிளர்சுக்கு மிளகுள்ளி யேலஞ்சீ ரகமும்
நாளப்பா வதிமதுரம் மாச்சக் காயும்
நல்லதோர் கிராம்புகற் றாழஞ் சோறு
ஆளப்பா யிவையுமரைத் தெருமை மோரில்
அன்பாக வேகலக்கிப் புகட்டத் தீரும்
வேளப்பா யின்னமொரு முறையைச் சொல்வேன்
வெங்காய மிலந்தையிலை நெல்லுங் கூட்டே. (143)

## சீதளவெதுப்பு.

கூட்டியரைத் தேகழுநீர் தனிற்க லக்கி
கூசாமற் கொடுத்திடது விலாவிற் சூடு **கூ௫**
தீட்டிடநோ யகலுஞ்சீ தளவெ துப்பு
செய்கைசொல்வே னுடம்பெங்குங் குளிர்ந் திருக்கும்
நாட்டிடக்கண் குழியாகுஞ் செவியுந் தாழும்
நாட்சென்றால் தண்ணீராய்ப் பீச்சு மப்பா
தாட்டியமுண் டாவதற்கு ஓமமொரு பலமாம்
தக்ககடுக் காயேழு கரியசீ ரகமே. (144)

## இதுவுமது.

கரியசீ ரகம்வசம்பு கடுகு தானும்
காற்பலம தாம்வகைக்கு நாம தாளி
அரியசா ரணத்தியிலை வகைக்கு மாங்காய்
அளவுமஞ்ச ணத்தியிலைப் பிடியு மூன்று
தெரியவரைத் தேபுளியு மரைப்ப லத்தைத்
தெளியவொரு படிகாடி தனிற்க ரைத்து
பிரியமுடன் கலக்கியே கொடுக்கத் தீரும்
பேசுவேன் மந்தவெப்பின் செய்கை தானே. (145)

## மந்தவெதுப்பு.

தானகத் தீவனந்தின் னுதுமயிர் சிலிர்க்கும்
தக்கவாய் நீர்வடியுந் தூங்கி வீழும்
வேனகத் தீருதற்கு யெள்ளுமரைப் படியை
விரும்பியிடித் தொருபடியாம் பசுவின் பாலில்
வானகக் கலக்கியிட் டிடநோய் தீரும்
வழுத்தக்கே ளின்னமொரு பாகந் தன்னை
கோனக மிளகுபல மொன்றி னோடு
கூறுவெண் பூண்டுபல மிரண்டைச் சேர்த்தே. (146)

## அழல்வெதுப்பு.

சேர்த்தகத்தி யிலைச்சாறு படிகா லோடு
தெளிவான நெய்யுமவ் வாறு கூட்டிப்
பார்த்திடவே யரைத்தொன் ருய்க் கலக்கி யூட்டிப்
பாங்காக விலாவிரண்டிற் சூடு போட
நேர்த்தியாம் அழல்வெதுப்பு செய்கை சொல்வேன்
நீமுடம்பு தடித்துசுரஞ் சிரங்குண் டாகும்
பூர்த்தியின்றி யேயெருகுந் தீரு தற்குப்
புகலசத குப்பைபல மரைய தாமே. (147)

## இதுவுமது

அரையுடனே யகத்தியத்திப் பட்டையதி மதுரம்
அரியதென்னம் பூவகைக்கு மாங்காய் போல
அரைத்துமொரு படிகாடி தனிற்க லக்கி
அன்பாகக் கொடுத்திடவிந் நோயுந் தீரும்
உரைத்திடு வேனின்னமொரு செய்கை தன்னை
உற்றகண் சிவப்புற்று பீளை சாடும்
நிரைத்தநீர் வடிந்துதலை கவிழ்ந்து நிற்கும்
நீண்டவுட லெங்குங்கொப் பளம தாமே. (148)

## இதுவுமது.

கொப்பளமுண் டாமேனி தலைந டுங்கும்
கூசவே நாக்கதனிற் காசைப் போல
தப்பாம லேதடிக்குஞ் செருமி நிற்கும்
தானகலக் கற்பூர வல்லிச் சாறு

ஒப்பக்கற் றூழஞ்சோ றுடனே தாழி
யோங்கிலைச்சா றும்வகைக்குப் படிகா லாக
செப்பகுருந் தட்டியிலைக் குழியின்றூ மரையும்
சேரவொரு வகைக்குமாங் காயைப் போலே. (149)

## இதுவுமது.

போலவதி மதுரமோ டோம மேலம்
புகலவகைக் கரைப்பலமீ ருள்ளியிரு பலமாம்
சாலவரைத் திருபடிகா டியிற்க லக்கித்
தான்கொடுக்க வேநலமா மின்ன மொன்று
கோலப்புல் லுருவிமாங்கா யளவ வைத்து
குணவாழைக் கனியுமிரு பத்து ரித்து
சீலமுள விளநீரும் படியி ரண்டிற்
சேர்த்ததனைக் கொடுத்திடவிந் நோயும் பொமே. (150)

## இதுவுமது.

போமப்பா யின்னமொரு செய்கை சொல்வேன்
பொத்துவடிந் திடுமுடலஞ் சூட தாகும்
தாமப்பா முதுகுடனுஞ் சுழித்து வாங்கும்
தானுமிரை தின்னாது கிடைகி டக்கும்
நாமப்பா வதற்கத்திப் பட்டை யோடு
நல்லநா வற்பட்டை மருதம் பட்டை
ஆமப்பா குருந்தட்டி வேர்வ கைக்கு
ஐந்துபடி வீதந்தா னிடித்தெ டுத்தே. (151)

## இதுவுமது.

எடுத்ததனைக் காடியதி லூறப் போட்டு
இறுத்ததனைக் கொடுத்திடவே சாந்த மாகும்
விடுத்திடா தின்னமொரு முறையைச் சொல்வேன்
விளங்குகட்டுக் கொடியிலையுந் தாழியிலை யோடு
கடுத்திடாக் கரிமுசுட்டை யிலைவ கைக்குக்
காற்படிச்சா றெடுத்தெருமைப் பாலுமரைப் படியும்
தடுத்திடாப் பருத்திவிதைப் பாலுமவ் வீதம்
தான்சேர்த்துக் கொடுக்கநோய் சாந்த மாமே. (152)

## இரத்த வெதுப்பு

சாந்தமா மினியிரத்த வெதுப்பின் செய்கை
தனித்திரத்த மாய்ப்பீச்சு மாடை போலே
எந்தரத்தத் துள்ளிருக்கும் காட்சென் றுக்கால்
இசைந்தவயி றிரையுமீன் நாற்ற முண்டாம்
போந்தபிணி தீர்க்கிடத்தான் லவங்கப் பட்டை
பொருந்தவதி மதூரமொடு வெங்கா யந்தான்
மாந்தவகைக் கிருபலஞ்சீ ரகமு மேலம்
வழுத்துமரைப் பலமாக வகையொன் றுக்கே. (153)

## இதுவுமது.

ஒன்றுடனே மாதளேயின் பிஞ்சு பத்து
உற்றகுழித் தாமரையா வரைக்கொ ழுந்து
நின்றுவகை தனக்குமாங் காயைப் போல
நிதானமதாய்த் தனித்தனியே யரைத்துக் கொண்டு
நன்றுநற் கோழிமுட்டைப் பத்து டைத்து
நல்லெண்ணெய் காற்படியுங் கூட விட்டு
வென்றுமிரு படிகாடி தனிற்க லக்கி
விரைந்துகொடுத் தேமுதுகிற் சூடு போடே. (154)



## இதுவுமது.

போடவே சுகமாகு மின்னோர் செய்கை
பொருந்துதனித் திரத்தமதாய்ப் பீச்சும் பாரு
ஓடவத்திப் பட்டையிரு பலத்தி னோடு
உற்றமயிர் மாணிக்கம் பலமுங் காலாம்
நாடவட்டத் துத்திபிண்டு பிடிவ கைக்கு
நங்கிடித்து மோரதனி லூற வைத்து
தேடமறு நாளரைத்துப் படியா மோரில்
திடமாகக் கொடுத்திடநோய் சாந்த மாமே. (155)

## சீதவெதுப்பு.

ஆமப்பா யின்னங்கல் லத்திப் பிஞ்சு
அதுபத்துப் பலம்வீழி பிடியும் நான்கு
தாமப்பா விடித்தமுப் படியாங் காடி
தனிற்கொடுத்து முதுகிற்சூ டிடநோய் தீரும்



வேமப்பா வினிச்சித வெதுப்பின் செய்கை
விளம்பெச்ச வாயிற்கற் ருழஞ் சோறு
வாமப்பா போல்வடியுங் கால்ந டுங்கும்
வகையதற்கு முருக்கிலையின் சாறுபடி யொன்றே. (156)

## இதுவுமது.

ஒன்றப்பா காடிபடி மூன்றி னோடு
உற்றவெளிச் சிப்பட்டைப் பலமி ரண்டை
நன்றரைத்துக் கலக்கியதைக் கொடுத்துப் பின்பு ௫௨
நவிலிடது விலாவிற்கு டடநோய் தீரும்
வென்றுவரும் பிணிசெய்கை சாணி யோடு
வெறுப்பான ஜலம்வீழுந் தீரு தற்கு
குன்றுத வசம்பதுவும் பலம ரைக்கால்
கூறெள்ளுப் படியரையா மிரண்டுஞ் சேர்த்தே. (157)

## பிறளிவெதுப்பு.

சேர்த்தரைத்துக் கவுதும்பைச் சாறுபடி காலில்
திடமாகக் கொடுத்திடவிந் நோயுந் தீரும்
பார்த்திடுவாய் பிறளியென்ற வெதுப்பின் செய்கை
பகர்சாணி யுடனிரத்தங் கலந்து வீழும்
நேர்த்தியா கிடக்குழித்தா மரையினிலை யோடு
நிகழ்மாங்கா யளவரைத்துக் கொடுக்க நன்றாம்
சீர்த்தியா மின்னமொன்று தேக்கின் பட்டைத்
திடச்சாறு தேங்காய்ப்பால் வகைக்குமரைப் படியே (158)

## இதுவுமது.

படியொன்று பசுவின்பா லூற வைத்து
பாங்காக மறுநாளிற் கொடுக்க நன்றாம்
படிகாடி தனில்நிலவேம் பதுவுமாங் காய்ப்
பருமனரைத் தேகொடுக்கச் சுகம தாகும்
படியாம்ப லிலைபுளியு மரைத்துக் காடிப்
பாங்காக மூன்றுநா ளூட்டத் தீரும்
படியிலட மழைவெதுப்பைப் பகரக் கேளு
பார்க்குங்கண் ணீர்வடியும் பீளை யுண்டே. (159)

## அடமழை வெதுப்பு.

உண்டிடும்வாய் புண்ணாகும் நடந்தி டாது
உற்றகண் குழியாகுந் தீரு தற்கு
விண்டதோர் வீழியிலை தாழியிலை யோடு
விரும்புஞ்சீ ரகமரைத்துக் காடி தன்னில்
மண்டிடவே கொடுத்துநீர் குடியா மற்றான்
வைத்திருந்து சிந்நேரஞ் சென்ற பின்பு
பண்டுமுன் சேர்த்திருந்த புளித்த நீரைப்
பாங்காகக் குடிக்கச்செய் திடநோய் போமே. (160)

## உதிரவெதுப்பு.

போமப்பா வினியுதிர வெதுப்பின் செய்கை
புகலுடம்பிற் சிரங்குண்டாம் புருவம் வீங்கும்
தாம்ப்பா தீவனமுந் தின்றி டாது
சாணம்போ டாதுவாய்ப் புண்ண தாகும்
வேமப்பா மூக்குத்தான் வேர்க்குந் திர
விளம்புநெல்லிக் காயதுவும் பலந்தான் மூன்று
ஏமப்பா சீரகமும் பலமி ரண்டு
இயலோமம் படியரைக்கா லிவையெல் லாமே. (161)

## இதுவுமது.

இவையதனில் நெல்லிக்காய் தனையி டித்து
இயலுஞ்சா றெடுத்துமற்ற மருந்த ரைத்து
*கவையாகக் கலக்கியிட் டிடநோய் தீரும்
களறுவே னின்னமொரு மார்க்கந் தன்னை
சுவையுற்ற வதிமதுர மத்திப் பட்டை
சுகமுறவே *கடற்கனியுந் தென்னம் பூவும்
*நவையிலாச் சதகுப்பை சேர்த்த ரைத்து
நற்காடி தனிற்கலக்கி யூட்டு வாயே. (162)

## இதுவுமது.

ஊட்டநல மாமற்றோர் வகையைக் கேளு
உற்றதோர் மாம்பட்டை நாவற் பட்டை
தேட்டநீர்ப் பூலாத்திப் பட்டைபுளி யிலையும்
செப்பிடுநன் முசுட்டையிலை நாழி நெல்லை

*கவை—தேவை, *கடற்கனி—சமுத்திராப்பழம், *நவை—குற்றம்

வாட்டமிலா திடித்துச்சேர்த் தரைத்தொன் ருக
வல்லபசு வுக்கானு லெருமை மோரும்
நாட்டிலெரு மைக்கானுற் பசுவின் மோரும்
நவின்றதெலாங் கலக்கியே யூட்ட நன்றே. (163)

## இதுவுமது.

நன்றப்பா மிளகுசுக்கு வெள்வெங் காயம்
நல்லுள்ளி சீரகமு மரைத்துத் தண்ணீர்
அன்றப்பா கலக்கியே கொடுத்துப் பின்பு
அரியவிலா விரண்டிற்கு டிடநோய் தீரும்
வென்றப்பா யின்னமொன் றகத்திப் பட்டை
மேலுமா வரைப்பட்டை மருதம் பட்டை
கன்றப்பா பருத்திப்பிஞ் சுடனே கொட்டை
கருதிதென்னம் பூவரைத்துக் காடி யூட்டே. (164)

## இதுவுமது.

ஊட்டசுக மாமின்னோர் செய்கை சொல்வேன்
உற்றுமடிக் கடிநீருஞ் சிறுத்தி ரங்கும்
தேட்டமாங் கண்சிவக்கும் வாய்நீர் சிந்தும்
தீருதற்கு மிளகதுவும் பலம தொன்று
நாட்டவெங் காயங்காற் பலம ரைத்து
நற்பசுப்பா லிரண்டுபடி தனிற்க லக்கி
வாட்டமற மூன்றுநா ளூட்டத் தீரும்
வகைவேறு முசுட்டையிலைப் பிடியு மூன்றே. (165)

## இதுவுமது.

மூன்றெருநா ரத்தங்கா யளவுநா யுருவி
முன்பழம்பா சியுங்கூட்டி யரைத்து நன்றாய்த்
தோன்றவிரு படிகாடி யதிற்க லக்கிச்
சுகமாகுங் கொடுக்கமற் றொன்றைக் கேளு
என்றயிரை மீன்சங்கம் பட்டை கூட்டி
இரண்டையவித் தரைத்துமோ ரிற்க லக்கிச்
சான்றதனைக் கொடுத்திடவே சாந்த மாகும்
சாற்றுவே னின்னமொரு செய்கை கேளே. (166)

## இதுவுமது.

கேளப்பா திகைக்குங்கண் பீளை சாடும்
கிட்டியதற் கொருபலமாங் கரியசீ ரகமும்
நாளப்பா முத்தெருக்கஞ் செவியிலையைத் தானும்
நான்குபிடி சேர்த்தரைத்துக் கலக்கிக் காடி
வேளப்பா மூன்றுநா ளூட்டத் தீரும்
வெற்றிலையும் பலம்பத்து மிளகுபல மொன்று
வாளப்பா வரைத்தெருமை வெண்ணெய் தன்னில்
மத்தித்து மூன்றுநாட் கொடுத்துப் பாரே. (167)

## இதுவுமது.

பார்த்திடவந் நோயகலு மற்றோர் செய்கை
பகரக்கே ளுடம்பிற்கொப் பளங்க ளுண்டாய்
நேர்த்தியின்றிப் பின்னுரியும் நாக்குப் புண்ணும்
நீர்வடிந்து சிவக்குங்கண் பீளை சாடும்
சேர்த்தியாந் தலைநடுங்குந் தீரு தற்கு
செப்புகற் பூரவல்லிக் குருந்தட்டி யிலையும்
சீர்த்திகுழித் தாமரையி னிலையுங்கற் றாழைச்
சேர்சமூ லம்வகைக்கு மாங்காய் போலே. (168)

## இதுவுமது.

போலநற்சீ ரகமுமதி மதுர மோமம்
புகலெள்ளு வெங்காயஞ் சேர்த்த ரைத்து
சாலமோ ரதிற்கலக்கிக் கொடுக்கத் தீருந்
தானதுவுந் தீராமல் மீறி னுக்கால்
கோலபுளி யோடுபச ளைப்பழமுங் கூட்டிக்
கூறிளநீர் மட்டைத்தண் ணீரி லூட்டத்
தூலசுக மாமின்னோர் முறையைக் கேளு
சுவைநாவற் பட்டைமரு தம்பட்டை யோடே. (169)

## இதுவுமது.

ஓடகுருந் தட்டியிவை யிடித்துக் காடி
ஊறவிட்டுக் கலக்கியே கொடுக்கத் தீரும்
நாடவின்ன மொன்றுபுகை யிலையி னோடு
நற்கட்டுக் கொடிமுசுட்டை யிலையி ரண்டும்

தேடவே கழற்சியிலை சேர்த்தி டித்து
திடப்பருத்தி விதைப்பாலும் மோருங் கூட்டிச்
சாடவே கொடுத்துமுது கதனிற் சூடு
தாக்கவிந் நோயகலு மற்றுமொன்றே.

## இதுவுமது.

ஒன்றுவிடத் திலைவிளாங் காயைப் போல
உகந்தரைத்து வெண்ணெயவ் வீதஞ் சேர்த்து
நன்றுகாற் படிமோரிற் கலக்கி மூன்று
நாளூட்டி வெந்நீரை யாற வைத்து
நின்றுபத்து நாழிகைக்குப் பின்னே காட்ட
நீங்குமிப் பிணியதுவு மற்றோர் செய்கை
குன்றுமணி நிறம்போலக் கண்சி வக்கும்
கூறக்கண் பீளையுண்டாம் வடியும் நீரே. (171)

## இதுவுமது.

நீரப்பா தலைகவிழ்ந்து நடுக்க முண்டாம்
நேர்நாக்குக் காசுகா சாக வேகும்
சேரப்பா வுடலங்கொப் பளங்க ளுண்டாய்ச்
சிதறியது வுரியுமிகச் செருமி நிற்கும்
சீரப்பா வுடம்புசுடுந் தீரு தற்கு
செப்பத்திப் பட்டையொடு நாவற் பட்டை
வீரப்பா வகத்தியுடப் பட்டையொரு நிறையாய்
மிக்கவரைத் தேகாடி கலக்கி யூட்டே. (172)

## இதுவுமது.

ஊட்டசுக மன்றிமற் றொன்று ரைப்பேன்
உற்றபுளி யிலையுமீ ருள்ளிசத குப்பை
நாட்டவே *கடற்கனியுந் தென்னம் பூவும்
நற்குருந்தொட் டியுமரைத்தே யெருமை மோரில்
தேட்டமதா கக்கலக்கிக் கொடுத்துப் பின்பு
செப்பிஞ்சி யிலையும்வெங் காயங் கூட்டி
ஈட்டமாய்த் தட்டியதை நசியஞ் செய்து
இடதுவிலாச் சூடிடவே சுகமுண் டாமே. (173)

*கடற்கனி—சமுத்திராப்பழம்.

## இதுவுமது.

உண்டாகு மற்றுமொரு வகையு ரைப்பேன்
உற்றகுருந் தொட்டிகற் றாழஞ் சோறும்
கொண்டாடுங் கற்பூர வல்லி தாழி
கூறவோ ரிடையாக வெடுத்துக் கொண்டு
தண்டாமற் குழியின்று மரையு மாங்காய்
தன்னளவா மோமஞ்சீ ரகமீ ருள்ளி
பண்டாகும் புளியரைத்துக் கலக்கிக் காடி
பகர்மோரும் விட்டதனைக் கொடுத்துப் பாரே. (174)

## உழலை வெதுப்பு.

பார்க்கவே சுகமாகு மீறி னுக்கால்
பண்பிளநீர் மட்டைத்தண் ணீரி னோடு
கோர்க்கதென்னம் பூவாழைப் பழமுங் கூட்டிக்
கூசாமற் கொடுத்திடவே சாந்த மாகும்
சேர்க்கையினி யுழலைவெதுப் பதனின் செய்கை
செப்பிடமூக் கதுவேர்க்கு மெருவி டாது
தீர்க்கவாய்ப் புண்ணுருந் திரு தற்கு
திடமான நெல்லிக்காய்ப் படியு மூன்றே (175)

## இதுவுமது.

படிமூன்றை யிடித்துச்சா றெடுத்துக் கொண்டு
பாங்கரைக்காற் படியுமதி மதுரத் தோடிப்
படிபுகழுஞ் சீரகமுக் காசிடையுஞ் சேர்த்து
பண்டரைத்துக் கலக்கியிட் டிடவே யிந்தப்
படிவந்த நோயகலு மற்றோர் செய்கை
பகரவே யடிக்கடிநீர் விடுக்கு மந்தப்
படிவாயில் நீர்வடியுங் கண்சி வக்கும்
பாடியநோ யகன்றிடவிந் நாளிற் கேளே. (176)

## இதுவுமது.

இந்நாளில் மிளகுமீ ருள்ளியொரு வகைக்கு
இசையுங்காற் படியாக வெடுத்த ரைத்து
அந்நாளி லாவின்பாற் படியி ரண்டில்
அருந்தவே கலக்கியிட் டிடநோய் தீரும்

முந்நாளிற் செய்வினையாற் றீரா விட்டால்
மொழியும்நா யுருவிநா ரத்தங் காய்போல்
நந்நாளி லரைத்துக்கா டியிற்க லக்கி
நலமாகக் கொடுக்கவந்த நோயப் போதே. (177)

## படுவன்.

அப்போது நீங்கிவிடும் படுவன் செய்கை
அரையக்கேள் மண்டைபெருத் துடலம் வற்றும்
முப்போதுந் தின்றவிரை செமித்தி டாது
மூதண்ட வெளிகடந்த பெரியோர் பாதம்
எப்போதும் போற்றிசெய்திப் பத்தைப் போட்டு
ஏற்றமருந் திந்தமுறை கொடுத்தா யானல்
ஒப்போது வாருண்டோ வுலக மீதில்
உரைத்தகொடி வேலிவேர் தன்னைத் தொத்தே. (178)

## இதுவுமது.

தொத்தியே கொண்டுவந் தரைத்துப் பத்துத்
தோதான கோழிமுட்டை யதனை வாங்கி
நத்தியே யுடைத்துவெண் கருவை விட்டு
நன்றாகக் குழப்பியே தலையை யன்றி
பத்தியே யுடம்பெங்கும் பூசிப் பின்பு
பாங்குநெய்க் கொட்டான்வேர்ப் பட்டை தானும்
சித்தியே குழப்பாலை வேரின் பட்டை
செப்புவகைக் குப்பலமூன் றாகச் சேர்த்தே. (179)

## முகப்படுவன்.

சேர்த்துநற்சி ரகங்கறுப்புச் சீரகந்திப் பிலியுந்
திகழுங்கஸ் தூரிமஞ்சள் வகையொன் றுக்கு
கோர்த்துமொரு பலங்காய மரைப்ப லத்தைக்
குணமாக வேயரைத்துக் காடி தன்னை
வார்த்துமே குழப்பியிட்டு வெந்நீர் காட்ட
வந்ததோ ரிப்பிணியு மகன்று போகும்
தூர்த்துவரு முகப்படுவன் செய்கை சொல்வேன்
தூமுகமும் வீங்குங்கண் சிவக்கும் பாரே. (180)

### இதுவுமது.

பாரப்பா தீவனத்தின் னூது தீரப்
பகர்குழப்பா ளைக்கிழங்கு மமுக்கி ராவேர்
சேரப்பா வகைக்குமெலு மிச்சங் காய்போல்
திடங்கொண்டு மரைத்துபடி வெள்ளாட் டுப்பால்
வீரப்பா கலக்கியே கொடுத்துப் பின்பு
வெடித்தபிள வைக்கொல்லி யிலையி னோடு
நேரப்பா நீத்தாச்சுண் ணும்புக் கல்லும்
நெடும்பனையுண் டாங்கருப்புக் கட்டி கூட்டே. (181)

### குடற்படுவன்.

கூட்டியரைத் தேவீக்கத் தின்மேற் பூச
குலவியவவ் வீக்கமதும் வற்றிப் போகும்
நாட்டில்வருங் குடற்படுவன் செய்கை சொல்வேன்
நற்குடலி லழுக்கொட்டி யிருக்கு மத்தால்
தாட்டிகநந் நீரிரையும் விரும்பி டாது
தக்கநோய் தீரவதன் குருக்கைக் கட்டி
சூட்டிடவிச் சூடதனைச் சாந்த மாகுஞ்
சொல்லிடுவே னினியானைப் படுவ னுக்கே. (182)

### யானைப்படுவன்.

இக்குணத்தால் முன்னங்கா லிசையும் வீங்கும்
இக்காலால் நடக்காது மிதிக்குந் தூக்கி
பக்குவமாஞ் சிலதுக்கு முன்கால் வீங்கும்
பகர்மிளகு சுக்குவகைக் கொருப லந்தான்
சொக்குமஞ்சள் திப்பிலியும் வசம்பு காயம்
சூட்டுவகைக் குப்பலங்கால் குப்பை மேனி
ஒக்கும்வெள் ளறுகுதை வேளைபிடி வகைக்கு
உகந்தரைத்துக் காற்படியாஞ் சாரா யத்தே. (183)

### இதுவுமது.

அத்திலே கலக்கியிட் டிடவே தீரும்
அதுவன்றி யிலுப்பையிலை யிடித்துக் காடி
பத்தியே கலக்கியிடச் சாந்த மாகும்
பகர்கச்சாந் தரையிலைசுண் ணும்பி னோடு

புத்தியதாய்ப் பழம்புளியுஞ் சேர்த்த ரைத்து
பொருந்துவீக் கத்தின்மே லாகப் பூசி
நத்திவிலா விரண்டிற்கு டிடநோய் தீரும்
நவிலுவே னினிக்குதிரைப் படுவன் தானே. (184)



## குதிரைப் படுவன்.

தானப்பா கண்மறையுஞ் செவியுந் தாழும்
தக்கவாய் வீங்குமது தீரு தற்கு
வேனப்பா திப்பிலியுஞ் சிறிய தேக்கு
வினவுசீந் திக்கொடிநாய்க் கடுகி னோடு
வானப்பா வதிமதுர மரைத்துநறு நெய்யிற்
வசமாகக் குழப்பிமுக மதனிற் பூசப்
பானப்பா கண்டபனி யென்ன நோயும்
பறந்துவிடுங் குழிப்படுவன் செய்கை யென்னே. (185)

## குழிப்படுவன்.

என்னசொல்வேன் கோசபீ சந்தான் வீங்கும்
இரையுந்தின் னாதுகண் குழிய தாகும்
நன்னவயி றாதுமது தீரு தற்கு
நற்கொடுப்பை வேருடனே யமுக்கி ராவேர்
துன்னமுப் புரமெரித்தான் வேரி னோடு
சுருக்குடைய சிறுகுமட்டி வேர்வ கைக்கு
முன்னமே சொல்மாங்கா யளவ ரைத்து
முழுப்படியொன் றும்பசுவின் பாற்க லக்கே. (186)

## நீர்ப்படுவன்.



கலக்கியே கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
கருதியிரு விலாவிற்கு டிடநோய் தீரும்
துலக்கியே வருகும்நீர்ப் படுவன் செய்கை
சொல்முன்னங் கால்முதலாய்த் தொப்புள் [மட்டும்
இலக்கின்றி வீங்குமது தீரு தற்கு
இயம்புபெருங் குறட்டைவேர் மாங்காய் போல
விலக்கிடவே யரைத்துபடி வெந்நீர் தன்னில்
விருப்பமுறக் கொடுத்துமுன் சொன்ன வேரே. (187)

### இதுவுமது.

வோதுவுஞ் சிறுநீரில் வசம்பீ ருள்ளி
 விரும்பியரைத் தேவீக்கத் தின்மேற் பூச
நோதுமற் றென்றுதலை சுருளி வேரும்
 நிகழ்வன்னி வேர்வகைக்குப் பலமு மூன்று
சீரதுவா யரைத்துவெந் நீர்க லக்கித்
 திடமாகக் கொடுத்துமுன் வேரி ரண்டை
வீரதுட னரைத்துவீக் கத்திற் பூசி
 விரும்பிநெஞ்சிற் சுட்டிடநற் குணம தாமே. (188)



### இதுவுமது.

குணம்பெருமிந் நோயுமற் றெருவி தந்தான்
 கூறநெஞ்சிற் பாறையைப்போ லாக வீங்கும்
நிணம்பெரு தொப்புள்முதலாய்க் கீழ்வ யிற்றில்
 நின்றசில மாட்டுக்கும் வீங்கும் பாரு
பணம்பெருபச் சைமஞ்ச ளிடித்தச் சாறு
 பாங்குநல் லெண்ணெய்வகைக் குப்படிகா லாக
மணம்பெருமோர் பலமிளகை யரைத்துச் சேர்த்து
 வகையாகக் காய்ச்சியதைக் கொடுத்துப் பின்பே. (189)

### நாரைப்படுவன்.

பின்பாக வீக்கத்திற் சூடு போடப்
 பேசியநோய் தீரும்நா ரைப்படுவன் செய்கை
முன்பாக நீர்த்தாரை நெஞ்சும் வீங்கும்
 மொழியதற்குக் கள்ளிப்பா லுடனே சாணி
தென்பாகக் குழப்பிவீக் கத்திற் பூசத்
 தீருமன்றிக் கொடிவேலி வேரை வெந்நீர்
அன்பாக வரைத்து வீக்கத்திற் பூச
 அகன்றிடுமிப் பிணியதுவு மின்ன மொன்றே. (190)



### தூங்குப்படுவன்.

ஒன்றப்பா வருந்தூங்கு படுவன் செய்கை
 உரைக்கவே கழுத்தானை துதிக்கை போல
குன்றப்பா வீங்குமெழுந் ததுப டுக்கும்
 குணமின்றி யுடம்பலைக்குந் தீரு தற்கு

நன்றப்பா காற்படிவேப் பெண்ணெய் தன்னில்
நவிலெருக்கம் பூவதனை வேக வைத்து
வென்றப்பா வதிற்கழுநீர்ப் படியொன் றிட்டு
விருப்பாக் கொடுத்ததன்பின் பாகப் பாரே. (191)

### காற்படுவன்.

பார்க்கவே கழுதைவிட்டை கரைத்த தண்ணீர்
பாங்கதனிற் சுக்கதுவும் பலம தொன்று
சேர்க்கவே வசம்புபலங் கால ரைத்துத்
திடமாக வீக்கத்துஞ் சரீர முற்றும்
ஏர்க்கவே துவாலையிட்டுக் கழுத்தைக் கட்டி
இலங்கச்சூ டிடநலங்காற் படுவன் செய்கை
ஆர்க்கவே நாற்குளம்பு விரிந்து போகும்
அடித்துசெவி தாழுமது தீரு தற்கே. (192)



### இதுவுமது.

தீரவே துளசியிலை தன்னைக் காடித்
திடமாக விட்டரைத்துச் சாறெ டுத்துச்
சேரவே மூன்றுநா ளூட்டிச் சூடு
திட்டமுட னிட்டிடவே சுகம தாகும்
தூரவே யதற்கின்னோர் மார்க்கஞ் சொல்வேன்
சுத்தகரு வாடுதன்னைக் கழுவுந் தண்ணீர்
நேரவே காற்குளம்பி லூற்ற நன்காம்
நிகழ்த்தவே ரொன்றகத்தி யிலையைத் தானே. (193)



### வாய்ப்படுவன்.

தானதனைக் கழுநீரி லவித்தெ டுத்து
தக்கபடி வடிகட்டிக் கொடுக்கத் தீரும்
பானதனை யொத்தவாய்ப் படுவன் செய்கை
பாங்கான வாயதனில் வடியும் நீரு
மானதனை யொத்தசெவி தாழ்ந்து போகும்
வாய்ப்புண்ணும் நாசியதும் நாறுந் தீரக்
கோனதனை யொத்தநல் லெண்ணெய் தன்னில்
கூறுபழம் புளியதனைக் கரைத்துத் தானே. (194)

## இதுவுமது.

கரைத்துவா யதிற்பூசச் சுகமுண் டாகும்
கதித்தமுறை வேறுசந் தனக்கட்டை யோடு
நிரைத்துசுக்கு நாறிப்புல் லெருக்குமுருக் கிலையும்
நிகழிலுப்பைப் பிண்ணாக்கு வேம்பின் பட்டை
குரைத்துவே லிப்பருத்தி யிலையி தெல்லாங்
கூறுசம னிடையாக நிறுத்தெ டுத்து
அரைத்துபழந் தண்ணீரிற் கலக்கி யூட்டி
யதிற்கொஞ்ச முடம்பெங்கும் பூச நன்றே. (195)

## இதுவுமது.

நன்றப்பா யின்னமொரு முறையைச் சொல்வேன்
நற்சீர கத்துடனீ ருள்ளிபழம் புளியும்
நின்றப்பா வகத்தியிலை யாரையிலை யோடு
நிகழ்பழம்பா சிக்கொடியா வரைக்கொ ழுந்தும்
அன்றப்பா வகைக்குமொரு பலம ரைத்து
அத்துடனே நல்லெண்ணெய்ப் படிய ரைக்கால்
ஒன்றப்பாப் படிகாடி விட்டெருமைத் தயிரும்
உற்றகாற் படிசேர்த்துக் கிண்டி யூட்டே. (196)

## வலிப்பு.

ஊட்டியதன் மீதத்தை வாயுங் காலும்
உகந்ததனைப் பூசிடவே சாந்த மாகும்
தாட்டிகமின் னொருமுறைகே ளகத்தி யோடு
தக்கவசம் பரைத்துக்காற் குளம்பு வாயும்
நாட்டிக்கா திற்றடவிக் குடிக்கப்பச் சரிசி
நன்றாகக் கழுவியநீர் கொதிக்க வைத்து
கோட்டியின்றி வைத்துவரச் சாந்த மாகும்
கூறக்கே ளினிவலிப்பின் றன்மை தானே. (197)

## இதுவுமது.

தன்மைநாற் காலதனை வலித் திழுக்கும்
சாரவுடற் குளிர்ந்திருக்குந் தீரு தற்கு
நன்மைதருஞ் சுக்குபல மரையி னோடு
நவில்வசம்பு காற்பலம தரைத்தே யத்தில்

தொன்மைதரு விச்சியிலைக் குப்பை மேனி
சூட்டுஞ்சா றுடனேவேப் பெண்ணெயொரு வகைக்கு
*புன்மையிலாக் காற்படிவீ தந்தான் சேர்த்துப்
புகட்டியதன் பின்பாகக் கூறக் கேளே. (198)

## பெருவலிப்பு.



கூறவே குரிஞ்சாவி னிலையின் சாறு
கொடிசிந்தி யிலைச்சாறுந் துவாலை போட்டுத்
தேறவே குடிக்கவெந் நீரைக் காட்டி
திடமுதுகிற் சூடிடவே சுகமுண் டாகும்
பாறவே பெருவலிப்புச் செய்கை சொல்வேன்
பார்க்கநாற் காற்சுருங்க விழுக்கும்வி ழுந்து
தூறவே படுக்குமந்நோய் விலகு தற்கு
சொல்லவே திப்பிலியு மிளகி னோடே. (199)

## இதுவுமது.

ஓடவே காயமுட னோமந் தானும்
ஓங்குவெள் ளெருக்கதனின் கொழுந்துங் கூட
நாடவே வகைக்குமரைப் பலம தாக
நன்குறவே யரைத்திளவெந் நீர்க லக்கி
சாடவே மூன்றுநாட் கொடுத்து மீதந்
தனையெடுத்து மூக்கதனில் நசிய மாகப்
போடவே யிந்தநோய் விலகிப் போகும்
பொருந்தமற் றொருவகையுண் டதனைக் கேளே. (200)

## இதுவுமது.

கேளப்பா கற்பூர வல்லிச் சாறு
கிட்டியரைப் படியெடுத்துப் படியாங் காடி
வாளப்பா கலக்கிநன்றாய் நாள்மூன் றாட்ட
வல்லபிணி நீங்குமற் றொன்றின் செய்கை
கோளப்பா வருந்திருகி முருகி வீழும்
கூர்விழியுஞ் சிவக்குஞ்சா ணம்போ டாது
நாளப்பா தீரகொடிக் கள்ளிவெள் ளறுகு
நற்சாறு வகைக்குக்காற் படியெ டுத்தே. (201)

*புன்மை—ஈனம்.

## கால் வலிப்பு.

எடுத்துநல் லெண்ணெய்ப்படி யரைக்கால் விட்டு
இயல்பாகக் கலக்கியே நாள்மூன் றுந்தான்
கொடுத்துமிரு விலாவிற்கு டிடநன் றுகும்
கூறுவேன் கால்வலிப்புச் செய்கை தன்னை
படுத்துக்கீழ் விழுந்திருக்கு மெழுந்தி ராது
பண்டுமுது கைநெளிக்கும் கால்தூக் காது
கடுத்துமுகம் நிமிருமது விலகு தற்கு
கருது*நிம்ப நெய்வாகை யிலையின் சாறே. (202)



## நரம்பு வலிப்பு.

சாறபுங் கம்பட்டை வசம்பு பூடு
சமமிடித்து முதுகுநாற் காலும் பூசி
தேற்றவிரு புறந்துடையும் பின்னங் காலும்
திடமாகச் சூடிடவிந் நோயுந் தீரும்
பாறவந் திடும்நரம்பு வலிப்பின் செய்கை
பார்க்கமுத லோர்விதமாந் திமிருண் டாகும்
தூறமறு நாளதனி லதிக மாகும்
சொல்மூன்றும் நாளதனிற் றசை நரம்பே. (203)



## இதுவுமது.

நரம்பதுவுந் தளர்ச்சியுண்டாந் தலையு யர்த்தும்
நாசியதும் நீண்டிருக்குங் கண்ணின் மீது
நிரம்பவொரு விதமான தோலெ ழும்பும்
நிரந்தரம்வா லைத்தூக்கிக் கொண்டி ருக்கும்
வரம்பன்றி வாய்திறவா திருக்கும் மற்றோர்
வந்தாக்காற் கலக்கமுடன் பயமுண் டாகும்
திரம்பன்றி மூச்சுவிடு மெருகி டாது
திருதற்கு நேர்வாளப் பருப்பிருபத் தைந்தே. (204)

## இதுவுமது.

ஐந்தரைத்துச் சிற்றும ணக்கி னெண்ணெய்
அதுபடிகா லரைக்காலிற் கலக்கி யூட்டி
பிந்தமறு நாளுமபின் காற்றோ லாவும்
பேசுசடம் பின்வித்து மவ்வீ தந்தான்

*நிம்பநெய்—வேப்பெண்ணெய்.

முந்தவூ மத்தைவித் தரைக்காற் ரேலா
மூன்றுமோர் நாளைக்கு மூன்று வேளை
பந்தமுடன் கொடுத்துவரச் சாந்த மாகும்
பகருவே னினிக்கண்ட வலிப்பைத் தானே. (205)

## கண்ட வலிப்பு.

தானப்பா வதுவுங்கீழ் விழுந்தி ருக்கும்
தக்ககழுத் ததைச்சுற்றி வலிக்குந் தீர
ஆனப்பா மாவிலிங்க யிலையை மாங்காய்
அளவரைத்து மொருபடிவெள் ளாட்டு நீரில்
வானப்பா கலக்கியே கொடுத்துப் பின்பு
மாவிலிங்க வேரும்நீர்ப் பூலாவி னிலையும்
கோனப்பா வரைத்துச்சது ரக்கள் ளிப்பால்
குணமாகப் பிசைந்தும தனுடலிற் பூசே. (206)

## வளைகூனி வலிப்பு.

பூசியே குடிக்கவெந் நீரைக் காட்டப்
புகலுமிந் நோயகலும் வளைகூனி வலிப்பு
கூசியே வருகுமதன் செய்கை தன்னைக்
கூறுநாற் காற்றெண்டை வலித்தி ழுக்கும்
ஆசியே வொடுவடக்கிச் சமூலந் தன்னை
அரைத்துக்கா டியிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
வீசியே படருஞ்சா ரணையின் வேரை
விரும்பியரைத் ததனில்நல் லெண்ணெய் கூட்டே (207)

## இதுவுமது.

கூட்டியதைக் கொதிக்கவைத் துடம்பிற் பூசக்
குணமாகு மற்றுமொரு செய்கை கேளு
தீட்டியகண் சிவக்குமிரை தின்றி டாது
திகைத்துநிற்கும் வலிப்புவந் திழுக்குந் தீர
நாட்டியசுக் கதிமதூரம் வகையொன் றக்கு
நவிலுமரைப் பலம்வீழி யிலைவி ளாத்தி
தாட்டியமாம் வகைக்குமாங் காயைப் போலத்
தானுமரைத் தொருபடியாங் கோமி யத்தே. (208)

## கொடுவலிப்பு.

நெற்றி



விலா



அத்திலே கலக்கிநன்றாய்க் கொடுத்துப் பின்பு
அரைத்துச்சா ரணைவேரை யெள்ளிநெண்ணெய்
பத்தியதி லேவிடுத்துக் கொதிக்க வைத்து
பாங்காக வுடம்பெங்குந் துவாலை யிட்டு
நத்தியிரு விலாநெற்றிச் சூடு போட
நாடாதிப் பிணியோடுங் கொடுவ லிப்பு
தொத்தியே வருகுமதன் செய்கை சொல்வேன்
தோன்றிவலிப் புத்திடுக்கென் றிழுக்கும் பாரே.

## இதுவுமது.

பார்க்கவே காலதனை யிழுத்து வைக்கும்
பகரவே யங்கமெங்கும் வங்கு பற்றும்
சேர்க்கவே வாயில்நீர் வடியுந் தீர
செப்பானை லத்தியொடு குதிரை லத்தி
கோர்க்கவத்தி வணங்கிச்சா ரணையின் வேரும்
கொண்டுவந் திடித்துதனித் தனிவ கைக்கு
தீர்க்கமாங் காற்படிச்சா றெடுத்துக் கூட்டி
திடமாகக் கொடுத்துமதைத் துவாலை போடே. (210)

## குதிரை வலிப்பு.

காலில்



விலா



போட்டப்பா நாற்காலு மிரங்கச் சூடு
புகலவே யிரண்டுவிலா வதனிற் சூடு
தீட்டப்பா நலங்குதிரை வலிப்பின் செய்கை
தீர்க்கமாம் நாற்காலும் வலித்தி ழுக்கும்
மூட்டப்பா வரைக்கண்ணைக் கொண்டு பார்க்கும்
மோசமதாய் மார்புவலி காணுந் தீர
நாட்டப்பா வெள்ளெருக்கங் கொப்பும் பூவும்
நவிலுமை விரலிக்காய் வகையொன் றுக்கே.

## இதுவுமது.

ஒன்றதற்குச் சிறுமாங்கா யளவ ரைத்து
உற்றகள்ளிச் சாறுபடி யும்மா காணி
நன்றதற்கோர் படிப்பசுகோ மியமுங் கூட்டி
நலமுறவே கொடுத்துப்பின் மறுநாள் தொட்டு

வென்றதற்கோர் பிடியிலைகற் பூர வல்லி
　　மேன்மையாய்ச் சேர்த்திடுவா யதுவு மன்றேல்
அன்றதற்கு மிளகுசுக்கு வகையொன் றுக்கு
　　அடுத்துபல மொன்றாகத் தானுங் கூட்டே. (212)

## இதுவுமது.

கூட்டியே திப்பிலியோ மம்வ கைக்கு
　　கூறுமரைப் பலம்பெருங்கா யம்வ சம்பு
பூட்டியே வகைக்குபலங் காலி னோடு
　　புகல்வெள்ளைப் பூண்டினுட தயிலமிரு பலமும்
கோட்டியே யிலாதவேப் பெண்ணெய்ப்படி யரையுங்
　　கொடுத்திடுவாய்ச் சேர்த்தொன்று யதன்பின் பாகக்
காட்டியே தலைமுதலாய் வால்வ ரைக்கும்
　　கணக்காக யிருபுறமும் வரையாஞ் சூடே. (213)

## இதுவுமது.

சூடதுவுஞ் சுட்டிடநற் சுகமுண் டாகும்
　　சொல்லுவே னின்னமொரு செய்கை தன்னை
மாடதுவும் நடுநடுங்கிக் கீழே வீழும்
　　வாயில்வெண் நுரைதள்ளுங் குழியாங் கண்ணும்
தேடதுவுஞ் சுகமுறவே கருங்கொ ரட்டைத்
　　திடசமூ லங்கொண்டு வந்தி டித்துக்
கூடதுவும் வெந்நீர்விட் டுப்பி சைந்து
　　கொடுத்திடுகா ளொன்றுக்கோர் படியாய்த் தானே. (214)

## யானை வலிப்பு.

படிவீதம் நாள்மூன்று கொடுக்கத் தீரும்
　　பகருமின் னென்றெருக்குப் பூவு மூன்று
பிடிவீதம் பசுநீரி லரைத்தி ரண்டு
　　பிறங்குநாட் கொடுத்துமிரு பக்கஞ் சூடு
பிடிவாத மாயிடவே சுகம தாகும்
　　பேசிடுவே னினியானை வலிப்பின் செய்கை
பிடியேனு மிரைதின்னு திருக்குங் கண்ணைப்
　　பிரட்டியுருட் டிச்சொருகிப் பார்க்கு மீண்டே. (215)

### இதுவுமது.

மீண்டதனாற் காலிழுக்கும் படபடத்து
வீழும்வாய் நுரைதள்ளுந் தலையு யர்த்தும்
மூண்டதுவுந் தீரவபின் பலம தொன்று
மொழிக்கஞ்சா யிலைசுழலா வரையி னிலையோடு
தூண்டசா ழைக்கருவா டொருவ கைக்கு
சொல்நெல்லிக் காயளவ தாய ரைத்து
வேண்டவே கருங்குன்றிச் சாறுபனங் கள்ளும்
வெவ்வியசா ராயம்வகைக் குப்படிய தொன்றே. (216)

### இதுவுமது.




ஒன்றாகக் கலக்கியே மூன்று போது
ஊட்டியே நூறுகுடந் தண்ணீர் விட்டு
நன்றாக முகமும்விலாச் சூடு போட்டு
நாளேழு சென்றுநாற் காலுஞ் சூடு
குன்றும லிட்டிடவே சுகம தாகும்
கூறுவே னின்னமொரு செய்கை தன்னை
அன்றாடம் புல்வைக்கோல் தின்றிடாது
அரைக்கண்ணாய்த் தூங்குமது தீரு தற்கே.




### இதுவுமது.




தீரவே யரைப்பலமாஞ் சன்னிநா யகமும்
திடசாழைக் கருவாடு சுழலையா வரையும்
நேரவே நெல்லிக்கா யளவ ரைத்து
நீதகருங் குன்றியிலைச் சாறுபடி யரையும்
சேரவே பனங்கள்ளுங் கழுதைமூத் திரமும்
செப்புவகைக் குப்படியொன் றாகவிட்டுச்
சாரவே கொடுத்துப்பின் வெந்நீர் காட்டி
தலைகாலு மிருவிலாச் சூடு போடே.




### நாய்வலிப்பு.

போட்டுப்பின் சிரசதனிற் குளர்ந்த தண்ணீர்
பின்னமிலா நூறுகுடம் விடநோய் தீரும்
நாட்டுவேன் நாய்வலிப்பின் செய்கை தன்னை
நடுமுதுகை நெளிக்கும்பின் முருக்கி வீழும்

சூட்டுவேன் தீருதற்கு நாய்ப்பாக லிலையும்
சொற்கருத்தக் காக்கணத்தி யிலையி னோடு
பூட்டுவேன் குன்றிமணி யிலைவ கைக்கு
பொருந்தைந்து பிடியாகக் கொண்டு வந்தே. (219)

## இதுவுமது.

கொண்டுவந் திடித்துநன்றாய்ச் சாறெ டுத்து
கூசாம லுடம்பெங்கும் பூசி நாசி
கண்டுநா சியில்நசியஞ் செய்யத் தீரும்
கருதுமற் றொருமுறையாம் வசம்பு பூடு
பண்டுவகைக் கொருபலமா யரைத்து வைத்து
பகர்புங்கம் வேர்வாகை யிலையின் சாறு
துண்டுவேப் பெண்ணெய்படி கால்வ கைக்கு
துலங்கவிட்டுக் காய்ச்சியதை யாற்றிப் பின்பே. (220)

## முசல் வலிப்பு.

பின்பாக செவிநாசி நசியஞ் செய்து
பிறங்கவுடம் பெங்குந்தான் துவாலை போட்டு
தென்பாகப் பின்னங்காற் றொடையினோடு
தேடியிட விலாவிற்சூ டிடநன் றாகும்
முன்பாக வருகுமுசல் வலிப்பின் செய்கை
மொழியத்தோ தின்றிதிட ரெனவி ழுந்து
துன்பாக வலித்திழுக்குந் தீரு தற்கு
துடர்ந்துகாக் கையைப்பிடித்துக் கொன்று சுட்டே (221)

கால்

தொடை

விடதுவிலா

## இதுவுமது.

சுட்டதனைத் தலைகாலு முரோமம் போக்கிச்
சுருக்காகக் கீறிகுட லெடுத்துப் போட்டு
விட்டதனி லரைப்படியாஞ் சாரா யத்தை
வேகவைத் தெலும்பனைத்தும் நீக்கிப் பின்பு
தொட்டதனைப் பிசைந்துகொடுத் திந்த வாறு
தொடர்ந்துமுத் தினங்கொடுக்கச் சாந்த மாகும்
இட்டதனைச் செய்வதென்றால் மனதொவ் வாது
இதயமதும் பொருந்தவொரு வகைசொல் வேனே. (222)

## இதுவுமது.

சொல்லவே சாதிக்காய்ப் பலம தொன்று
சூட்டுகோ ரோசனையும் பலங்கா லாக
புல்லவே கஸ்தூரி பலம்மா காணி
பொடிசெய்து மலட்டுவெள் ளாட்டி னீரல்
வெல்லவே விரவியிட்டவ் வாட்டி ரத்தம்
விரும்பிநசி யஞ்செய்து துவாலே போட்டு
ஒல்லவே வெந்நீரைக் குடிக்கச் செய்தால்
ஓகோகோவிப்பிணியு மோடிப் போமே. (223)

## எருவலிப்பு.

போமப்பா யெருவலிப்பின் செய்கை தன்னைப்
புகலுவே னுன்காறு நாளா னும்
தாமப்பா விரையதுவுந் தின்றி டாது
தக்கவாய் திறக்காது யெழுந் திடாது
ஆமப்பா நாற்காலு மிழுத்து வாங்கும்
அதற்குக்கற் பூரவல்லி கள்ளிச் சாறும்
நாமப்பா நல்லெண்ய்ச் சமமாய்க் கூட்டி
நயந்துகொடுத் திடத்தீரு மின்ன மொன்றே. (224)

## குரவளைத்தாக்கன்.

ஒன்றுகொட்டாங் கிரந்தையி ருள்ளி தானும்
உறவரைத்து யிலுப்பைச்சா றுடனே மோரும்
நன்றுகலந் தூட்டிப்பின் வெள்ளெ ருக்கின்
நயக்கொழுந்தும் வசம்புமீ ருள்ளிசிறு நீரில்
அன்றுமிவை களையரைத்து நசியஞ் செய்ய
அகன்றுவிடுங் குரவளைத்தாக் கன்றன் செய்கை
சென்றுகுர வளைகட்டும் வாலே வீசும்
திடமாங்கண் குழியாகுந் திகைக்கும் பாரே. (225)

## இதுவுமது.

பாரப்பா தீருதற்கு வெள்ளைப் பூண்டு
பாங்குகார் போகரிசி யொருவ கைக்கு
சேரப்பா பலமுமிரண் டிலுப்பைப்பிண் ணாக்கு
செப்புபலங் காலரைத்துக் காற்படிவேப் பெண்ணெய்

சீரப்பா கலக்கிமெது வாக வூட்டித்
திடமாக வெந்நீரைக் குடிக்கக் காட்டி
நேரப்பா குரவளையிற் சூடு போட
நீங்கிவிடும் நீங்காதேல் வகைசொல் வேனே. (226)



## சினவாரித்தாக்கன்.

சொல்லவதன் நாக்கிரண்டு நரம்பு நீண்டு
தோன்றுமதைச் சூரைமுட் கொண்டு குத்தி
வெல்லவதில் மிளகுப்பு மாகத் தேய்த்து
விலாவிரண்டிற் சூடிடவே சுகமுண் டாகும்
புல்லவருஞ் சினவாரித் தாக்கன் செய்கை
பொருந்துங்கற் றாழைத்தண் ணீரைப் போல
ஒல்லவருந் தீரவெங்கா யம்வ சம்பு
உற்றசன்னி நாயகமொன் றுக்குமரைப் பலமே. (227)



## நனவாரித்தாக்கன்.

பலங்காலாம் வேப்பம்பிண் ணாக்கி னோடு
பகருந்தை வேளைசிறு தும்பைச் சாறு
நலவகைக்குப் படியொன்றாய்க் கலக்கி யூட்டி
நடுநெஞ்சிற் சூடிடவே நோயுந் தீரும்
குலவிவரும் நனவாரித் தாக்கன் செய்கை
கூர்ந்துபார் தீவனமுந் தின்றி டாது
பலமான நெஞ்சதுவும் வீங்கு மெத்த
பாரிறத்த நீர்விடுக்கும் வருத்த மாமே. (228)



## இதுவுமது.

ஆமப்பா தண்ணீரை மிகக்கு டிக்கும்
அதற்காலம் விழுதுமாந் தளிர்வ கைக்குத்
தாமப்பா மாங்காயி னளவ ரைத்துத்
தக்கபசுப் பாற்படியொன் றிற்க லக்கி
வாமப்பா கொடுக்கநல மாமற் றொன்று
வழுத்துவே ணோரிலைத்தா மரையி னோடு
நேமப்பா விஷ்ணுகிராந் தியும்வ கைக்கு
நிகழ்மாங்கா யளவரைத்தோர் படியா மோரே. (229)

## பன்றித்தாக்கன்.



மோரதனிற் கலக்கியே கொடுத்து நெஞ்சில்
மோடியாய்ச் சூடிடவிந் நோயுந் தீரும்
நேரதற்கு வரும்பன்றித் தாக்கன் செய்கை
நின்றுமிரை தின்னாக்கண் குழிய தாகும்
சேரதனின் கொம்பிரண்டைத் தொடவி டாது
திடங்கொண்டு கட்டவொட்டா தலறி வீழும்
பாரதனின் தலையதையுந் தூக்கிப் பார்க்கும்
பலகையதாற் சோதித்துப் பன்றி நோய்க்கே. (230)

## பன்றிநோய்.



நோய்க்குச்சொல் லிடுமருந்தைக் கொடுத்துப் பின்பு
நோங்கியிரு விலாவிற்சூ டிடநோய் தீரும்
வாய்க்குமே பன்றிநோ யதனின் செய்கை
வழுத்துமயிர் சிலிர்க்குங்கண் குழிய தாகும்
பேய்க்குணம்போல் வாய்பிளக்கும் நுரையுந் தள்ளும்
பின்னுஞ்செங் கோற்காட்டு மோடி வீழும்
நாய்க்குற்ற வாறுசுருக் கிடுகும் நீரு
நன்றாக யிடுப்பளவுக் குழியும் வெட்டே. (231)

## இதுவுமது.

வெட்டியுள் ளோலைப்பாய் தனைவி ரித்து
மிகக்காரி நாய்விரியன் பாம்பை வைத்து
அட்டியின்றிப் பதினாறு படியா முப்பை
அதிற்கொட்டி மூடிமேற் பாயைப் போட்டுக்
கொட்டியே மண்ணதனைத் தள்ளி நன்றாய்க்
குறித்துமொரு மண்டலஞ்சென் றெடுத்தெ லும்பை
விட்டிடா மற்பொரக்கி யெரிந்தவ் வுப்பை
விரும்பியதைப் புதுக்குடத்தில் வைத்துக் கொண்டே. (232)

## இதுவுமது.

கொண்டந்த வுப்புவெண் பூடுமொரு வகைக்குக்
கூறுபல மொன்றரைத்துத் தும்பைச் சாற்றில்
விண்டதனைக் கலக்கியிட் டிடநோய் தீரும்
விரும்பிவந்த நோயிதற்கு முறையும் வேறு

உண்டதுவுஞ் சிறுதும்பைச் சாற்றி னோடு
உற்றவெள் ளாட்டுநீர் வகையொன் றுக்குக்
கண்டதுவு மொருபடியாய்க் கலக்கி யூட்ட
கதித்தபிணி நீங்குமொரு வித்தை பாரே. (233)

## இதுவுமது.

வித்தையென்ன மாட்டின்வாய்ப் பலகை யொன்றை
விட்டுக்கை போட்டுப்பா ரந்த நோயும்
சொத்தையொரு வெங்காயச் சருகைப் போலத்
தோன்றுமதை யெடுத்துவிட்டு மருந்தை யூட்டு
இத்தைப்போற் பன்றியென்ற நோயிக் கெல்லாம்
இவ்விதஞ்செய் யாவிடிலோ வருத்த மெத்த
அத்தை செயித் திடலரிது சித்தர்க் காகும்
அதன்பின்பு குடிக்கவெந் நீரைக் காட்டே. (234)

## இதுவுமது.



காட்டியிட விலாவதனிற் சூடு போட
கருதிவந்த நோயகன்று போகும் பாரு
கோட்டியிந்த நோய்செய்கை வேறு சொல்வேன்
கொப்பெனவே கழுத்ததனைக் கட்டி வீங்கும்
மேட்டிமையாய் நாசியதை யடைத்துக் கொண்டு
மேல்மூச்சுங் கொரட்டுகொரட் டெனவி டுக்கும்
தாட்டிகநோ யகலுதற்குப் பன்றி நெய்யும்
சாற்றிலுப்பைப் பிண்ணாக்குஞ் சிறுதும்பை யிலையே. (235)

## இதுவுமது.

இலையும்பேய்ப் பீர்க்கிலையுஞ் சமம தாக
இசைந்தசிறு நீர்விட்டுத் தட்டிச் சாறு
கலையாம லெடுத்துசெவி மூக்கு தன்னில்
கதித்தநசி யஞ்செய்யச் சாந்த மாகும்
மலையாம லுப்புமெருக் கிலைப்ப ழுப்பும்
மதித்துமொரு நிறைகசக்கிச் செவிகண் மூக்கில்
உலையாமல் நசியமிடச் சாந்த மாகும்
உரைக்கக்கே ளின்னமொரு மார்க்கந் தானே. (236)



இதுவுமது.

மார்க்கமா மாட்டின்மூட் டெழும்பி னோடு
மலமுண் ணும் பன்றிவிட் டையும் பொடித்து
ஓர்க்கவே நெருப்பிட்டுப் புகையைக் காட்டி
ஊக்கமாய் வீக்கத்து முகத்துஞ் சூடு
ஏர்க்கையாய்ப் போட்டிடவே சாந்த மாகும்
இலுப்பைப்பிண் ணாக்குபல மிரண்ட ரைத்துக்
கோர்க்கையாய்க் குதிரைமூத் திரத்தி லாட்டக்
குணமாகும் மற்றொன்றைக் கூறு வேனே. (237)

இதுவுமது.

கூறவே பன்றிவிட்டைக் கோழிக் காரம்
கோதிலுப்பைப் புண்ணாக்கி னுடன்செங் கட்டி
தேறவத்திப் பிஞ்சுடனே பிரண்டை வேரும்
சேர்த்திடித்துக் காடியதிற் கலக்கி யூட்ட
மீறவரு மிங்நோய்மூட் டடைப்பன் நீரும்
மொழியக்கே ளின்னமொரு செய்கை தன்னை
சீறவே தொண்டைகட்டு மடைக்கும் நாசி
செப்புகிரட் டுக்கிரட் டென்று மூச்சே. (238)

இதுவுமது.



மூச்சுவிடும் வாயில்வெண் ணுரையுந் தள்ளும்
மொழியவிரை தின்னாது கண்சி வக்கும்
ஆச்சுதிந்தப் பிணிதீரக் கருங்கொ ரட்டை
அத்துடன்பேய்ப் பீர்க்குச்சங் கிலைக ளோடு
வாச்சுதுவேப் பங்கொழுந்துஞ் சமம தாக
மகிழ்ந்திடித்துச் சாறெடுத்து நாள்மூன் றூட்டி
பேச்சுப்பே சாமலிட விலாவிற் சூடு
பிறங்கவிட் டிடவோடு மிந்த நோயே.

இதுவுமது

நோயதுமற் றொன்றுதொண்டை வீங்கிவயி றூதும்
நுவல்வாயில் நீர்வடியும் செவியுந் தாழும்
வாயப்பீச் சங்குபேய்ப் பீர்க்கிலை யினோடு
வல்லதொரு வீருள்ளி வசம்பு சுக்கு

நேயகருஞ் சீரகமுஞ் சேர்த்த ரைத்து
நினைவாகத் தலைதொட்டுப் பிடரி மட்டும்
தூயவிட விலாவிலுஞ்சுட் டிடவே தீரும்
சொல்லுவே னின்னமொரு சூட்சி தானே. (240)

## பன்றிநோய் வருமுன் தடுக்கு முபாயம்

சூட்சியிந்த நோய்வருமுன் றடுப்ப தற்குத்
தொடர்ந்துபன்றி நெய்நாழி கொண்டு வந்து
காட்சிகாத் தொட்டிவடக் கோடும் வேரை
கண்டித்து மதைநாலு துண்ட தாக்கி
மீட்சிநாற் புதுக்கலசத் தொவ்வோர் துண்டு
மிரண்டிடா திட்டுபன்றி நெய்யு மூக்கு
ஆட்சியாய்த் தொழுநாலு மூலை தன்னில்
அன்பாக முன்புதைத்து வைத்தி ருந்தே, (241)

## பன்றி குருகைநோய்.

இருந்திந்த நோய்வந்த வுடன் கொடுக்க
இருக்காம லேகுமப் பிணிதா னப்பா
பொருந்திபன்றிக் குருகைநோய் வருகுஞ் செய்கை
புகலக்கண் குழியாகு மிரைதின் னாது
வருந்தியரைக் கண்விழிக்கு மயிர்சி லிர்க்கும்
வயிறாதுங் கண்சிவக்குஞ் செவியுந் தாழும்
திருந்திக்கா லூன்றுமற் சுழன்று வீழும்
திரும்பியெழுந் திரிக்காமற் கிடக்கும் பாரே. (242)

## இதுவுமது.

பாரப்பா யிருபதுநா ழிகையுஞ் சென்றால்
பண்பான வாயில்நுரை தள்ளும் பின்பு
சேரப்பா தண்ணீராய் வடியுந் தீரச்
செப்பியசோ தனைப்பலகைப் போட்டுப் பார்த்து
நேரப்பா முன்பன்றி நோய்க்குச் சொன்ன
நிதியொத்த மருந்தொன்றைக் கொடுத்துப் பின்பு
சீரப்பா வெந்நீரைக் குடிக்கக் காட்டத்
திடமான விரண்டுவிலாச் சூடு போடே



## பன்றிமுட்டிநோய்.

போடநல மாம்பன்றி முட்டி நோயைப்
புகலுவேன் தீவனமுந் தின்றி டாது
நாடவாய் நுரைதள்ளுங் கக்கி வைக்கும்
நற்கண்ணு மேதெரிக்கப் பார்க்கும் பின்னும்
சாடகுர வளைகட்டுஞ் சவ்வைப் போலச்
சாணமிடுந் தீருதற்கு வெள்ளைப் பூண்டு
தேடகடுக் காய்த்தோடும் வகையொன் றுக்கு
செப்புபல மூன்றாக வெடுத்துக் கொண்டே. (244)

## இதுவுமது.

கொண்டுகார் போகரிசிப் பலமி ரண்டு
கூறுகையாந்தகரைகுப்பைமேனிசிறுதும்பை குரவளை



கண்டுவகைக் குப்பிடியொன் றாய ரைத்து
கடியவேப் பிலைச்சாறு படிய தொன்றில்
விலா
உண்டுசுக முறக்கலக்கிக் கொடுத்துப் பின்பு
உற்றவெந்நீர் காட்டிகுர வளையி னோடு



அண்டுமிரு விலாவினுஞ்சூ டிடநோய் தீரும்
அரையக்கே ளினிச்சிலந்தி வகையைத் தானே. (245)

## இரத்தச்சிலந்தி.

தானப்பா வருமிரத்த சிலந்தி செய்கை
தண்ணீரி லுறுங்குமிழி போலுண் டாகி
வேனப்பா வெடித்திரத்த மாகச் சிந்தும்
வெய்யமயிர் சிலிர்த்திருக்குந் தீரு தற்கு
ஆனப்பா கோழிமுட்டைக் கருவி னோடு
அவுரியிலைச் சாறுவிட் டரைத்தெ டுத்து
கோனப்பா வுடம்பெங்கும் பாவப் பூசி
கூருமொரு நாழிகைதான் சென்ற பின்பே. (246)

## இதுவுமது.

பின்பாகச் சித்தர்மன தொத்து நித்தம்
பேணியடி படிந்திடவே மலைக டோறும்
தென்பாக வளர்கந்தன் பாதந் தன்னை
சிந்தித்துப் பின்சொல்லு முறையைச் செய்வாய்

அன்பாகத் துளசிப்பேய்க் கரும்பின் சாறு
மதுவகைக்குப் படியொன்றிற் பசுவின் பாலும்
முன்பாகக் கலந்தூட்டப் பழைய மேனி
மோடியா யுண்டாமற் றென்றைக் கேளே. (247)

## ஊளச்சிலந்தி.

கேளப்பா மயிர்சிலிர்க்கு மிரத்தம் வீழும்
குலையாது பசுமையதாய்க் சாணம் போடும்
நாளப்பா கோழிமுட்டை தனையு டைத்து
நன்றாய்மத் தித்துடல மெங்கும் பூச
கோளப்பா வில்லாதங் நோயுந் தீரும்
கூறுவே னூச்சிலந்தி வாயும் வீங்கும்
தாளப்பா மேயாது தலையுந் தாழும்
தன்சொரணை தானறியா திருக்கும் பாரே. (248)

## இதுவுமது.

பார்க்கமயிர் புகைசூழுந் தீரு தற்கு
பகருமெரு முட்டைப்பீ நாரி யோடு
சேர்க்கவே வெதுப்படக்கிச் சங்கங் குப்பி
திட்டமதா யிடித்துமிள கைப்பொ டித்து
தீர்க்கமதாம் நெய்கலந் துண்டை செய்து
தீவிரமாய்க் கொடுத்துடம்பிற் புத்து மண்ணைக் ஸ||
கோர்க்கையா யரைத்துப்பூ சியபின் பாகக்
கூறுமிரு விலாவிற்சூ டிடநன் றாமே. (249)

## யானைச்சிலந்தி.

நன்றாகு மினியானைச் சிலந்தி தன்மை
நவிலமுன்னங் கால்வீங்குந் தீரு தற்கு
குன்றாத வசலைக்கீ ரையின்றன் சாற்றில்
குணமஞ்சு பலமுள்ளி நறுக்கிப் போட்டு
ஒன்றாகக் கலந்துகொடுத் ததன்பின் பாக
உப்பில்நெய் விட்டரைத்து வீக்கத் தின்மேல்
கன்றாமற் பூசிடவே சாந்த மாகும்
கழறுவேன் மற்றொன்று புத்து மண்ணே. (250)

## புலிமுகச்சிலந்தி.



மண்ணது டவீருள்ளி வசம்பு மூன்றும்
மார்க்கமாய்ச் சிறுநீரு விட்ட ரைத்துத்
திண்ணமாய் வீக்கத்திற் பூசி வந்து
திடமாக விரண்டுவிலாச் சூடு போட
பண்ணதுபோல் நலமாகு மற்ற தொன்று
பகருபுலி முகச்சிலந்தி பூச்சிகடி யாகும்
எண்ணவே மூக்கடைக்கும் வாய்புண் ணாகும்
இரைபெடுக்க மாட்டாது தீரு தற்கே. (251)

## குதிரைச் சிலந்தி,

தீரவே லிப்பருத்தி விஷமல்லி யிலையும்
திகழிலுப்பைப் பிண்ணாக்குச் சமனாய்ச் சேர்த்து
சேரவே யரைத்துசெவி வாயி லுந்தான்
தேய்த்துநசி யஞ்செய்யச் சாந்த மாகும்
நேரவே வருங்குதிரைச் சிலந்தி செய்கை
நிகழிரண்டு கண் ணுமசை யாடி நிற்கும்
சாரவே யதற்குசிறு தேக்குதிப் பிலியும்
சன்னிகா யகமுமதி மதுரத் தோடே. (252)

## இதுவுமது.

ஓடுசம மாயெடுத்துப் பொடியுஞ் செய்து
உற்றநெய் யதிற்குழப்பிக் கண்ணிற் போட
நீடுபிணி நீங்கும்பா தாள மூலி
நேரவரைத் திளநீரிற் கலக்கி யூட்டப்
பாடுபிணி யோடுங்கற் றாழை வேரை
பாங்கரைத்துக் காடியதிற் கலக்கி மூன்று



தேடுபொழு தூட்டிமண்டை கட்டிச் சூடு
திட்டிடவே சாந்தமுறு மின்ன மொன்றே. (253)

## கெற்பச் சிலந்தி.

ஒன்றப்பா யினிகெற்பச் சிலந்தி செய்கை
உற்றசெவி காலிடுப்புக் கன்னம் வீங்கும்
நன்றப்பா பற்படகம் பிடிதான் மூன்றை
நய்யவரைத் தேகரிப்பான் சாறுபடி யரையில்

அன்றப்பா கலக்கியே கொடுத்துப் பின்பு
அரைத்துகொடு வேலிவேர்ப் பட்டை தன்னை
வென்றப்பாப் பசுவெண்ணெய் தனிற்கு ழப்பி
வீக்கத்தில் மூன்றுநாட் பூசு வாயே. (254)

## இதுவுமது.

பூசவே சாந்தமுறும் மற்றோர் செய்கை
புகலவாய் நுரையுண்டாய் கடைவாய்ப் பக்கம்
நேசநீர் போலாக வோடிப் போகும்
நேருங்கண் சிவப்பாகுந் தீரு தற்கு
வாசமா மெள்ளுப்பிண் ணாக்க ரைத்து
வளமான பசுவின்மோர் நாழி தன்னில் 0000
பாசமறக் கலக்கிமுத் தினங்கொ டுத்துப்
பாங்காக முதுகிற்கு டிடநன் றாமே. (255)

## தூங்குச்சிலந்தி. அம்மணிச்சிலந்தி.

ஆமப்பா வருந்தூங்கு சிலந்தி செய்கை
அங்கமெங்கும் வீங்குமது தீரு தற்கு
தாமப்பா வவுரிசெருப் படியின் சாறுஞ்
சமமாகச் சேர்த்துடம்பிற் பூசி வந்தால்
போமப்பா வந்ததம் மணிச்சி லந்தி
புகல்முன்னங் கால்முதலாய்த் தொப்புள் மட்டும்
வாமப்பா வீங்குமது தீரு தற்கு
வன்னிவேர்ப் பட்டைதலை சுருளி வேரே. (256)

## உதிரச்சிலந்தி.

வேர்வகைக்குப் பலமூன்ற தாய ரைத்து
வெந்நீரிற் கலக்கிநாள் மூன்ற தூட்டி
சீர்பெறவிவ் விருவேரை யரைத்தெ டுத்துத்
தேங்கவீக் கத்தினிலே பூசி வந்து
ஏர்பெறவே நெஞ்சதனிற் சூடு போட XXXX
ஏற்றபிணி நீங்குமுதி ரச்சி லந்தி
நேர்பெறவே மூக்குமுகஞ் சேர்த்தி முக்கும்
நேயக்கண் நாக்குகடை வாயுந் தானே. (257)

## இதுவுமது.

தானதுவும் வீக்கமுண்டாந் திரு தற்குச்
சாற்றுவேன் குருந்தொட்டி வேரின் பட்டை
வேனதுவுங் கவுதும்பை வேரின் பட்டை
விரும்புகாட் டுச்சேனைக் கிழங்கொன் றுக்கு
வானதுவும் பலமிரண் டொருவாய்ச் சோறு
வைத்தரைத்துக் காடியதிற் கலக்கி யூட்ட
மானதுவும் வலையைவிடுத் தோடுமாப் போல்
வல்லபிணி நீங்குமற்றோர் வகைசொல் வேனே. (258)

## குருத்துச் சிலந்தி.

சொல்லசுழ லாவரையின் றோலு ரித்து
சூட்டுகுருந் தொட்டிவேர்ப் பட்டை கூட்டி
புல்லவரைத் தெலுமிச்சஞ் சாறை விட்டு
பொருந்தியதோர் வீக்கத்திற் றடவத் தீரும்
வல்லகுருத் துச்சிலந்திப் பசுமை யாகி
வழுத்திரண்டு கண்டெரியா திருக்குந் தீர
நல்லசிறு தேக்குத்திப் பிலியு மோமம்
நாய்க்கடுகு மதிமதுரந் தனைப்பொ டித்தே. (259)

## இரலிப்பன்றி நோய். உதறிப்பன்றி நோய்.

பொடித்தாவின் வெண்ணெயதி லேக லக்கி
பொருந்தக்கண் ணிட்டுமண்டை கட்டிச் சூடு
நடித்திடா திடநன்று மிரலிப் பன்றி
நாடியநோய் குப்புற்று நிற்குந் திர
இடித்துக்கா ணந்தனையுந் தூள தாக்கி
இசைந்தகா டியிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
படித்திடது விலாவிற்சூ டிடநன் றாகும்
பகருதறிப் பன்றிநோ யதனைக் கேளே.

## தாளை நோய்.

கேளப்பா யெதிரெடுக்குந் தடிப்ப தாகும்
கெம்பீர நோயகல வசம்பீ ருள்ளி
நாளப்பா யெள்ளுடனே குப்பை மேனி
நறுநெய்யுஞ் சேர்த்தரைத் தேயுண் ணுக்கில்

வேளப்பா தாக்கிடவே சாந்த மாகும்
விளம்புவேன் தாளைநோய் செய்கை தன்னை
ஆளப்பா கண்ணதுவுங் குழிய தாகும்
அதன்வாயில் நீர்சிந்துந் தீரு தற்கே. (261)

## மாந்த நோய்.

திரவெருக் கிலையரைத்துச் சிறுநீர் கூட்டித்
திடமாக மேனியெங்குந் துவாலை யிட்டுச்
சேரவிஷ் ணுக்கிரந்தி மிளக ரைத்துத்
திகழ்காடி யிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
தேரவே வலதுவிலாச் சூடு போடத்
தேடிவந்த பிணியகலும் மாந்த நோயின்
பாரசெய்கை யிரத்தமொடு சவ்வு சவ்வாய்
பாங்கின்றிச் சாணமிடு மிளைப்புண் டாமே. (262)

## மந்தி நோய்.

உண்டாம்நாற் காலதுவும் கொண்டுந் தீர
உற்றகுன்றி மணியிலையைத் துவைத்தெடுத்துப்
பண்டான காடியதிற் கலக்கி யூட்டிப்
பாங்காக முதுகிற்சூ டிடநோய் தீரும்
கொண்டாடி வரும்மந்தி நோயின் செய்கை
கூறக்கே ளோட்டமதா யோடி யோடித்
திண்டாடிச் சுழற்றிக்கா லிழுத்து மிக்கத்
திடமின்றி நடக்கும்பற் கடிக்கும் பாரே. (263)

## வெக்கைநோய்.

பார்க்கவதற் குத்திறளங் கொடிப ரித்து
பண்பான தண்ணீர்விட் டரைத்து டம்பிற்
கோர்க்கையாய்த் தடவிப்பின் காலிற் சூடு
குணமாக விட்டிடநோய் சாந்த மாகும்
மூர்க்கமாம் வெக்கைநோ யதனின் செய்கை
முன்னமிரை தின்னாது வாய்நீர் சிந்தும்
சேர்க்கையதன் மயிர்சிலிர்க்குந் தீரு தற்குத்
திகழ்பச்சைக் கடலையொடு காணந் தானே. (264)

## இதுவுமது.

காணமது மரைத்தாவின் பாற்க லக்கிக்
கணக்காக வூட்டிப்பின் மறுநா டன்னில்
தோணமயிர் மாணிக்க விலையின் சாறும்
சொற்பசுவின் றயிர்வகைக்குப் படியாய்க் கூட்டி
பூணநல் லெண்ணெயெ லு மிச்சஞ் சாறும்
பொருந்தவகைக் குழக்குகலந் தூட்டிப் பின்பு
பேணவே மூன்றுநா ளெள்ள ரைத்து
பேசுநல் லெண்ணெய்கலந் தூட்ட நன்றே. (265)

## அனல்வெக்கை.

நன்றப்பா வனல்வெக்கை நோயின் செய்கை
•நடுமுதுகி லனற்பறக்குங் கண்சி வக்கும்
நின்றப்பா வெருகுமது தீரு தற்கு
நீடுவெதுப் படக்கியிலை யெள்ளுஞ் சேர்த்து
ஒன்றப்பா வரைத்தூட்டித் தராவின் வித்து
ஊறியதண் ணீருமொரு படிகொ டுக்க
அன்றப்பா வோடுமிப் பிணிமற் றென்று
அடுத்திரத்த மாகநீர் விடுக்குந் தானே. (266)

## இதுவுமது.

தானதுவுந் தீரபனிப் பயிறோ டெள்ளுஞ்
சரிகலந்து கொடுக்கசுக மாமற் றொன்று
கோனதுவாம் வீழியிலை யுடனே தேங்காய்
கூட்டியரைத் தேகாடி கலக்கி யூட்ட
ஈனமிலாச் சாந்தமுறும் வேறு செய்கை
இரத்தம்போல் நீர்விடுங்கண் பீளை சாடும்
ஆனதுவு மெருகுமந்நோய் தீரு தற்கு
அழிஞ்சிவே ரையரைத்துக் குறுணி மோரே. (267)

## சுக்கைவெக்கை.

மோரதனிற் கலக்கியே புகட்டிப் பின்பு
மொழியமறு நாட்சிறிய துளசிச் சாறு
தீரமாய்க் கொடுத்தடுத்த நாளிற் றுனும்
சிறந்தகுன் றி மணியிலைமாங் காயைப் போல

நேரவே யரைத்தாவின் பாற்க லக்கி
நீகொடுக்கச் சாந்தமுறுஞ் சுக்கை வெக்கை
சாரவரு முடல்நெளிக்குந் தீரு தற்குத்
தக்கவெள்ளைக் கிழுகிழுப்பை யிலையி னேடே. (268)

## பெருவெக்கை.

ஓடுகருப் புக்கட்டி சேர்த்த ரைத்து
உகந்திரண்டு படிமோரிற் கலக்கி யூட்ட
நாடுபிணி யகலபெரு வெக்கை செய்கை
நவிலநன் கின்றிச்செஞ் சாண மாகப்
போடுமது தீருதற்குப் பொன்னுங் கண்ணி
பொருந்துபனிப் பூலாவல் லாரை மூன்றின்
தேடுமிலை யரைத்தாவின் பாற்க லக்கித்
திடமாகக் கொடுக்கவிந்நோய் சாந்த மாமே. (269)

## சுழல்வெக்கை. சீதவெக்கை.

சாந்தமாஞ் சுழல்வெக்கை யதனின் செய்கை
தானும்நீர்த் தாரையதைக் கட்டிக் கொள்ளும்
பாந்தமதற் குத்தாழை மடலுஞ் சுக்கும்
பண்பாக வரைத்தாவின் கோமி யத்தில்
மாந்தவே கலக்கியிட் டிடநோய் தீரும்
வருஞ்சீத வெக்கைமுக்கும் வாய்நீர் சிந்தும்
பீந்தவே யெருகுமது தீரு தற்கு
பிரியமா மீருள்ளி வசம்பு பூடே (270)

## வரட்டுவெக்கை.

பூடரைத்துச் செஞ்சிவந்தி யிலையின் சாற்றிற்
புகட்டிடவே சாந்தமுறும் வரட்டு வெக்கை
நாடவாட் டாம்புழுக்கை போலச் சாணி
நன்கின்றி யிடுந்தீரக் கோஷ்ட மேலம்
சாடச்செங் கரும்புகணு வொடுல வங்கத்
தானுமெலு மிச்சங்கா யளவ ரைத்துத்
தேடவே பசுவின்பாற் படிய தொன்றில்
திடமாகக் கலக்கியிட நோயும் போமே. (271)

### சாறிவெக்கை. வெள்ளைவெக்கை.

போமப்பா சாறிவெக்கை யதனின் செய்கை
பொருந்தக்கண் ணிற்பீளை சாடுந் தீர
நாமப்பா புகலுகிறோம் வசம்பீ ருள்ளி
நல்லவெதுப் படக்கியிலே சேர்த்த ரைத்துத்
தாமப்பா நாழிகமு நீர்க லக்கித்
தானூட்டத் தீரும்வெள்ளை வெக்கை செய்கை
ஆமப்பா ரோமமதுஞ் சிலிர்க்குந் தீர
அப்பையுட கிழங்கினொடு வேலா வேரே. (272)

### முனிவெக்கை. விலாவெக்கை.

வேரதுவு மரைத்தாவின் பாற்க லக்கி
விரும்பியூட் டிடத்திரு முனியின் வெக்கை
சாறவே கரிப்பானின் சாறைப் போலத்
தான்வடியுந் தீருதற்குக் கருப்புக் கட்டி
தேரபழம் புளியதுவும் படியாங் காடி
தேடியதிற் கரைத்தூட்ட நோயுந் தீரும்
நேரவரும் விலாவெக்கை யதனின் செய்கை
நீயறிவாய் விலாவிரண்டு வீங்கு மென்றே. (273)

### உரோமக்கால் நோய்.

என்றதற்கா மணக்கிலையும் வசம்போ டுள்ளி
இவையரைத்துக் காடியதிற் கலக்கி யூட்டி
அன்றடுத்த நாளிலொட் டறையி னோடு
அரியவுப் புஞ்சேர்த்துப் பசுவின் மோரில்
நன்றதனைக் கலக்கியிட் டிடநோய் தீரும்
நவிலுமுரோ மக்காலின் நோயின் செய்கை
குன்றவே மயிர்சிலிர்த் திருக்குந் தீர
கூறுமீ ருள்ளிவிடத் திலையுங் கூட்டே. (274)

### கல்விருட்டி நோய்.



கூட்டியரைத் தெருமைமோ ரதிற்க லக்கிக்
கொடுத்துவல விலாச்சூடு போட நன்றாம்
நாட்டிடுவேன் கல்விருட்டி நோயின் செய்கை
நற்கோல்வீங்கியுமிரத்த நீர்வி டுக்கும்



தாட்டிகமா மதற்கத்திக் காயி னோடு
தக்கபருத் திக்காயு மிடித்து மோரில்
ஊட்டியடி வயிற்றிற்கு டிடநோய் தீரும்
உரைக்கிறே னீரலடிப் பிணியைக் கேளே. (275)

## ஈரலடிநோய்.

கேளப்பா நெஞ்சிடுக்கிக் கொண்டு நெஞ்சும்
கெட்டிவயி றுந்தள்ளி நடக்குந் தீர
நாளப்பா விழுப்பைப்பிண் ணாக்க ரைத்து
நற்பசுவெண் ணெயுங்கூட்டித் தேசிக் காய்போல்
வாளப்பா கழுநீரிற் கலக்கி யூட்டி
வகையாக முன்காலிற் சூடு போட



கோளப்பா வின்றியிப் பிணியுந் தீருங்
கோதாங்கந் துகவலிப்பின் செய்கை பாரே. (276)

## கந்துகவலிப்பு. சுழல்வலிப்பு.

பார்க்கநாற் காலிழுத்து யிழுத்து நிற்கும்
பகரவதற் கெருக்கலம்பூ வவித்தெ டுத்து
சேர்க்கவே பசுவின்கோ மியத்தி லிட்டு
செப்பிரண்டு நாட்கொடுத் திருவி லாவில்
வர்க்கச்சூ டிட்டிடவே சாந்த மாகும்
இயம்புவேன் சுழல்வலிப்பின் செய்கை தானும்




கோர்க்கையந்த மாடதுவுஞ் சுழன்று சுற்றிக்
கொண்டிருக்குந் தீருதற்கு வகைசொல் வேனே. (277)

## உழவுவலிப்பு.

சொல்லவே பசுமஞ்சட் சாற்றி லப்பா
சுருக்காக வசம்பரைத்துக் காடிக் கஞ்சி
புல்லவே கலக்கியூட் டிடநன் றாகும்
புகலுழவு வலிப்புற்றா லதனின் செய்கை
வெல்லவே வயிறூது மிரைதின் னாது
விலகுதற்கு வசம்புப்புச் சுக்குக் காயம்
நல்லதோ ருள்ளியரைத் தேவெந் நீரில்
நலமுறவே கலக்கியிட் டுடம்பிற் பூசே. (278)

### எலும்புருக்கி. நிமிர்வாதம்.

பூசவே சாந்தமுறு மெலும்பு றுக்கிப்
பொருந்திரத்த மாகவிழுஞ் சாணத் தோடு
பேசவே வில்வயிலை வேர ரைத்துப்
பேணியே தயிரதனிற் கலக்கி யூட்டிப்
பாசமதாய் நெஞ்சிற்கு டிடநோய் தீரும்
பகருவேன் நிமிர்வாத நோயின் செய்கை
நேசநாற் கால்வீங்கும் நடக்கா தூன்றி
நேர்மையுற யுவர்மண்ணத் தண்ணீர் கூட்டே. (279)

### வாணிவடி நோய்.

கூட்டியே சதாசிவனைப் பூசை செய்து [பின்பு
குறித்தகத்தில் தியானித்துக் கொடுத்துப்
தாட்டிகமா யிடதுவிலாச் சூடு போடத்
தானகலும் வாணிவடி நோயின் செய்கை
நாட்டிடவே கடைவாயில் நீருஞ் சிந்தும்
நற்கண்ணுஞ் சிவந்திருக்குந் தீரு தற்கு
கோட்டியிலா தெள்ளுமுக்காற் படிய ரைத்துக்
குணமாகப் பசுவின்மோர்ப் படிய தொன்றே. (280)

### இதுவுமது.

ஒன்றதனிற் கலக்கிமுத் தினங்கொ டுத்து
உகந்திடது விலாவதனிற் சூடு போட
நன்றதாம் விலோசனநோய் லாந்தி லாந்தி
நடக்குமுலா வித்திரியும் வாயை மெல்லும்
அன்றதற்குத் தக்காளி யிலையி டித்து
அதனிற்சா றெடுத்துநல் லெண்ணெய் கூட்டி
வென்றநோய்க் கூட்டிடவே சாந்த மாகும்
விளம்பிடுவேன் தெக்கணநோய் செய்கை பாரே. (281)

### தெக்கணநோய். எருக்கல்நோய்.

பாரப்பா விரத்தமதாய் நீர்வி டுக்கும்
பண்டுநாற் காற்றளர்ந்து மாற்ற முண்டாம்
நேரப்பா வயறிரையும் நீங்கு தற்கு
நிகழ்களச்சிக் காயினிலை யிடித்தச் சாற்றை

சேரப்பா விளவெங்நீர் தனிற்க லக்கித்
தேறவிட் டிடதுவிலாச் சூடு போடச்
சீரப்பா வெருக்கல்நோ யதனின் செய்கை
செப்பவுடம் பெங்குமிகக் காந்த லுண்டே. (282)

### இதுவுமது.

உண்டாகித் துடிக்கும்வழு வழுப்ப தாகும்
உற்றநீர் சிவப்பாகு மெருகுஞ் சாணி
துண்டாய்க்கா லைத்தூக்குந் தீரு தற்கு
துய்யவுல குய்யக்கொண் டானிலையும் வேரும்
தண்டாத நீர்க்கடம்பின் றொலியுஞ் சேர்த்துத்
தானிடித்துத் தண்ணீரிற் போட்டுக் காய்ச்சி
முண்டாது கொடுத்துப்பின் முதுகிற் சூடு
மூட்டிடநன் றாகுமற் றொன்றைக் கேளே

### உழவில் மெலிந்த மாட்டுக்கு.

ஒன்றுழ விலேமெலிந்த மாட்டுக் கப்பா
ஒப்பற்ற காக்கையொன்றைப் பிடித்து வந்து
நன்றுதலைக் காற்குடலு முரோமம் போக்கி
நல்லதண்ணீர் விட்டவித் தென்பை நீக்கி
அன்றுகொடுத் திடத்தெளியு மெலிந்த மாட்டுக்
கன்பாக விந்தமுறை மேன்மை யுண்டாம்
என்றுவருஞ் சுழற்சிநோ யதனின் செய்கை
இயம்புவேன் சுழற்சியதாய் சுற்றும் பாரே. (284)

### சுழற்சி நோய்.

சுற்றிவரும் வெண்மையதாய்ச் சாணம் போடும்
தூய்யவாய் நீர்வடியுந் தீரு தற்கு
வெற்றியாம் பேய்ப்பீர்க்குக் காய்ந்த கூடு
விளம்புகொல் லங்கோவைக் கிழங்கி னோடு
முற்றியசீந் தித்தண்டுஞ் சேர்த்த ரைத்து
முன்திரட்டி யெலுமிச்சை யளவெ டுத்து
பற்றிவெங் நீரதனிற் கலக்கி யூட்டப்
பண்பாகு மற்றுமொரு நோயைக் கேளே. (285)

## நெஞ்சாவிகொண்ட மாட்டுக்கு.

கேளப்பா நெஞ்சாவி கொண்ட தானல்
கெடுதிமிக நாட்குநாள் மூச்சுண் டாகி
தாளப்பா மெலியுமது தெளிவ தற்குத்
தானுங்கேப் பையைத்திரித்து மாவ தாக்கி
வாளப்பா வினச்செம் மறியி னுட்டு
வளமான புழுக்கையுட னகத்திக் கீரை
கோளப்பா வின்றியொரு மண்பாண் டத்தில்
கூசாம விட்டுமண் சீலை செய்தே. (286)

## குச்சிகுதர்க்க நோய்.

செய்துகுப்பை மேட்டிலதைப் புதைத்து வைத்துத்
தேர்ந்துமுத் தினங்கழித் தெடுத்து நன்றாய்
நய்யவே பிசைந்துகொட்டான் மூன்ற தூட்ட
நலங்குச்சி குதர்க்கநோ யதனின் செய்கை
துய்யவயி றாதுமரை மேய்ச்சல் மேயுந்
துடுக்காக யெருகுமது தீரு தற்கு
பய்யவே வீழியிலைச் சாறெ டுத்து
பாங்கான காடியதிற் கலக்கி யூட்டே. (287)

## பாதவளைவு நோய். தடுமாற்ற நோய்.

ஊட்டநல மாம்பாத வளைவு நோயை
உரைக்கநாற் கால்வளையுந் தீரு தற்கு
தேட்டமாம் வசம்புள்ளி யரைத்துக் காடி
சேர்த்தூட்டச் சாந்தமுறு மின்ன மொன்று
நாட்டவே பேய்க்கரும்பின் சாற்றி னேடு
நவிலெலுமிச் சம்பழச்சா றதுவுங் கூட்டி
வாட்டமற வூட்டுதடு மாற்ற நோயை
வழுத்தவிழுந் தெழுகும்வாய் வடியும் நீரே. (288)

## உடல்வற்றி நோய்.

நீரதுடன் வயிறாது மெலியு மேனி
நேருலர்ந்து திரியுமது தீரு தற்கு
சாரவுத்தா மணியிலைச் சாறப்பு மோருந்
தான்கலந்து புகட்டியிரு விலாவிற் சூடு

நேரவிரு தலையாகச் சுடநன் றாகும்
நிகழ்த்துவே னுடல்வற்றி நோயின் செய்கை
தீரமா முடற்கருகி நாட்கு நாளாய்த்
தீவனந்தின் னாதுமெலி வாகும் பாரே. (289)

## குடல்வற்றி நோய்.

பார்க்கநாக் கும்வாயும் வீங்குந் தீரப்
பகரானை வணங்கிகிழங் கதைப்பால் விட்டு
கோர்க்கையா யரைத்துக்கா டியிற்க லக்கிக்
கொடுக்கநல மோரிலைத்தா மரைய ரைத்து
சேர்க்கையா யயிரைமீன் கழுவுந் தண்ணீர்
சேகரித் ததிற்கலக்கிக் கொடுக்கச் சாந்தம்
ஏர்க்கையாய்க் குடல்வற்றி நோயின் செய்கை
இருகாது மோயாம லாட்டுந் தானே. (290)

## சீதக்குடல்வற்றி நோய்.

ஆட்டுமதன் மேனிமுற்றுஞ் சாம்பற் பூத்தும்
அழுக்குநிறம் போலாகும் வாய்நீர் சிந்தும்
நாட்டுப்புற் றண்ணீரும் பெருகக் கொள்ளும்
நலமாக வேயாலங் காயும் பாலும்
ஊட்டுசீ தக்குடலும் வற்றி நோயை
உரைக்கநெடு மூச்சுண்டாந் தலைந டுங்கும்
பூட்டுங்கா லுதறுமது தீரு தற்கு
பொருந்துமிரு விலாவிற்சுட் டிடவும் நன்றே. (291)

## அகட்டுநோய். கூடக்குறிநோய்.

நன்றகட்டின் நோய்வயிறு மிக்க வீங்கும்
நாற்காலும் நடக்கும்வாய் சிந்தும் நீரு
அன்றதற்கே யெருக்கிலையின் சாறெ டுத்து
அங்கமெங்கும் பூசிரெட்டைச் சூடு சுட்டால்
வென்றநோய் போங்கூடக் குறிநோய் செய்கை
விருப்பமிலா தழித்தழித்து நீர்வி டுக்கும்
நின்றதுவு மேநறுக்குச் சாணம் போடும்
நேர்மையன்றி முக்குமது தீரு தற்கே. (292)

### பூதநோய்.

தீரவே சோற்றுக்கற் றாழைச் சாறுஞ்
சேர்த்தாவின் பாற்கலக்கிப் புகட்டிப் பின்பு SSSS
நேரவே யிருதட்டுஞ் சூடு போட
நீங்கிவிடும் பூதநோ யதனின் செய்கை
சேரவே நாக்குழுக் கதுவும் வீங்குந்
திரண்டுமுன்னங் காலதனி லிரத்தங் கட்டும்
சாரவே யாவரையின் பட்டை யோடு
தண்சிவந்தி நாயகத்தி னிலையுங் கூட்டே. (293)

### சித்தச்சிதைவுநோய்.

கூட்டியில வம்பட்டை சேர்த்தி டித்துக்
குறுணித்தண் ணீரதனிற் போட்டுக் காய்ச்சி

ஊட்டியே வாய்கழுவி மேலும் பூசி
உற்றவிலா விற்சூடு போட நன்றும்
நாட்டிடுவேன் சித்தசிதை வுற்ற நோயும்
நல்லசெவி நாறுங்கண் குழிய தாகும்
வாட்டியதற் கேவீழி யிலையின் சாறும்
வல்லபசு மோருமொன் றாய்க்க லந்தே. (294)

### புரவிநோய். நடுக்குநோய்.

கலந்தூட்டச் சாந்தமுறும் புரவி நோயைக்
கழறுவேன் வயிறிரையுந் தீரு தற்கு
நலமான கருங்கொடியி னிலைய ரைத்து
நாடிக்கா டியிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு

கலங்காமல் முதுகிற்சூ டிடநன் றாகும்
கண்டாக்கால் நடுக்குநோ யதனின் செய்கை
பலமாக நாலுகா லுடல்ந டுங்கும்
பகர்வாழைக் கிழங்காலம் விழுத ரைத்தே. (295)

### நாக்குமிடி நோய்.


அரைத்ததைமோ ரிற்கலக்கிக் கொடுத்துப் பின்பு
அடைவாக யிடதுவிலாச் சூடு போட
உரைத்தபிணி யகலுமினி நாக்குமிடி நோயும்
உறக்கடைவாய் பசலிக்கீ ரையைப்போ லாக

நுரைத்திருக்கு மதற்குக்கல் லுப்புக் காயம்
நுணுக்கியே நாக்கிலிட்டுத் தேய்க்கத் தீரும்
வரைத்தலங்க டோறுமிருந் தருளும் வேலன்
மலரடியை மறவாம லினிச்சொல் வேனே. (296)

## வாயைச் சுத்தஞ்செய்தல்.

சொல்வேனே வாய்சுத்தஞ் செய்வ தற்கு
சூட்சமப்பா மிளகுகருஞ் சீரகந் தான்
வல்லக்காட் டுச்சீர கம்வ கைக்கு
மாறுமற் பலமொன்று மக்ரா காரம்
நல்வசம்பும் வால்மிளகும் வகையொன் றுக்கு
நவிலுங்காற் பலமாங்கஸ் தூரி மஞ்சள்
புல்லவரைப் பலங்கூட்டிக் கறியி னுப்பு
புகலவே மூன்றரையாம் பலமுஞ் சேர்த்தே. (297)

## இதுவுமது.

சேர்த்துப்பை யன்றிமற் றதையி டித்துத்
திட்டமதாய்ப் பதக்குநீர் தன்னிற் போட்டு
வார்த்ததனி லுப்பதனைக் கொதிக்க வைத்து
வளமான சக்கையொரு பிடியெ டுத்து
ஆர்த்தமாட் டுக்கூட்டி யதனிற் கொஞ்சம்
அழுத்திநன்றாய் நாக்கதனிற் றேய்த்து விட்டு
பார்த்தந்த வெந்நீரைக் கொண்டு வாயைப்
பாங்காக வேகழுவ வேண்டும் பாரே. (298)

## மாடுவாங்கக்கூடா நாள்.

பாரக்கவிந்த முறைமாத மிரண்டு போதிப்
படிசெய்யக் கபம்பல்லி லுண்டாங் காரை
ஏர்க்கவாய் துர்க்கந்தம் வராணே மற்றும்
எப்பிணியும் வருகாமற் றடுக்கும் பாரு
கோர்க்கையதாய் மாடுவிற்க வாங்கு தற்கு
கூடாநா ளஸ்தம்ரே வதியு மூலம்
சேர்க்கையுத் திரம்பூரம் பூரட் டாதி
சித்திரைபூ ராடமா யிலியத் தோடே. (299)

### இதுவுமது.

ஓடுதிரு வாதிரையுங் கேட்டை நாளில்
உற்றமர பக்கமொன் றிரண்டு மூன்று
நாடுதிதி புதன்வெள்ளி வாரந் தன்னில்
நற்பசுக்கா ளையெருமை வாங்கக் கூடா
தேடுமிதில் விற்றவர்க்கும் வாங்கி னோர்க்கும்
சிறப்பில்லை விற்றவர்க்கு வீடுபா ழாம்
வாடுமே வாங்குவர்க்கு மாடுசா வாம்
வழுத்துவேன் மாடுகொண்டு கொடுக்கும் நாளே. (300)

### மாடு கொள்ளவுங் கொடுக்கவும் கூடிய நாள்.

நாளப்பா வசுபதிரோ கணியும் பூசம்
நன்றனுசந் திருவோணம் பூர்வ பக்கம்
வாளப்பா வைந்தேழு பத்துபதி மூன்று
வகையான திதிமகரஞ் சிங்கங் கன்னி
ஆளப்பா தனுசுலக் கினத்திற் றானும்
அதற்கெட்டா மிடஞ்சுத்த மாயி ருக்க
கோளப்பா வில்லாத திங்கட் செவ்வாய்
கூறுவியா ழஞ்சனியும் ஞாய றாமே. (301)

### கண்டங்கத்திரிக்காய் வேது.

ஆமப்பா விதில்மாடு கொண்டுவிற் றோர்க்
கதிகநிதி மனைமகவு வாழ்வுண் டாகும்
தாமப்பா கண்டங்கத் திரிக்காய் வேதைச்
சாற்றுவேன் கண்டங்கத் திரிக்கா யோடு
வாமப்பா முள்முருக்குக் காயுங் கூட்டி
வளமாகு மாமணக்கின் முத்துஞ் சேர்த்து
நாமப்பா விடித்துபெரும் பாத்தி ரத்தில்
நலமாகப் போட்டதனை யடுப்பி லேற்றே. (302)

### இதுவுமது.

ஏற்றியே தக்கதண் ணீரை விட்டு
இயல்பாக வேகவைத்துக் கொதிக்கும் போது
சாற்றியகோ துமைமாகேழ் வரகின் மாவும்
தகுங்கரிய பவளத்தின் பொடியி னோடு

தூற்றிகடு குப்பொடியும் போட்டுக் கிண்டிச்
சுகமாக வேகவைத் திறக்கிக் கொண்டு
ஊற்றிதயி ரதைக்கிண்டி யிளஞ் சூடாகப்
உடம்பெங்கும் வேதடிக்க நலமுண் டாமே. (303)

## ஆளையும் ஆகாசத்தையும் பார்க்கும் மாட்டுக்கு.

உண்டாகு மறுநாளில் வெந்நீர் காய்ச்சி
உரைத்தபடி யடித்துமூன் றுநாட் காலை
கொண்டாடிக் குளத்துநீ ரதனில் விட்டுக்
குளுப்பாட்டி யிரண்டுநா ழிகை நிறுத்த
அண்டாதெப் பிணியுமிவ் வாறு செய்ய
ஆளையா காயத்தைப் பார்த்த தானல்
தண்டாமற் செவ்வரிசி தனைத்து வைத்து
தக்கபசுப் பாற்கலக்கிக் கொடுக்க நன்றே. (304)

## இதுவுமது.

நன்றாகு மம்மன்சன் னதிக்கு முன்னே
நட்டிருக்கும் புங்கமரக் கொட்டை யோடு
ஒன்றாகும் மிளகுதக் காளிப் பூடும்
உறத்திருகு கள்ளிவடக் கோடும் வேரும்
அன்றாகும் வசம்புபுகை யிலையி னீரும்
அட்டியிலா தேகூட்டித் தட்டிக் கண்ணும்
குன்றாமற் காதுமூக் கிலும்பி ழிந்து
கூறுநாற் காலுமுழங் காலுஞ் சுட்டே.

## பாயும்மாட்டைப் பாயாமற்செய்ய.

சுட்டிடவே குருநாதன் பாதம் போற்றிச்
சுகமாகு மிடைவிழுந்த மாட்டுக் கப்பா
ஒட்டிவயி றும்பீச்சு மிரத்த மாக
உற்றக்காற் றடுமாறிக் கீழ்வி ழுந்து
முட்டியெழுந் திருக்குமது தீரு தற்கு
முன்கா்லிற் சூடிடவே சாந்த மாகும்
கிட்டிப்பாய் மாட்டைப்பா யாமற் செய்ய
கெடியானை வணங்கியதைப் பிடிங்கி வந்தே. (306)

## நோயணுகா வுபாயம்.

வந்ததின்பின் சிறுநீரை விட்டுக் காய்ச்சி
மாட்டுமுகந் தெரித்திடவே பாய்ந்தி டாது
பிந்தவோர் முறைபாற்கு ரண்டி வேரை
பிடிங்கிமடி வைத்திருக்கப் பாயா தப்பா
முந்தநோ யணுகாத வுபாயந் தன்னை
மொழிகுவேன் சிவனார்வேம் பின்கி ழங்கை
உந்தசெவ் வாய்க்கிழமைக் கொணர்ந்து கொட்டத்
துகந்துபொங்க லிட்டுமச் சாதத் தோடே. (307)

## இதுவுமது.

ஓடுகிழங் குங்கட்டுத் தறியும் வாசல்
உகந்ததனைப் புதைத்துவைக்க நோ யண்டாது
நாடுகூ ரைக்கொம்பை யேழு துண்டாய்
நறுக்கிப்பூ லாக்கொம்பு மழிஞ்சிக் கொம்பும்
தேடுமுன் னிடம்புதைக்கப் பிணிவ ராது
செப்புகாஞ் சிரங்கம்பு மெழுமுட் கம்பும்
பாடுமுவாக் கம்பழிஞ்சிக் கம்பு நான்கும்
பண்பாகப் பூசித்துப் புதைக்க நன்றே. (308)

## சகலபிணியும் அகல மருந்து.

நன்றுவி நாயகர்க்கஞ்சு பணங்கொ டுத்து
நவில்பூசை செய்யவெப் பிணியண் டாது
வென்றுவரும் பிணியெல்லா மகலு தற்கு
வெண்பூடு மிளகுவசம் பிஞ்சி சுக்கு
குன்றுச்சீ னுக்காரந் துருசு துத்தம்
கூறுமே மத்தங்கா யிவைக ளெல்லாம்
ஒன்றாக வெள்ளாட்டின் பித்தைக் கொண்டு
உகந்தரைத்து மிளகளவா யுண்டை செய்தே. (309)

## இதுவுமது.

செய்துலர்த்திப் பன்றிப்பித் ததில டைத்துத்
திட்டமொரு மண்டலஞ்சென் றெடுத்து வைத்து
எய்யவே வேண்டும்போ தோரு ருண்டை
எலுமிச்சம் பழச்சாற்றி லரைத்துக் கண்ணில்
உய்யவே யிட்டிடவெப் பிணியண் டாது
உலகோரிம் முறையெல்லா மறிய வேண்டி
அய்யனா முருகவே ளருளி னாலே
அரைந்தகடைக் காண்டமிகச் சுகமுண் டாமே. (310)

## மாட்டு வயித்தியம் கடைக் காண்டம்

முற்றிற்று.

## பச்சிலை மூலிகை சாப நிவர்த்தி.

இந்துக்கள் வசிக்கும் இந்தியாதேசமாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின்கண் காடு, மலை, வனம், வனாந்திரம், நந்தவனம், தோப்பு, பள்ளத்தாக்கு, குப்பைமேடு முதலிய இடங்களில் எண்ணு தற்கரிய பச்சிலை மூலிகைகள் பலவுள. அதில் சிவஸ்தலம்போல ஆயிரத்தெட்டுப் பச்சிலைகளும், விஷ்ணுதலம்போல நூற்றெட்டு மகா மூலிகைகளும் முக்கியமாக மூதோர்கள் மொழிந்துள்ளார்கள். இம் மாட்டு வயித்தியத்தில் சில பச்சிலைவர்க்கங்களும் மூலிகை வர்க்கங் களுங் கூறப்பெற்றிருக்கின்றன. அதில் எந்த பச்சிலை மூலிகையா யிருந்தாலும் உயிர் கொடுத்து சாப நிவர்த்தி செய்து சுண்டு விரலின் நகம் படாமல் இலையைக் கிள்ளவும் செடியைத் தோண்டி யெடுக்க வும் சர்வ சாபமும் நிவர்த்தியாகி உயிர்பெற்று அவிழ்த சித்தியை யுண்டாக்கும்.

## பூசா விதி.

எந்த மூலிகையா யிருந்தாலும் குறித்த காலத்தில் அதனரு கிற் சென்று அடுத்துள்ள அசுத்தங்களை நீக்கி சாணந் தெளித்துப் பூமியை சுத்தி செய்து கன்னிநூல் காப்புக்கட்டி (அதாவது முனை முறியாத விரலிமஞ்சளை நூலிற்கட்டி அரைத்த மஞ்சளை நூலிற் பூசி) சர்க்கரைப் பொங்கல் வைத்து தேங்காய் பழ நிவேதனஞ் செய்து தூபதீபங்காட்டி மந்திரத்தை நூற்றி யெட்டுரு செபித்து கைக் கொள்ள சித்தியாகும்.

## உயிர் கொடுக்கும் மந்திரம்.

ஓம் மூலி சர்வ மூலி உன்னுடைய உயிர்
உன்னுடலில் நிற்கச் சுவாஹா.

## சாப நிவர்த்தி மந்திரம்

| | |
|---|---|
| ஓம் சத்தி சாபம் | நசி மசி |
| சிவ சாபம் | நசி மசி |
| குரு சாபம் | நசி மசி |
| குக சாபம் | நசி மசி |
| சித்தர் சாபம் | நசி மசி |
| தேவதை சாபம் | நசி மசி |
| மூவர் சாபம் | நசி மசி |
| முனிவர் சாபம் | நசி மசி |
| சர்வ மூலிகை சாபம் | நசி மசி |

ஓம் காளி ஓம் பிடாரி ஓம் சிவயநம சுவாஹா.

இம்மந்திரத்தை குருமூலமாக தெரிந்து கொள்ளவும்.

விவேகாநந்தா பிரஸ், தளவாய் அக்ரஹாரம், மதுரை:-35.

VIVEKANANDA
PRESS
MADURA